

## 09 மத்திய கிழக்கின் புவி அரசியலும் புதிய கூட்டணியும்



## 05 தேர்தல் முறை மாற்றமும் முஸ்லிம் பிரதிநிதித்துவமும்



07 நேர்காணல்:
நஜா முஹம்மத்
பொதுச்செயலாளர், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

## அதிகாரத்திலுள்ளவர்களை மாற்றி விடுவதால் உண்மையான மாற்றத்தைக் கொண்டு வர முடியாது




# மீள்பார்வை

මීල්පාර්වෙ
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

Meelparvai Fortnightly
www.meelparvai.net

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

இதழ் - 359 • 30 டிசம்பர் 2016 வெள்ளிக்கிழமை • ரபீஉல் ஆகிர் 1438 • விலை 40.00



RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள அழையுங்கள் 0777 777 761
0777 674 941


# புதிய அரசியலமைப்பு: முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன?

இலங்கையின் மூன்றாவது அரசியலமைப்பு மார்ச் மாத மாகும் பொழுது நிறைவேற்றப் படும் என்ற எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்ற சூழலில் புதிய அரசியலமைப்பில் முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன, அதனை யார் முன்வைப்பது என்ற கேள்விகள் இன்னும் விடை காணப்படாதிருக்கின்றன.

உத்தேச அரசியலமைப்புக்கான மக்கள் அபிப்பிராயம் திரட்டப்பட்ட வேளையில் ஏராளமான முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் தன்னார்வத்துடன் முன்வந்து முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருந்தனர். ஆனாலும் இந்த சிவில் அமைப்புக்கள் அனைத்தும் சேர்ந்து முஸ்லிம் சமூகத்துக்கான ஒரு பொதுவான தீர்வுப் பொதியை முன்வைப்பதற்கு இது காலவரை தவறியுள்ளன.

அரசியலமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டுள்ள பாராளுமன்றமே புதிய அரசியலமைப்பு தொடர்பாக விவாதிக்கவிருக்கிறது. இந்த நிலையில் முஸ்லிம் சமூகத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் (பக்.14)



இம்முறை நத்தார் தினத்தை முன்னிட்டு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை நாடி பாரிசில் உள்ள இலங்கைத் தூதரகம் சர்வமத நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.



இலங்கையிலும் இன நல்லுறவுக்கென பாரிஸில் உள்ளதை விடப் பெரிய நத்தார் மரமொன்று நிறுவப்பட்டது.

## கொழும்பில் புதிய பெண் பாடசாலை ஒன்றை உருவாக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

*(மிப்றாஹ் முஸ்தபா)*

இந்த வருடம் சிங்கள மொழி மூலமாக கற்க விண்ணப்பித்த 400க்கும் அதிகமான பெண் மாணவிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் எத்தகைய கவனிப்புகளும் இல்லாமல் மூடும் நிலையிலிருந்த கொழும்பு 12 இலுள்ள



A.E. குணசிங்க வித்தியாலயத்தை சகல வசதிகளோடும் கூடிய முன்னணி பெண்கள் பாடசாலையாக உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கடந்த புதனன்று (28) A.E. குணசிங்க வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே (பக்.06)

## அரசியலமைப்பில் தமிழருக்கான தீர்வு இழுத்தடிப்பு



முப்பது வருடங்களுக்கு மேலாக தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு யாப்பு ரீதியான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற சர்வதேச அழுத்தங்களின் பின்னால் உருவாக்கப்படவிருக்கும் புதிய அரசியலமைப்பில் தமிழர்கள் இலவுகாத்த கிளியாகின்ற சந்தர்ப்பங்கள் மிகைத்து வருகின்றன.

தமிழர்கள் எதிர்கொண்ட இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி ஆட்சி முன்வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்வின் மூலமே கௌரவமான தீர்வொன்றை தமிழ்ச் சமூகம் பெற முடியுமென்று கடந்த காலம் நெடுகிலும் தமிழ்த்தரப்பினர் கூறி வந்ததோடு, முஸ்லிம்களும் இதற்கு (பக்.14)

## சுனாமி வீட்டுத் திட்டங்கள் இதுவரை முஸ்லிம்களுக்கு கிடைக்காததேன் ?



அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக வழங்கவென நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை வீட்டுத் திட்டம் இதுவரை பகிர்ந்தளிக்கப்படாது கடந்த 8 வருடங்களுக்கு மேலாக பாழடைந்து கிடக்கின்றது.

இதனை நீதிமன்ற தீர்ப்புக்கமைய சகல இன மக்களுக்கும் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட அரசாங்கம் அதிபர் தெரிவித்திருந்த போதிலும், இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இதனை பகிர்ந்தளிப்பதாக 3 மாதங்களுக்கு முன் அம்பாறை அரசாங்க அதிபர் (பக்.14)

## சிவில் சமூக செயற்பாடொன்றுக்கு முஸ்லிம் சமூகம் முன்வர வேண்டும்



இலங்கை மக்கள் கல்வியறிவில் சிறந்து விளங்குகிறார்கள். ஆனால் தர்க்க ரீதியாக சிந்திப்பதில் அவர்கள் பின்நிற்கிறார்கள். இலங்கைச் சமூகத்தை தர்க்க ரீதியாகவும் நவீனபாங்கிலும் சிந்திக்கக் கூடியவர்களாக மாற்றுகின்ற மறுமலர்ச்சி வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என சிரேஷ்ட ஊடகவியலாளரும் ராவய பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான விக்டர் ஐவன் தெரிவித்தார்.

ரிபாத் கலாச்சார நிலையம் கொழும்பு அல்ஹிதாயா மகாவித்தியாலயத்தில் ஏற்பாடு செய்திருந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதில் எமது பங்கு என்ற தொனிப் பொருளிலான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே (பக்.14)


Rusan Trade Centre
211-213 Second Cross Street, Colombo - 11.
Tel : +94 11 2389399 Fax : +94 11 2438596
E-mail : ilhamrtc@gmail.com


## ஜனாதிபதியின் பதவியேற்பை முன்னிட்டு நல்லிணக்கச் செயற்பாடுகள்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்கும் பொழுதில் இருந்து இன்றுவரை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற இனங்களுக்கான நல்லிணக்க செயற்பாடுகளை முடுக்கி விடுவதற்கான முயற்சிகள் அவரது இரண்டாவது பதவியேற்பு விழாவில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வகையில் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சு தேசிய ஒருங்கிணைப்பு வாரமொன்றை அடுத்த வருடத்திலிருந்து வருடாந்தம் பிரகடனம் செய்ய விடுத்த கோரிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதற்காக ஜனவரி 8 தொடக்கம் 14 வரையிலான காலப் பகுதியே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (பக்.14)




New City Hardware
உங்களுக்குத் தேவையான தரமான உபகரணங்களுக்கு நாடுங்கள்
58, Messeger Street, Colombo - 12
Tel: 011-43777931, 011-5830188, 011-4377934
Fax: 011-2334671 Email: newcity@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகமான முஸ்லிம்கள் வடக்கில் குடியேறியிருப்பர்?

2010 இல் முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற வந்திருந்த சூழலில் இருந்து தொடர்ச்சியாக நிலைமைகளை அவதானித்து வருகிறேன். அந்தப் பகுதிகளுக்குச் சென்று அவர்களுடைய வாழ்க்கை அனுபவங்களைக் கேட்டு வருகிறேன். கசப்பும் புளிப்பும் கண்ணீரும் வெம்மையும் நிறைந்த கதைகள் அவை.

2010 தொடக்கம் இதுவரை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவை சேனாதிராஜா போன்ற அரசியல் தலைவர்கள் இவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசி வந்திருக்கிறார்கள். தங்களுடைய நிலைமைகளை விளக்குவதற்காக இந்தத் தலைவர்களை இந்த மக்கள் அழைத்துத் தங்கள் வாழ்க்கையைக் காண்பித்துமிருக்கிறார்கள். இருந்தும் இன்னும் ஒரு முழுமையான ஒழுங்கு உருவாகவில்லை. அப்படி உருவாக்கப்பட்டிருக்குமாக இருந்தால், 1990 இல் இருந்த முஸ்லிம்களை விட இன்று அதிகமான முஸ்லிம்கள் வடக்கில் குடியேறியிருப்பர்.

யாழ்ப்பாண நகரம், சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் செறிவாக முஸ்லிம்கள் இருந்தனர். இப்போது யாழ்ப்பாணத்தில் மூன்றில் ஒரு பங்கினர் கூட இன்னும் மீளக்குடியேறவில்லை.ஒரு காலம் யாழ்ப்பாண நகரத்தின் துணை முதல்வராக முஸ்லிம்கள் இருந்ததுண்டு. இன்று அந்த நிலை இருக்கிறதா?

1990 களில் முஸ்லிம்கள் வெளியேற்றப்படாது விட்டால், அவர்கள் இன்று வடக்கில் ஒரு தீர்மானகரமான சக்தியாக வளர்ச்சியடைந்திருப்பர். அவர்களுடைய பிரதிநிதித்துவமும் அடையாளங்களும் வலுவடைந்திருக்கும். இன்று அவர்கள் உதிரிகளாக்கப்பட்டுள்ளனர். உதிரிகளாக்கப்படுவதன் அபாயம், அவர்களுடைய பலத்தைச் சிதைத்து, பின்னிலைப்பட்டவர்களாக அவர்களை மாற்றி விடும். இந்த அபாய நிலையை முஸ்லிம்களின் இன்றைய அரசியல் தலைமைகள் கூடப் புரிந்திருப்பதாகத் தெரியவில்லை.

**- சிவராசா கருணாகரன்**

# தைரியம்

நேதாஜி அவர்கள் முதல் முறையாக ஹிட்லரை சந்திக்க சென்ற பொது ஹிட்லருடைய ஆட்கள் நேதாஜியை ஒரு அறையில் உக்கார வைத்தனர். நேதாஜி அவர்கள் ஒரு புத்தகத்தை படிக்க ஆரம்பித்து விட்டார். ஹிட்லருடைய ஆட்கள் ஹிட்லருக்கு தெரிவிக்க சென்றனர்.

ஹிட்லர் போன்ற வேடமணிந்த பலர் வந்த போதும் நேதாஜி கண்டுகொள்ளாமல் படிப்பதை தொடர்ந்தார் . இதில் என்ன விஷயம் என்றால் பல சமயங்களில் ஹிட்லர் போன்ற வேடமணிந்தவர்களை கண்டு பல மனிதர்கள் தாங்கள் ஹிட்லரை சந்தித்தாக சொல்லியிருக்கிறார்கள். கடைசியில் ஹிட்லரே வந்து நேதாஜியின் தோளில் கை வைத்தவுடனே நேதாஜி அவர்கள் ''ஹிட்லர்'' என்றார் . ஹிட்லருக்கு ஒரே வியப்பு!

ஹிட்லர் நேதாஜியிடம் ''எப்படி நீங்கள் என்னை கண்டுபிடித்தீர்கள் இதற்கு முன் நீங்கள் என்னை சந்தித்தது கிடையாது'' என்று கேட்டார்.

நேதாஜி அவர்கள் ''இந்த உலகத்தில் சுபாஷ் சந்திர போசின் தோளில் கை வைக்க ஹிட்லரை தவிர வேறு யாருக்கும் தைரியம் கிடையாது'' என்றார்! (எத்தனைமுறை படித்தாலும் மறுபடியும் புடிக்கத்தூண்டுகிற ஒரு சரித்திர நிகழ்வு) **- நிப்ராஸ்**

சபாநாயகர் கரு ஜயசூரியவின் மகள் இந்திரா ஜயசூரிய அண்மையில் புற்று நோயால் இறந்து போனார்.

அவரது நினைவாக புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் நலன் பேணும் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு : 0112363211

**- முஜீப் இப்ராஹீம்**

# அந்தத் தீவு இலங்கை தீவாக இருந்தால்..

புயலில் இருந்து மூழு சமூகத்தையும்
காப்பாற்ற இருக்கும் விமானத்தை,
சைக்கிள் கூட ஓட்டத் தெரியாதவர்கள்
ஓட்ட முயற்சிக்கின்றனர்.
விமானம் ஓட்டத் தெரிந்த
பெரும்பாலானோர்
அதனை மௌனமாக இருந்து
அங்கீகரித்துக்கொண்டிருக்கின்றனர்.
இந்த மடத்தனத்தை எதிர்க்கும்
ஓரிரண்டு விமானிகள்
எழுப்பும் அபாய எச்சரிக்கை
யாரின் காதிலும் விழவில்லை
சைக்கிள் ஓட்டத் தெரியாதவர்கள் போடும்
கூச்சலில்..

அந்த தீவு இலங்கை தீவாக இருந்தால்
அந்த மக்கள் இலங்கை முஸ்லிம்களாக
இருந்தால்
விமானிகள் யார்?
சைக்கிள் கூட ஓட்டத் தெரியாமல்
விமானம்
ஓட்டும் பொறுப்பை சுமந்திருப்பவர்கள்
யார்?

சமூகம் புயலால் அழியப் போகிறது
சமூகம் அழிந்தால்
அதற்கு யார் அதிகம் பொறுப்பு?
மறுமையில் இறைவனிடம் பதில் சொல்ல
வேண்டியவர்கள் யார்?

**- இனாஸ் முஹம்மத்**

# சிறிதிலிருந்து பெரிது நோக்கி

10 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் இரண்டாவது மகள் Scooter பழக வேண்டுமென்ற தனது ஆசையைக் குறிப்பிட்டார். அப்போது Scooter வழங்கப்பட்டப் போது எவ்விதத் தயக்கமுமில்லாமல் சொல்லிக் கொடுத்த முறையில், ஒரே தடவையில் ஓட்டினார். அல்ஹம்துலில்லாஹ்.

பிள்ளைகளுக்கு தீராத ஆசைகள் இருக்கும் போது எதனையும் கூடிய சீக்கிரம் கற்றுக் கொள்வார்கள்.

பிள்ளைகள் ஒரு வருடத்திற்குள் அல்லது குறிப்பிட்ட தவணைக்குள் அடைய விரும்புகின்ற தங்களது தெரிவுகளை, விருப்புகளை குறித்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக புதிய உணவை பழகுவது, புதிய விளையாட்டை கற்றுக் கொள்வது, நேரத்தோடு எழும்புவது, குறிப்பிட்ட பாடமொன்றில் கூடிய அவதானத்தை செலுத்துவது, உண்மையைப் பேசுவது, நாளந்தம் 10 நிமிடங்கள் இறை அருள்களைச் சிந்திப்பது, ஒரு பக்கம் நாள்தோறும் புத்தகம் வாசிப்பது, தவறுகின்ற ஒரு தொழுகையைத் தொழுவது போன்றவற்றை உள்வாங்கிய உடல், அறிவு, ஆன்மா, கல்வி, பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றையோ அல்லது பலதையோ ஒரு பிள்ளை தான் அடைய ஆசைப்படுவதைத் தெரிவு செய்தல் வேண்டும்.

பிள்ளைகள் சிறிய இலக்குகள் நோக்கி நகர பழக்கப்படும் போது தங்களது வாழ்வின் பெரிய இலட்சியங்கள் பால் நகர அவர்கள் உற்சாகமடைவார்கள்.

**- எம்.ரிஸான் ஸெய்ன்**

எல்லா நாளும் கடலைத் தேடி
மனிதர்கள் சென்றார்கள்.
2004.12.26 அன்று மட்டும்
மனிதர்களைத் தேடி கடல்
வந்தது.

தனக்குப் பிரியமானவர்களை
தன்னோடு அழைத்துச்
சென்றது.
வந்து போன பின்தான்
சொன்னார்கள்,
அதன் பெயர் 'சுனாமி' என்று.

**- நாஸிக் மஜீத்**

# கண்ணீர் ஒரு வரம்

கண்ணீர்
மட்டும்
கண்ணீர் மட்டும்
இல்லையென்றால்
கோபம், இயலாமை,
வெறுப்பு போன்றவற்றை
மனதில் புதைத்து
வைராக்கியங்களாக
மாற்றி வன்முறையில்
முடித்திருப்போம்.
கண்ணீர் சிந்துவதன் மூலம்
எம் உள்ளத்து உணர்வுகள்,
வைராக்கியங்கள் வலுவிழந்து
போகின்றன.
கண்ணீர் இயலாமையின்
வெளிப்பாடல்ல...
அது ஒரு வரம்...

**பின்த் தாஜுதீன்**




இங்கு (உலகில்) பலர் இறக்கும்
வரைக்கும் சுவாசிக்கிறார்கள் என்று
சொல்லலாமே தவிர, இறக்கும்
வரைக்கும் வாழ்கிறார்கள் என்று
சொல்ல முடியாது.

**வைரமுத்து**

After O/L's
கண்டி மடவளையில் பெண்களுக்கான வதிவிட வசதியுடனான கற்கைநெறி
100 நாள் Full Time
ஆங்கிலம் மற்றும் வாழ்க்கைத்திறன்களை வளர்த்துக்கொள்ள விஷேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி
ENGLISH & Life Skills
5 Diploma சான்றிதழ்கள்
சர்வதேச ISO சான்றிதழ் மற்றும் அரச அங்கீகார (TVEC) சான்றிதழ் உட்பட
இக் கற்கைநெறியில் உள்ளடங்குபவை:
- English Language (Special)
- Information Technology (IT)
- Life Skills & Motivation
- தஜ்வீத், தர்பியா மற்றும் அஹ்லாக்
- Sinhala Language
- Art & Craft (சுயதொழில் பயிற்சி)
- Cookery
- Dress Making (தையல்)
- Human Development
- Counseling (உளவியல்)
- Psychology
- Beauty Culture (Natural)
- Bridal Dressing
- Social Media & Safety
சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவிக்கு UK சான்றிதழ் வழங்கப்படும்
இவற்றுடன் மேலும் சில பாடநெறிகள்
ஆரம்பம்: 10th Batch January 5th | 11th Batch January 15th
TOEIC fusion
மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது
EMERRAD Ladies Academy
36/3B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY
M: 0777 71 71 29 T: 081 20 50 600
Hotline : 0777 877 966

கண்டியில் 100% தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் ஆண் பெண் இருபாலாருக்குமான கற்கைநெறி
Diploma in
Kandy EMERRAD College ஆல் நடாத்தப்படுகிறது
Islamic Banking & Finance
ISO சான்றிதழ் வழங்கப்படும்
UGC & Foreign Ministry Approved UK Qualification
தற்போது தொழில் சந்தையில் அதிக வேலை வாய்ப்புக்கள் உள்ள பாடநெறி
Conducted By
- THE ONLY World Prize Winning & Internationally Certified Lecturer in SRI LANKA (ABE-UK / ABP-UK)
ஆரம்பம் 9th January
Duration: 2 Months Full Time
Monday to Thursday
Job Arrangement
Target Group:
- After A/L's
- After O/L's
- Job Seekers
TOEIC fusion
Golden College
548, Peradeniya Rd, Kandy
Hotline: 0777 71 71 29

# கஹட்டோவிட்டவில் நடைபெற்ற 2016 சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவிகளுக்கான வதிவிட தலைமைத்துவ பயிற்சி நெறி







கஹட்டோவிட்ட ஸுன்னத் வல் ஜமாஅத் யுவதிகள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட, 2016 க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை எழுதிய மாணவிகளுக்கான 05 நாள் வதிவிடத் தலைமைத்துவப் பயிற்சி நெறி 25/12/2016 வெற்றிகரமாக நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் பிரசித்திபெற்ற உலமாக்கள், உளவியலாளர்கள், ஆசிரியர்கள், வளவாளர்கள் விரிவுரைகளையும், பயிற்சிகளையும் வழங்கினர்.

பயிற்சி நெறியின் முடிவில் மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இப்பயிற்சி நெறியில் கஹட்டோவிட்ட, உடுகொட, ஓகொடபொல, மள்வானை, அட்டுளுகம போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. **- கஹட்டோவிட்ட ரிஹ்மி**

# பொய் சொல்லும் விக்னேஸ்வரன் : யாழ்ப்பாண முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு



வடமாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கில் 83% சதவிகிதமான முஸ்லிம்களை மீளக் குடியேற்றி விட்டதாகவும் யாழ்ப்பாணத்தில் ஏறக் குறைய 550 குடும்பங்களை வட மாகாண சபை குடியேற்றிவிட்டதாகவும் பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கியுள்ளார். யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றத்துக்கு விண்ணப்பித்த 3200 குடும்பங்களில் இதுவரை 137 குடும்பங்களுக்கே வீடமைப்பு உதவி வழங்கப்பட்டுள்ளது. அதிலும் 60 குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் இன்னும் நிலுவையில் உள்ளன. எனவே யாழ்ப்பாணத்தில் 4% தான் முஸ்லிம்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

**- ஜான் முஹம்மட்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க நிலைப்பாடு எடுக்க முடியாமல், முஸ்லிம் காங்கிரஸ் தடுமாறி நிற்பது ஏன்?

• சிராஜ் மஷ்ஹூர்

அரசியல் அமைப்பு விவகாரம் படிப்படியாக சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில், எல்லா சமூகங்களும் அவரவர் தரப்பு கோரிக்கைகளையும் நியாயங்களையும் முன்வைத்து வருகின்றனர். ஆனால், முஸ்லிம் மக்களுள் கணிசமானோரது வாக்குகளைப் பெற்றிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் இவ்விடயத்தில் இதுவரை பகிரங்கமான எந்த நிலைப் பாட்டையும் எடுக்காமல் தவிர்ந்து வருகிறது.

தெளிவற்ற இந்த நிலையானது முஸ்லிம் சமூகத்தின் படித்த, சிந்தித்து செயல்படுகின்ற தரப்பினர் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது. தனிப்பட்ட உரையாடல் களிலும், கலந்துரையாடல்களிலும், சமூக ஊடகங்களிலும் இதன் வெளிப்பாடுகளை பரவலாக உணர முடிகிறது. மு.கா ஆதரவாளர்கள் மத்தியிலும் இது தொடர்பான ஆதங்கம் உள்ள பலர் இருக்கின்றனர். அவர்களுள் சிலர் கட்சியினுள்ளே நெருக்கங்களைக் கொடுத்த வண்ணமே உள்ளனர். ஆனாலும், இதில் பெரிதாக எந்த முன்னேற்றமும் இல்லை.

சமீபத்தில் கொழும்பில் நடந்த புதிய அரசியலமைப்பு தொடர்பான சிவில் சமூகத்தினரின் கலந்துரை யாடல் ஒன்றில் மு.கா. முக்கியஸ்தர் ஒருவரும் கலந்து கொண்டு தனது கட்சி சார்பான கருத்துக்களை முன்வைத்திருந்தார். மு.கா [illegible]ந்தும் அதிகாரப் பகிர்வுக்கு



ஆதரவாக இருந்து வந்திருப்பதாக அதில் அவர் சொல்லியிருந்தார். முஸ்லிம்களைப் பாதிக்கும் குறிப்பான பிரச்சினைகள் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்காமல் நழுவல் போக்கையே கடைப்பிடித்தார்.

உண்மையில் அந்தக் கலந்துரை யாடலுக்கு கட்சித் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களே அழைக்கப் பட்டிருந்தார். ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர் கலந்து கொள்ளவில்லை. அவருக்குப் பதிலாக கட்சியில் இது பற்றிப் பேச பொருத்த மான ஒருவரே இந்நிகழ்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அவரால் கூட கட்சியின் நிலைப்பாடு களை தெளிவாக முன்வைக்க முடியாமல் போய் விட்டது.

நிலைப்பாடுகள் இல்லையா, அல்லது பகிரங்க நிலைப்பாடுகளை எடுக்க முடியாத இக்கட்டான நிலைக்குள் அக்கட்சி அகப்பட் டுள்ளதா என்பதுதான் பரவலாக எழுப்பப்படும் கேள்வியாக உள்ளது. சிவில் சமூக சக்திகளும், சிறிய முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இவ்விடயத்தில் பலவேறு நிலைப்பாடுகளை வெளியிட்டுள்ளன. ஆனால், மு.கா மட்டும் அடக்கி வாசிக்கிறது. இது ஏன் என்பதுதான் இப்போதுள்ள பெரிய பிரச்சினை.

பாராளுமன்றத்தினால் நியமிக்கப் பட்டுள்ள அரசியலமைப்பு தொடர் பான வழிகாட்டும் உயர் ஆலோச னைக் குழுவில் (Steering Committee) மு. கா. தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும், அ.இ.ம.கா. தலைவர் அமைச்சர் ரிஷாட் பதியுதீனும் அங்கத்தவர்களாக உள்ளனர். இதில் பேசப்படும் விடயங்களை அவர்கள் இருவரும் இதுவரை பகிரங்கமாக எங்கும் பேசவில்லை. கூட்டுப் பொறுப்பு என்று கூறி அவர்கள் இதை பற்றி எதுவும் கூறாவிடினும், தமக்கி ருக்கும் தலையாய பொறுப்பிலிருந்து அவர்கள் தப்பிக்க முடியாது. இது மிகப்பெரும் அமானிதமாகும். அத்துடன், இது வகைகூறுதலுடன் சம்பந்தப்பட்ட அத்துடன் ஒரு விடயமுமாகும்.

மதில் மேல் பூனை அரசியல் மனப்பாங்குதான் இந்தக் குழப்ப நிலைக்கு பிரதான காரணம். நாம் ஏன் இப்போது பேசி சிக்கலைத் தேடிக் கொள்ள வேண்டும். நிலமையைப் பார்த்து நடந்து கொள்வோம். அரசியல் சூழல் வளப்படும், திரும்பும் போக்கில் நாமும் மெதுவாக நனைந்து கொள்வோம் என்ற எண்ணம்தான் பிரச்சினைக்கான முதன்மைக் காரணி.

இந்த அணுகுமுறையை சாணக்கிய மாகக் காண்போரும், காட்டுவோரும் உள்ளனர்.

இவ்வாறான அணுகுமுறை சந்தர்ப்பவாத அரசியலில், பழக்கப் பட்டுப் போன ஒரு சூதாட்ட வடிவ மாகும். ஒருவகையான பழக்க தோஷமே இது. கட்சி அரசியலுக்குப் பயன்படுத்திய அதே உத்தியை, அரசியலமைப்பு விவகாரம் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சி னைகளில் 'பாவிக்க' முற்படுவது பெரும் ஆபத்திலேயே கொண்டு போய்ச் சேர்க்கும்.

அடுத்தது, மு.கா. எந்தளவுக்கு சமரசம் செய்யும், எதை விட்டுக் கொடுக்கும், எதை விட்டுக் கொடுக்காது என்பதில் ஒரு வகைக் குழப்ப நிலையே தொடர்ந்தும் காணப்படுகிறது. தாங்கள் எப்போதும் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக இருந்து வந்துள்ளதாக மு.கா. சொல்லி வருகிறது. அப்படிச் சொல்வது உண்மைதான். ஆனால், 18 ஆவது திருத்தத்திற்கும், திவிநெகும சட்ட மூலத்திற்கும் ஆதரவளித்து அதிகாரப் பகிர்வுக்கு எதிரான திசையில் அக்கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் இயங்கினார்கள் என்ற கசப்பான அனுபவம் நம் கண் முன்னே உள்ளது.

இவ்வாறு சமரசம் செய்யும் இடங்களில், மு.கா. எந்தளவுக்கு நேர்மையாக நடந்து கொள்ளும் என்பதில் ஒரு சந்தேகம் தொடர்ந்தும் நிலவுகிறது. சமூக -அரசியல் வட்டாரங்களில் இவர்களை நம்ப முடியாது என்ற கதைகள் மிகவும் பரவலாக உள்ளன.


After O/L & A/L
Diploma ➡ Adv. Diploma ➡ HND in
கண்டி மற்றும் திஹாரியில்
Get 5 Diplomas

Business Management
Grab Your Career!
• Business Objectives • Marketing
• Entrepreneurship • Production
• Accounting & Finance • HRM
UGC Approoved UK or Australian Qualification
பாடநெறி ஆரம்பம் 02nd Jan
Duration 18 Months

Real Access Program
• Diploma in Web Designing
• Diploma in Graphic Designing
• Diploma in Hardware Enineering
• Diploma in Computer Studies
• Diploma in Spoken English
Full Time
03 Months
Mon - Fri 8.30 a.m - 4.30 p.m
பாடநெறி ஆரம்பம் 09th Jan

Hot Line 0777 222 529

Diploma in Teacher Training Program
• DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
• DIPLOMA IN CHILD PSYCHOLOGY
• DIP. IN PRE SCHOOL TEACHER TRAINING
AMI
பாடநெறி ஆரம்பம் 07th JAN
Well qualified panel of Lecturers with American Qualification
3/6 Months
Full Time /Part Time

Diploma in AUTO CAD
Computer Aided Designing & Drafting
Saudi, Dubai, Qatar, Drawings will be given to the students for practice
03 Months
G.C.E. O/L, A/L ➡ Diploma AUTO CAD ➡ Advance Diploma AUTO CAD ➡ AUTO CAD 3D Special ➡ MEP
Certificate Level - 3
பாடநெறி ஆரம்பம் 09th Jan

Diploma in English + IT With Skills Training
English | Reading | Writing | | Listening | Speaking |
IT - MS-OFFICE HARDWARE COMP-ACCOUNTIN
Batch 60
02 Months
Start 09th January

Diploma in Hotel Management
• Front office
• Food & Beverages
• International Cookery
• House Keeping
• Pastry & Bakery
• Languages - French & English
Duration 4 Months
பாடநெறி ஆரம்பம் 02nd - Jan

அரச (TVEC) மற்றும் சர்வதேச (IPEES- UK) அங்கிகாரம் பெற்ற சான்றிதல்கள் வழங்கப்படும்
இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்களுக்கு சிறந்த சம்பளத்துடன் 100% தொழில் பெற்றுத்தரப்படும்.
ஆண் /பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி
- Hostel Available
GOLDEN COLLEGE
www.goldencollege.lk
No : 548, Peradeniya Road, Kandy. No : 126, Kandy Road, Thihariya.
081 2 205 544 | 0777 222 529
033 2 245 515 | 0777 222 528


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# நாயும் தோல் தேங்காயும்

இலங்கை முஸ்லிம் சமூகம் முஸ்லிம் தனியார் சட்டத்துடன் மல்லுக் கட்டிக்கொண்டிருக்கிறது. நாட்டிலே ஒரு சட்டம்தான் இருக்க வேண்டும் என இனவாதிகள் போடுகின்ற கூச்சல்களுக்கு மத்தியிலும் அரசு முஸ்லிம் தனியார் சட்டத்தில் கைவைப்பதில் இருந்து தவிர்ந்தே வந்திருக்கிறது.

பழைமை வாய்ந்த இந்தச் சட்டத்தில் மாற்றங்கள் வர வேண்டும் என்ற நியாயமான காரணத்தினால் வரவேண்டிய மாற்றங்களை உள்ளடக்கி, திருத்தமொன்றை முன்வைக்கும் பொறுப்பை 2009 ஆம் ஆண்டின் அரசு இலங்கை முஸ்லிம்களிடம் ஒப்படைத்தது. ஏழு வருடங்களாக இந்த ஒரு விடயத்தினை முஸ்லிம் சமூகம் பிசைந்து கொண்டிருக்கிறது.

முழு சமூகத்தின் உழைப்பையும் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்திலேயே செலவழிக்கின்ற அளவுக்கு அது மட்டும்தான் முஸ்லிம்களின் மொத்தப் பிரச்சினையுமல்ல. நாளும் பொழுதும் அதிகரித்து வருகின்ற முஸ்லிம்களுக்கெதிரான நடவடிக்கைகள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் தொடர்ச்சியான உழைப்பை வேண்டி நிற்கின்றன.

இனவாத அலைகள் அண்மைக் காலமாக முஸ்லிம் சமூகத்தை உலுக்கி எடுத்துவரும் நிலையில், முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் உடனுக்குடன் கூடி தீர்வுகளை ஆராய்ந்து வருவது தெரிகிறது. பெரும்பாலும் இந்தத் தீர்வுகள் அனைத்தும் அவ்வப்போதைய பிரச்சினைகளை கையாள்கின்ற விதமாகவே அமைகின்றன. நிரந்தரத் தீர்வை நோக்கியதான நகர்வுகளை சமூகத்துக்குள்ளால் காண முடியாதிருக்கின்றது.

இதுபோன்ற இனவாதப் பிரச்சினைகளால் தமிழர் சமூகம் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட நிலையில், அவர்கள் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வொன்றுக்காக தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இந்தப் பிரச்சினையால் இனிவரும் தமிழ்ச் சமூகம் பாதிக்கப்படக் கூடாது என்பதில் அவர்கள் குறியாக இருந்து தமிழ்ச் சமூகத்துக்கான நிரந்தரத் தீர்வொன்றையே நாடி நிற்கிறார்கள்.

இனவாத அடக்குமுறைகள் தொடரக்கூடாது என்பதற்காக இதற்கான தீர்வினை அரசியல் யாப்பிலே உள்ளடக்குவதற்காக அவர்கள் முயற்சித்து வருகிறார்கள். இதற்கென தமிழ்ச் சமூகம் ஒன்றிணைந்து தீர்வுத் திட்டங்களையும் முன்மொழிந்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைக்கான தீர்வுகளும் தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளும் அவர்களிடம் தெளிவாக இருக்கின்றன.

தமிழ்ச் சமூகம் முப்பது வருடத்துக்கு முன்னர் எதிர்கொண்டது போலொரு இனப்பிரச்சினையைத்தான் இப்பொழுது முஸ்லிம்கள் எதிர்கொள்கின்றனர். முஸ்லிம்கள் இனரீதியாக ஒடுக்கப்படுகிறார்கள். அச்சத்தில் உறைந்து போய் காலம் நகர்கிறது. எதிர்காலம் பற்றிய பீதி முஸ்லிம் சமூகத்தின் முகத்தில் அப்பியிருக்கிறது. பிரச்சினைகள் சிலவேளைகளில் கொழுந்து விட்டெரியும்போது முஸ்லிம் தலைமைகளும் ஆர்வலர்களும் ஒன்றுகூடி ஈரமான துணியைப் போட்டு நெருப்பை அடக்கி விடுகின்றனர். ஆனாலும் இன்னொரு பகுதியால் நெருப்பெடுக்கத் தொடங்குகிறது. இப்படி எரிகின்ற பக்கமெல்லாம் கவனத்தைக் குவிப்பதை விட நெருப்பு மூளாமல் இருக்கச் செய்வதற்கான நிரந்தரமான வழிவகைகளை அமைத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனமானது.

அதற்குரிய சந்தர்ப்பத்தினைத்தான் முஸ்லிம் சமூகம் இப்பொழுது கடந்து கொண்டிருக்கிறது. முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வினை அரசியல் யாப்பிலேயே உள்ளடக்கி, எதிர்காலச் சந்ததியினரையும் காத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இன்னும் திறந்தேயிருக்கிறது. தற்போது பேசப்படுகின்ற அரசியல் சீர்திருத்த முன்மொழிவுகளில் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வுகளை முஸ்லிம் சமூகம் உள்ளடக்க முடியும்.

இம்முறைய அரசியல் சீர்திருத்தம் நாட்டு மக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றே உருவாக்கப்படவிருப்பதாக அரசு சொல்லி வருகிறது. முஸ்லிம் சமூகமும் இதற்கான பரிந்துரைகளை முன்வைத்தது. ஆனாலும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கான ஏகோபித்த தீர்வுப் பொதியொன்று முஸ்லிம் சமூகத்தில் இருந்து முன்வைக்கப்படவில்லை. நாய்க்குக் கிடைத்த தோல் தேங்காய் போல தற்போதைய சூழலை எதிர்கொள்வதற்கான சகவாழ்வுத் திட்டங்கள், முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தங்கள் போன்றவற்றுடன் முஸ்லிம் சமூகம் இன்றும் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறது.

சமகால சூழலை எதிர்கொள்வது போல எதிர்காலப் பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டு, அதற்குரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள முஸ்லிம் சமூகம் முயற்சிக்க வேண்டும். அரசியல் யாப்புத் திருத்தம் வெகுவிரைவில் நிறைவேற்றப்படுவதற்கான சூழல் நிலவுகின்ற நிலையில், முழு முஸ்லிம் சமூகத்தினதும் கவனத்தை நிரந்தரத் தீர்வுகளின் பக்கம் திருப்ப வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விட்டு, ஆளையால் குறை கூறிக்கொண்டிருக்கும் பழக்கத்தை, அடுத்த தலைமுறைக்கு வாரிசுரிமையாகக் கொடுக்க முடியாது.

# நெருக்கடியில் இலங்கை பொருளாதாரம்

• அஜித் நிவாட் கப்ரால்

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த இரு வருடங்களில் நாட்டின் பொருளாதார மேம்பாடு பற்றிய அளவீட்டுச் சுட்டிகள் பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளன. பொருளாதார வளர்ச்சி வேகம், வட்டி வீதம், ரூபா நாணயப் பெறுமதி, வெளிநாட்டு முதலீடு, தேசிய முதலீடு, பண வீக்கம், பங்குச் சந்தை, சர்வதேச பொருளாதார தரப்படுத்தல், கடன் தொகை, திறைசேரி பிணை முறிகள் போன்ற சகல அம்சங்களிலும் தளம்பல்கள் ஏற்பட்டிருப்பதனை காண முடிகிறது. தரவுகளுக்கூடாகவும் இவ்வீழ்ச்சி நிலை யை சுட்டிக்காட்ட முடிகிறது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியின் கோரத் தன்மையை ஒவ்வொரு பிரிவுகளினூடாகவும் தெளிவுபடுத்த முடியும். பொருளாதார வளர்ச்சி வேகம் இங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டியுள்ளது. 2010 முதல் 2015 வரையில் பொருளாதார வளர்ச்சி வேகம் 7.3 வீதமாக காணப்பட்டது. ஒரு சில நடவடிக்கைகளால் இவ்வளர்ச்சி வேகம் குறைந்தது. அவ்வாறு குறைந்தபோதிலும் குறிப்பிட்ட 5 வருட காலத்தில் 6.8 வீதம் என்ற சாதாரண அளவிலேயே காணப்பட்டது. நடப்பு அரசாங்கத்தின் முதல் வருடத்தில் அதாவது, 2015 இல் இப்பெறுமதி 4.8 வீதமாகக் குறைந்தது. இவ்வருடத்தில் தற்பொழுது பொருளாதார வளர்ச்சி வேகம் 4 வீதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிலபோது இப்பெறுமதியும் குறைய வாய்ப்புள்ளது.

நாட்டில் காணப்படும் வெளிநாட்டு திரட்டல் நிதிகளின் மூலமே ஒரு நாட்டின் பலம் தீர்மானிக்கப்படுகிறது. 2014 இன் இறுதிப்பகுதியில் இந்நாட்டில் 8208 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளித் திரட்டு நிதியாகக் காணப்பட்டது. தற்போது அத்தொகை 5700 டொலர்களாகக் குறைவடைந்துள்ளது. இதன் மூலம் வெளித் திரட்டு நிதிகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலை தெளிவாகிறது.

அதுபோன்று ரூபாவின் பெறுமதியும் மற்றுமொரு முக்கியமான விடயமாகும். 2014 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் டொலரின் பெறுமதி 131 ரூபாய்களாகக் காணப்பட்டது. இன்று அப்பெறுமதி 151 ரூபாய்களாக உள்ளது. 22 மாத காலப்பகுதியில் ரூபாவின் பெறுமதி 20 ரூபாவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

2014 இன் இறுதிப்பகுதியில் நாட்டின் கடன் சுமை 7391 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மத்திய வங்கி அறிக்கையின் படி, செப்டம்பர் மாதத்தின் இறுதிப்பகுதியில் அக்கடன் தொகை 9402 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. அதிகரிப்புத் தொகை 2011 பில்லியன் ரூபாவாகும். 21 மாதங்களில் 2 ட்ரில்லியன் ரூபாவினால் நாட்டின் கடன் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதத்திலும் 100 பில்லியன் ரூபா கடன் கூடுதலாக பெறப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கக் காலப்பகுதியில் கடன் தொகை அதிகரிக்கும் பொழுது அதற்குச் சமாந்தரமாக புதிய விடயங்கள் காணப்பட்டன. துறைமுகம், பெருந்தெருக்கள், அனல் மின்சார நிலையங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் நிர்மாணிக்கப்பட்டன. ஆனாலும், தற்பொழுது ஒவ்வொரு மாதமும் அதிகரித்துள்ள 100 பில்லியன் ரூபா கடன் தொகையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள விடயங்கள் என்ன? இவ்வினாவினை நாட்டு மக்களே தொடுக்க வேண்டும். ஒன்றும் நிகழாமலேயே கடன் சுமை விண்ணை முட்டியுள்ளது.

2014 ஆம் ஆண்டின் இறுதியில் பங்குச் சந்தையில் 7300 அலகுகளின் (Unit) பெறுமதி காணப்பட்டது. இரண்டு வருட காலத்தில் பங்குச் சந்தையின் நிலை 6300 அலகுகளின் பெறுமதியாலும் இல்லை. இந்நாட்டில் 4.3 வீதமளவில் வேலைவாய்ப்பின்மை காணப்பட்டது. தற்பொழுது அத்தொகை 4.8 வீதமாக எகிறியுள்ளது. அது இன்னும் அதிகரித்து வருகிறது.

வெளிநாட்டு முதலீடுகள் என்பதும் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத விடயம். தற்பொழுது வெளிநாட்டு முதலீடுகளும் மிகப் பயங்கர நிலையில் உள்ளது. 2010 இல் 516 மில்லியன் டொலர்கள் வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வந்தது. 2011 இல் அப்பெறுமதி 1066 மில்லியன் டொலர்களாகக் காணப்பட்டது. 2012 இல் 1338 மில்லியன் டொலர்களாகவும், 2013 இல் 1391 மில்லியன் டொலர்களாகவும், 2014 இல் அத்தொகை 1616 மில்லியன் டொலர்களாகவும் எகிறிக் காணப்பட்டது. ஆனால் 2015 இல் வெளிநாட்டு முதலீடுகள் 970 மில்லியன் டொலர்களாக குறைந்துள்ளது.

இவ்வருடத்தின் முதல் 6 மாதங்களில் 336 மில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகள் மாத்திரமே இலங்கைக்கு கிடைத்துள்ளது. இது மத்திய வங்கியின் அறிக்கைத் தகவலாகும். அதன் படி பார்க்கும் போது 2010 களுக்கு முன்பிருந்த நிலைக்கே நாடு பயணித்துள்ளது. பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதிலுள்ள பலவீனங்களையே மேற்படி தகவல்கள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன.

நாடு மிகுந்த அழுத்தங்களுக்குட்பட்டுள்ளது. இதை நான் கூறுவதில்லை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் தரப்படுத்தும் நிறுவனங்களே இவ்விடயங்களைக் கூறுகின்றன. இலங்கையின் பொருளாதார தரம் 2014 இல் BB- என்னும் நேர்மறையான கட்டமைப்பில் காணப்பட்டது. தற்பொழுது இந்நிலை மாற்றடைந்து B+ வரையில் குறைந்து நேர்மறையான அமைப்பு எதிர்மறையான கட்டமைப்பொன்றாக மாறியுள்ளது.

இந்நாட்டின் நிலை வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு புரிவது போன்று இங்குள்ளவர்களுக்கும் விளங்குகிறது. நாம் இத்தரவுகளுக்கூடாக குறிப்பிடும் விடயங்களை முச்சக்கர வண்டிச் சாரதியொருவரிடம் கேட்டால் அவரது மொழியால் இந்நிலையை கூறுவார். அதனால் மக்கள் அறியாத விடயங்கள் இல்லையென்று நாங்கள் கூறுகிறோம்.



அரசாங்கத்திடம் உள்ள கொள்கைத் திட்டத்தின் படி, பருவினப் பொருளாதாரக் காரணிகளுக்கூடாக (Macro–Economics) ரூபாவின் பெறுமதியை பாதுகாத்துக் கொள்ளாமல் செயற்கையாக பாதுகாத்துக் கொள்ள முயற்சித்து வருகிறது. ரூபாவின் பெறுமதியை செயற்கையாக பாதுகாக்க முடியாது. நாட்டின் திரட்டு நிதி (சேகரிப்பு நிதி) அளவுடனேயே ரூபாவின் பெறுமதி கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

2014 இன் இறுதியில் இந்நாட்டின் திரட்டு நிதி 8208 மில்லியன் டொலர்களாகக் காணப்பட்டது. அதற்கு ஒப்பான வகையில் அடுத்த வருடத்தில் செலுத்துவதற்கிருந்த குறுகிய காலக் கடன் தொகை 6600 மில்லியன் டொலர்களாக இருந்தது. பணத்தின் பெறுமதி அசையாதிருப்பதனால் முதலீடு செய்வதற்குப் பொருத்தமான நாடாக அமையும். அதனால் வெளிநாட்டவர்கள் இங்கு அதிகளவில் முதலீடு செய்வார்கள். இவ்வாறு சிறந்த முறையில் காணப்பட்ட பொருளாதார நிலை 2016 அக்டோபர் 30 ஆம் திகதியாகும் பொழுது நிலைதடுமாற ஆரம்பித்துள்ளது.

**மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக இலங்கையின் கடன் சுமை**

| வருடம் | கடன் சுமை | வருடம் | கடன் சுமை |
|---|---|---|---|
| 1979 | 67.7 | 1998 | 90.8 |
| 1980 | 77.2 | 1999 | 95.1 |
| 1981 | 76.1 | 2000 | 96.9 |
| 1982 | 81.2 | 2001 | 103.3 |
| 1983 | 81.0 | 2002 | 105.6 |
| 1984 | 68.5 | 2003 | 102.3 |
| 1985 | 80.2 | 2004 | 102.3 |
| 1986 | 86.8 | 2005 | 90.6 |
| 1987 | 97.0 | 2006 | 97.9 |
| 1988 | 101.0 | 2007 | 85.0 |
| 1989 | 108.7 | 2008 | 81.4 |
| 1990 | 96.6 | 2009 | 86.2 |
| 1991 | 98.5 | 2010 | 71.6 |
| 1992 | 95.4 | 2011 | 71.1 |
| 1993 | 96.9 | 2012 | 68.7 |
| 1994 | 95.1 | 2013 | 70.8 |
| 1995 | 95.2 | 2014 | 70.7 |
| 1996 | 93.3 | 2015 | 76.0 |
| 1997 | 85.8 | 2016 (க) | 80.0 |

மத்திய வங்கி அறிக்கையின் படி, மேற்குறிப்பிட்ட திகதியாகும் பொழுது திரட்டு நிதியின் பெறுமதி 6054 மில்லியன் டொலர்கள் வரையில் குறைந்து காணப்பட்டது. அதுபோன்று அடுத்த வருடத்தில் செலுத்துவதற்குள்ள கடன் தொகை 7480 மில்லியன்களாக உள்ளது. கடனைச் செலுத்துவதற்கு தற்போதுள்ள திரட்டு நிதி போதுமானதாக இல்லை. மத்திய வங்கி அறிக்கையில் அவ்விடயம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

டொலர் ஒன்றிற்கு 81 சத டொலரை மாத்திரம் செலுத்துவதற்கே தற்போதுள்ள திரட்டு நிதி போதுமானதாக உள்ளது. இவ்வாறான நிலையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வருவார்களா? முதலீடு செய்வதற்கு கூடுதல் வட்டியை வேண்டுவார்கள். சகல கடன் பத்திரங்களுக்கும் திறைசேரி முறிகளுக்கும் ஒற்றை இலக்கத்திலேயே வட்டி வீதம் காணப்பட்டது. அதாவது 10 வீதத்திற்கும் குறைவான அளவிலாகும். இன்று அவ்வட்டி வீதம் இரட்டிப்பாகியுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பணத்தை இலங்கையிலிருந்து வெளியே கொண்டு செல்லும் நிலையும் உள்ளது. அப்போது இன்னும் இந்நாட்டின் திரட்டு நிதி குறைந்து செல்லும்.

இவ்வாறான நிலைகள் ஏற்படும்போது ராஜபக்ஷ ஆட்சியை குறை கூறுவதில் பிரயோசனமிருக்காது. நோயாளி மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளார். நோயாளிக்கு சிகிச்சையளித்த பழைய வைத்தியருக்கு குறை கூறுவதில் அர்த்தமில்லை. நோயாளியை குணப்படுத்துவதே புதிய வைத்தியரின் பொறுப்பாகும். சிகிச்சையளிக்கும் திறமையற்ற வைத்தியர்களே நோயாளிக்கு சிகிச்சையளிக்காமல் பழையவர்களை தேடிச் செல்வார்கள். இரண்டு வருடங்களாக செய்த சிகிச்சை பலனளிக்காததால் தற்பொழுதாவது அச்சிகிச்சை முறைகளை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

மொத்தத் தேசிய உற்பத்தியுடன் ஒப்பிட்டே கடன் சுமை கணிப்பிடப்படுகிறது. மொத்தத் தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் நாட்டின் கடன் சுமை 90.6 வீதமாகக் காணப்பட்டது. 2014 இறுதியாகும் பொழுது இத்தொகை 70.4 வீதமாகக் குறைவடைந்திருந்தது. அன்று ரூபாவின் பெறுமதியும் முறையாக முகாமை செய்யப்பட்டது.

மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக 70.4 வீதமாகக் காணப்பட்ட கடன் சுமை இன்று 76 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தவிர, தற்பொழுது நாட்டின் வளங்களையும் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளார்கள். தேசிய வளங்களை விற்காமல் நடவடிக்கைகளை மேற்கொள்வதே பொருளாதாரத்தை முகாமை செய்பவர்களது பொறுப்பாக உள்ளது. மக்களுக்குரிய வளங்களை விற்பனை செய்யும் பொழுதே (பக்.14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாட்சி அரசியல்

# தேர்தல் முறை மாற்றமும் முஸ்லிம் பிரதிநிதித்துவமும்



றவூப் ஸெய்ன்

சமகால இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள பிரதான அரசியல் நெருக்கடிகளுள் தேர்தல் முறை மாற்றமும் ஒன்றாகும். கடந்த ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து புதிய தேர்தல் முறையொன்றை அறிமுகம் செய்யும் முனைப்புகள் கூர்மையடைந்துள்ளன. புதிய எல்லை மீள் நிர்ணய அறிக்கை அரச வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ள நிலையில், தேர்தல் முறை மாற்றம் பற்றிய விவாதம் எமது சமூக அரங்கில் அமைதியடைந்துள்ளது.



ஒரு பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திருப்புவதற்கு இன்னொரு பிரச்சினை உருவாக்கப்படும் இன்றைய சூழலில், அரசியலமைப்பு மாற்றம் -குறிப்பாக தேர்தல் முறை மாற்றம்- பற்றிய விவாதங்கள் ஓய்ந்து போயுள்ளன. திடீரென வர்த்தமானியில் அறிவிக்கப்படும் எல்லை மீள்நிர்ணய அறிக்கையோ அதனடிப்படையிலான உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளோ நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்துவதற்கு முன்னால் தேர்தல் முறை மாற்றத்தின் பின்புலங்களையும் அதன் உள்நோக்கங்களையும் புரிந்துகொள்வது அவசியம்.

ஆங்கிலேயர் காலம் முதல் இன்று வரை இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பல்வேறு ஏற்ற இறக்கங்களைக் கண்டு வந்துள்ளது. நாட்டின் தேசிய கொள்கைகள் முஸ்லிம்களையும் பாதித்து வந்துள்ளது. தற்போது விதந்துரைக்கப்படும் தேர்தல் மறுசீரமைப்பு முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை சுமார் அரைப் பங்கிற்குக் குறைக்கலாம் என்ற நியாயமான அச்சம் முஸ்லிம் சமூகத்தில் நிலவுகின்றது.

தற்போதுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை முஸ்லிம்களின் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ற பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெறுவதற்கு தோதாக உள்ளது. எனினும், உத்தேச தேர்தல் முறை இதனை மாற்றியமைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறாயின், முஸ்லிம்களின் சனத்தொகைக்கு ஏற்ற பிரதிநிதித்துவ முறை இல்லாமல் போகும் ஆபத்தை நாம் எதிர்கொண்டுள்ளோம். இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சமூகப் பொறுப்புணர்வு குறித்த அதிருப்திகள், வாத விவாதங்களைத் தாண்டி, எமக்குக் கிடைக்க வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்தே இங்கு கவனம் கொள்ள வேண்டியுள்ளது.

எதிர்கால இளம் தலைமுறையினரின் நல்லாட்சி அரசியலுக்கான களம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே தேர்தல் முறை மாற்றம் குறித்த அக்கறையின் அடிப்படையாக இருக்க வேண்டும். கடந்த நூற்றாண்டின் நடுப் பகுதியில் பிரித்தானியர் அரசியல் திருத்தங்களைக் கொண்டு வந்து இலங்கையர்களிடம் அதிகாரத்தை மொத்தமாகவே கையளிக்கும் அரசியல் செயன்முறையில் ஈடுபட்டனர். இலங்கையர்கள் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்கும் வகையிலான அரசியல் திருத்தங்களை ஆங்கிலேயர்கள் படிப்படியாக நடைமுறைப்படுத்தினர்.

### கோல்புறூக் ஆணைக்குழு

1833 இல் பிரித்தானியர் பரிந்துரைத்த மாற்றம் அதிகாரக் கையளிப்பின் முதற் கட்டமாக அவ்வாண்டில் கோல்புறூக் ஆணைக்குழு இலங்கைக்கான சட்ட சபையொன்றை அறிமுகம் செய்தது. அதில் 9 உத்தியோகபூர்வ உறுப்பினர்களும் 6 உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களும் இடம்பெற்றனர். சிங்களவர், தமிழர், பரங்கியர் ஆகிய இனங்களுக்கு தலா ஒவ்வொரு உறுப்பினர் நியமிக்கப்பட்டனர். ஆனால், முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தொடக்கத்தில் சட்ட சபையில் எவரும் இடம்பெறவில்லை.

1889 இல் அதாவது, சட்ட சபை உருவாக்கப்பட்டு 56 ஆண்டுகளுக்குப் பின்னர் எம்.சி. அப்துர் ரஹ்மான் சட்ட சபையின் முதல் முஸ்லிம் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1897 வரை அவர் அப்பதவியில் நீடித்தார். முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆங்கிலேய அரசிடம் முன்வைத்துத் தீர்வு பெற வேண்டும் என்பதே இந்நியமனத்தின் நோக்கமாக இருந்தது. அவரைத் தொடர்ந்து அஹ்மத் லெப்பை முஹம்மத் ஷரீப், டபிள்யு.எம். அப்துர் ரஹ்மான், என்.எச்.எம். அப்துல் காதர் ஆகியோர் அச்சபையில் அங்கம் வகித்தனர்.

ஆங்கிலேயர்களின் அதிகாரப் பகிர்வில் இன்னொரு முக்கிய கட்டம் மெனிங் சீர்திருத்தமாகும். 1921 இல் மெனிங் சீர்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது. இது முஸ்லிம்களின் அபிலாஷைகளையோ வேண்டுகோள்களையோ முழுமையாக உள்வாங்கவில்லை. ஆயினும், உறுப்பினர்களின் எண்ணிக்கையை சற்று அதிகரிப்பதற்கு வழிகோலியது. முஸ்லிம் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்தது. நியமன உறுப்பினர்களாக எம்.எச். மாக்கான் மார்க்கார், என்.எச்.எம். அப்துல் காதர், ரீ.பி. ஜாயா ஆகியோர் இடம்பெற்றதோடு, பதவி வழியாக சொலிசிட்டர் ஜெனரல் எம்.ரீ. அக்பர் அவர்களும், இந்தியர்களுக்குச் சார்பாக ஆதம் அலி, முஹம்மத் சுல்தான் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

### டொனமூர் ஆணைக்குழு

1931 இல் டொனமூர் ஆணைக்குழு பரிந்துரைத்த சீர்திருத்தங்களின்படி, அரசாங்க சபை ஆட்சி முறை உருவாக்கப்பட்டது. சர்வஜன வாக்குரிமை மூலம் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் முறைமை இதன்போதே அறிமுகமானது. பிரதேச வாரியாகத் தெரிவுசெய்யப்பட்ட 50 உறுப்பினர்களையும் 8 நியமன உறுப்பினர்களையும் கொண்டதாக அரசாங்க சபை உருவாக்கப்பட்டது. முதல் அரசாங்க சபை 1931 - 1933 காலத்தை உள்ளடக்கியிருந்தது. அதன் முதலாவது முஸ்லிம் உறுப்பினராக சேர். முஹம்மத் மாக்கான் மாக்கார் மட்டக்களப்பு தெற்குத் தேர்தல் தொகுதியிலிருந்து தெரிவானார். நியமன உறுப்பினராக முஹம்மத் காலித் இடம்பெற்றார்.

1936 இல் இடம்பெற்ற அரசாங்க சபைக்கான தேர்தலில் எந்தவொரு முஸ்லிமும் தெரிவாகவில்லை. அதற்குரிய காரணம் முக்கியமானது. முஸ்லிம்களின் வாக்குகளை விட அதிகமான முஸ்லிம் அபேட்சகர்கள் தேர்தலில் இறங்கினர். விளைவாக எவரும் வெற்றி பெறவில்லை. ஆயினும், நியமன உறுப்பினர்களாக ஏ.ஆர்.ஏ. ராஸிக் அவர்களும், ரீ.பி. ஜாயா அவர்களும் இடம்பெற்றனர்.

### சோல்பரி ஆணைக்குழு

தொடர்ந்து சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைக்கு வந்தன. அதன்படி இரு சபைகள் உருவாக்கப்பட்டன. செனட் சபை, பிரதிநிதிகள் சபை. இதில் பிரதிநிதிகள் சபையே பாராளுமன்றம் போன்று செயல்பட்டது. மக்களால் சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் சபையே அது. தேர்தல் தொகுதிகள் 98 ஆக வரையறுக்கப்பட்டு, கட்சிகள் தமது வேட்பாளர்களை நியமித்து, குறிப்பிட்ட தேர்தல் தொகுதியில் கூடிய வாக்குகளைப் பெற்றவர் வெற்றி பெற்றவராகக் கருதப்பட்டார். சுயேச்சை வேட்பாளர்களும் களமிறங்க அது வாய்ப்பளித்தது. அவர்கள் வெற்றி பெற்றதன் பின்னர் ஏதேனும் கட்சியில் இணைந்துகொள்வர். பெருபாலும் ஆளும் கட்சியுடன் இணை[illegible].

அதேபோன்று தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட செனட் சபையும் நடைமுறையில் இருந்தது. இதனை மேல் சபை என்பர். ஆங்கிலேய ஆளுநரால் அறிஞர்கள், செல்வாக்குள்ள தலைவர்கள், கல்விமான்கள், நேரடி அரசியலில் ஈடுபடாத நிறுவனத் தலைவர்கள் போன்றோர் இச்சபைக்கு நியமிக்கப்பட்டனர். நாட்டை வழிநடாத்தத் தேவையான ஆலோசனைகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டன. இது பிரிட்டனின் வெஸ்ட் மினிஸ்டர் முறைமையை ஒத்தது.

பாராளுமன்றம் முன்வைக்கும் மசோதாக்கள் சட்டமாக்கப்படுவதற்கு முன்னர் அவை நாட்டு மக்களுக்கு நன்மை பயக்குமா, நாட்டின் அரசியலமைப்புத் திட்டத்திற்கு ஏற்றதாக உள்ளதா என்பதைப் பரிசீலித்து, குறைபாடுகளை பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கும் ஒரு அதிகாரமிக்க சபையாகவே செனட் சபை விளங்கியது. குறைந்தபட்சம், சட்டமாவதைத் தாமதிக்கும் அளவுக்கு பாராளுமன்றத்தை மீள்பரிசீலனை செய்யும்படி கோரும் அதிகாரம் அதற்கு இருந்தது.

| பாராளுமன்றத் தேர்தல் | மொத்த உறுப்பினர்கள் | முஸ்லிம் பிரதிநிதிகள் |
|---|---|---|
| 1947 | 101 | 06 |
| 1952 | 101 | 07 |
| 1956 | 101 | 08 |
| 1960 (மார்ச்) | 151 | 12 |
| 1960 (ஜூலை) | 151 | 15 |
| 1965 | 151 | 14 |
| 1970 | 151 | 10 |
| 1977 | 168 | 12 |
| 1989 | 225 | 21 |
| 1994 | 225 | 22 |
| 2000 | 225 | 23 |
| 2001 | 225 | 24 |
| 2004 | 225 | 28 |
| 2010 | 225 | 19 |
| 2015 | 225 | 21 |

சோல்பரி ஆணைக்குழுவின் சீர்திருத்தத்தின் பிரகாரம் முழுமையான தொகுதிவாரி முறை அமுலுக்கு வந்தது. ஆயினும் அது முஸ்லிம் சிறுபான்மையைப் பாதித்தது. ஏனெனில், இலங்கையில் இருந்த அப்போதைய சிங்கள, தமிழ் சமூகங்களைப் போன்று பிரதேச ரீதியாக செறிவான குடியிருப்புகளை முஸ்லிம்கள் கொண்டிருக்கவில்லை. மிகச் சிதறலான குடியிருப்புகளையே முஸ்லிம்கள் கொண்டிருந்ததனால் இம்முறை மூலம் தமக்கான பிரதிநிதியைத் தெரிவுசெய்யும் வாய்ப்பை அவர்கள் இழந்தனர்.

பிரதிநிதிகள் சபை 95 உறுப்பினர்களையும் 6 நியமன உறுப்பினர்களையும் மொத்தம் 101 உறுப்பினர்களை உள்ளடக்கியது. அதன் முதற் தேர்தல் 1947 இல் நடந்தது. 75,000 மக்களுக்கு 1 பிரதிநிதி என்ற வகையிலும், 1000 சதுர கி.மீ.க்கு 1 பிரதிநிதி என்ற வகையிலும் தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது.

எவ்வாறாயினும், நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று நாடு முழுவதும் சிதறி வாழ்ந்த முஸ்லிம்கள் இம்முறை மூலம் பிரதிநிதிகளைப் பெறுவது கடினமானதாகவே இருந்தது. முஸ்லிம்களைச் செறிவாகக் கொண்டிருந்த ஒரு சில பிரதேசங்களிலிருந்து மட்டுமே முஸ்லிம் பிரதிநிதி களைத் தெரிவுசெய்ய முடிந்தது. அந்த வகையில் கொழும்பு மத்தி, கல்முனை, மட்டக்களப்பு, பொத்துவில், மூதூர், புத்தளம் ஆகிய 6 தொகுதி களிலிருந்து மட்டுமே முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவாகினர்.

1959 இல் நியமிக்கப்பட்ட தேர்தல் நிர்ணய ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி, பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 101 இலிருந்து 151 ஆக அதிகரிக்கப்பட்டது. 145 தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. அவற்றிலிருந்து 145 உறுப்பினர்களும் 6 நியமன உறுப்பினர் என மொத்தமாக 151 உறுப்பினர்கள் நான்காவது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்தனர்.

மட்டக்களப்பு, மூதூர், பேருவளை, அக்குறணை, கொழும்பு மத்தி ஆகிய 5 தொகுதிகளும் பல்-அங்கத்தவர் தொகுதிகளாகவும் ஏனையவை தனி உறுப்பினர் தொகுதிகளாகவும் அறிவிக்கப்பட்டன. 151 உறுப்பினர்களில் 10 பேர் தேர்தல் மூலம் தெரிவாகியதோடு, 2 நியமன உறுப்பினர்களும் அங்கத்துவம் பெற்றனர்.

### 1972 அரசியலமைப்பும் தேர்தல் முறைமையும்

1972 இல் அறிமுகமான அரசியலமைப்பு சோல்பரி அரசியலமைப்பை மாற்றி, அதிலிருந்த சில ஷரத்துகளை நீக்கியதோடு, ஒரு குடியரசு அரசியலமைப்பு என அறிமுகப்படுத்தப்பட்டது, செனட் சபை நீக்கப்பட்டதோடு, பிரதிநிதிகள் சபை என அழைக்கப்பட்டு வந்த பாராளுமன்றத்தை தேசிய அமைப்புப் பேரவை என மாற்றியது. இலங்கை குடியரசாக அறிவிக்கப்பட்டது. அதில் இடம்பெற்ற மாற்றங்களுள் பின்வருவன முக்கியமானவை.

1. இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என மறைமுகமாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

2. முன்னைய அரசியலமைப்பில் இருந்த சிறுபான்மைக்கான காப்பீடுகளும் சிறுபான்மை நலன் சார்ந்த ஷரத்துகளும் நீக்கப்பட்டன. குறிப்பாக, 20 ஷரத்தின் உப பிரிவுகள் முற்றாக நீக்கப்பட்டன.

3. நாட்டின் இரண்டாவது சபையாக இருந்த மேல் சபை அல்லது செனட் சபை ஒழிக்கப்பட்டது.

4. பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியான தேசாதிபதி பதவி நீக்கப்பட்டு, குடியரசுக்கான ஆளுநர் நியமிக்கப்பட்டார்.

5. முதல் முறையாக இடதுசாரிகளின் கூட்டணி அரசாங்கமொன்று நிறுவப்பட்டது. அது ஐக்கிய இடதுசாரி அரசாங்கம் என அறிமுகமானது. கம்யூனிஸக் கட்சி, சோசலிஸக் கட்சி மற்றும் சிறிமாவின் சுதந்திரக் கட்சி இணைந்து கூட்டணி அரசாங்கம் உருவானது. ஆயினும், துரதிஷ்டவசமாக இடதுசாரிக் கூட்டணியானது இன மற்றும் மதச்சார்புள்ள, சிறுபான்மையினரைப் பாதிக்கக் கூடிய அரசியலமைப்பொன்றையே அறிமுகப்படுத்தியது.

அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக அப்போதிருந்தவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா என்பது குறிப்பிடத்தக்கது. நிதியமைச்சராக இருந்தவர் டொக்டர் என்.எம். பெரேரே. இவர் இலங்கையில் தோன்றிய முதலாவது இடது சாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர். இவர்கள் இருவரும் இடதுசாரிக் கொள்கையில் பெயர் போனவர்கள். இவர்கள் மட்டுமன்றி, இன்னும் பல இடதுசாரிகளும் அமைச்சரவையில் இருந்தனர்.

ஆனாலும் அவர்கள் கொண்டு வந்த அரசியல் அமைப்பு சிறுபான்மை இனங்களின் அபிலாஷைகளைத் தகர்த்தெறிந்தது. சிறிமா கூட பௌத்த, சிங்கள நலன்களில் தீவிர அக்கறை கொண்டவராகவே அரசியலமைப்பு மாற்றத்தில் கவனம் செலுத்தினார். 29 ஆம் ஷரத்து நீக்கப்பட்டமையும் செனட் சபை ஒழிக்கப்பட்டமையும் அவர் மேற்கொண்ட மிக முக்கிய மாற்றமாகும்.

1972 அரசியலமைப்பில் தொகுதிவாரித் தேர்தல் முறையில் மாற்றம் வரவில்லை. ஆனால், பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டது. 1976 இல் நியமிக்கப்பட்ட தேர்தல் நிர்ணய ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 168 ஆக அதிகரித்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கு மதத்தைக் கொண்டு வருவதும் மதத்திற்கு அரசியல் சாயம் பூசுவதும் மிகப் பாரதூரமான விடயங்களாகும்



கலாநிதி பின்னவல சங்கசுமண தேரர்
சிரேஷ்ட விரிவுரையாளர், சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

அண்மைக் காலமாக இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியில் உருவாகி வரும் பிரச்சினைகளின் முக்கியமான அடையாளங்களாக இன, மத ரீதியான கருத்துக்கள் கூர்மையடைந்து வருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

மத அடிப்படையில் இயங்கும் அமைப்புக்கள் தமது கொள்கைகள், வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதை விட்டும் விலகி, தனிநபர்களை முன்னிறுத்தி இயங்கும் அமைப்புக்களாக மாறியிருப்பது இவற்றில் முக்கியமான அடையாளங்களில் ஒன்றாகும்.

அமைப்புக்கள் தமது கொள்கைகள் நோக்கங்களை அடிப்படையாகக் கொள்ளாமல், தனிநபர்களின் ஆளுமைகளை அடிப்படையாக வைத்து இயங்க ஆரம்பிப்பதானது அவ் அமைப்புக்களது ஆயுட்காலத்தை குறுகிய ஆயுட்கால்த்தை உடைய அமைப்புக்களாகவே மாற்றும். எமது நாட்டில் முன்னர் தோன்றிய இன, மத ரீதியான அமைப்புக்கள் பலவற்றுக்கும் இந் நிலைமையே ஏற்பட்டது. இதுபோன்ற நிலைமைகளை தற்போது காணப்படும் பௌத்த பிக்குமாரின் அரசியல் ரீதியான அமைப்புக்களிலும் எம்மால் கண்டு கொள்ள முடியுமாக இருக்கின்றது.

பௌத்த அமைப்புக்கள் அனைத்திற்கும் ஒரு கருத்துக்கு வர முடியாமலிருந்தாலும் கூட தற்போது நாம் எதிர்கொள்ளும் சவால்களைக் காணும்போது அவ்வாறான ஒரு இடத்திற்கு நாம் வரவேண்டியது காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது.

சில தனிநபர்களது நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் நாளாந்தம் புதிய அமைப்புக்கள் உருவாகி வருகின்றன. இவர்கள் தமக்குத் தெரிந்த, தெரியாத அனைத்து விவகாரங்களிலும் மூக்கை நுழைத்து வருகின்றனர். இதன் காரணமாக நாட்டில் பல புதிய பிரச்சினைகள் உருவாகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. சிலபோது இவை எமது உண்மையான இன, மத, தேசிய பிரச்சினைகளாகக் காணப்பட்ட போதிலும் இவை சில தனிப்பட்டவர்களது நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் முன்னெடுக்கப்படுவதன் காரணமாக இந்தப் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் உரிய தீர்வுகள் காணப்படுவதில்லை. சிவனொளிபாத மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட சம்பவம் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

தற்போது நாட்டை பின்னோக்கி தள்ளும் சூசகமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை காணக் கூடியதாக உள்ளது. புதிய அரசியல் யாப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனை கள் நாட்டின் இறைமைக்கு பங்கம் விளைவிக்கக் கூடியவை எனப் பலராலும் கூறப்படுகின்றது. இவ்வாறான முதன்மையான பிரச்சினைகள் நாட்டில் ஏற்படும்போது நாட்டின் காவலர்களான பௌத்த பிக்குமார் முன்னின்று குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்பட வேண்டும்.

புதிது புதிதாக முளைக்கும் அமைப்புகளில் சிலர் மதத் தீவிரவாதம் தொடர்பாக பேசும் அதே நேரம், இன்னும் சிலர் யாப்பு சீர்திருத்தம் மூலம் நாட்டை பிளவுபடுத்துவது தொடர்பாகப் பேசுகின்றனர். அதே அமைப்பைச் சேர்ந்த இன்னொரு வர் இன்னுமொரு விடயம் தொடர்பாகப் பேசுகின்றார். இவ்வாறான பல கோஷங்கள் ஒரே நேரத்தில் தனிப்பட்ட வகையில் முன்வைக்கப்படுவதானது தீர்வுகளை எட்டுவதற்கான சிறந்த முறையல்ல.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறந்த நோக்கங்கள், கொள்கைளின் அடிப்படையில் இயங்கும் பௌத்த அமைப்புக்களினூடாக நாம் தீர்வுகளைக் காண்பதற்கு முற்பட வேண்டும்.

அண்மையில்தான் நீண்டகால கொடூர யுத்தமொன்றிலிருந்து மீண்ட ஒரு நாட்டில், இன-மத ஒற்றுமையான சமூகம், சூழல் காணப்படுவது கட்டாயமானதாகும். மனிதர்களுக்கிடையில் காணப்பட்ட முரண்பாட்டை இல்லாதொழிப்பதற்கு பேச்சுக்கள் மாத்திரமன்றி, சிறந்த செயற்பாடுகள் அவசியமானதாகும். நல்லாட்சி அரசில் இவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டுள்ளதா என்பதை நாம் குறிப்பாக நோக்க வேண்டும்.

இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கு பிரதான எதிரிகளாக தற்காலத்தில் பௌத்த பிக்குகளே பார்க்கப்படும் நிலைமை நாட்டில் உருவாகியுள்ளது. இதை உண்மைப்படுத்துவதற்கு சில அமைச்சர்களும் முயற்சித்து வருகின்றமையை எம்மால் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறான செயல்களை உற்றுநோக்கும்போது இவற்றை யார் செய்கின்றனர் என்பதை எம்மால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியுமாக உள்ளது.

இன, மத நல்லுறவை வலியுறுத்தும் அனைவரும் அவற்றிற்கு பங்கம் விளைவிக்கும் வகையிலான எந்த விதமான செயற்பாடுகளையும் முன்னெடுக்காமல் இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். ஒற்றுமையான சூழலொன்றை நாட்டில் ஏற்படுத்த முயற்சிக்கும் இத்தருணத்தில் அரசியல், மத ரீதியான தீவிரக் கருத்துக்களை முன்வைப்பதானது அதற்கு முட்டுக் கட்டைகளையே ஏற்படுத்தும்.

நீண்டகாலமாக இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்ததோடு தமக்குத் தேவையான முறையில் உணவுப் பொருட்களையும் நுகர்ந்து வந்தனர். பொருட்களை விற்பனை செய்யும்போது ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேறான உணவுப் பொருட்களை அவர்கள் விற்பனை செய்யவில்லை. ஆனாலும் இஸ்லாம் மார்க்கத்திற்கேற்ப 'ஹலால்' உணவுப் பொருட்கள் என்று தனியான பொருட்கள் விற்பனை ஆரம்பிக்கப்பட்டமை மற்றும் அவற்றிற்கு தனியான இலட்சினைகள் வழங்கப்பட்டமை நாட்டில் பல புதிய பிரச்சினை கள் உருவாவதற்கான காரணமாக இருந்ததை எம்மால் மறக்க முடியாமல் உள்ளது.

தற்போது பேசப்படும் முக்கியமான தலைப்புக்களில் ஒன்றுதான் வடகிழக்கு மாகாணங்களில் புதிதாக பௌத்த விகாரைகள் அமைக்கக் கூடாது என்ற பிரேரணையாகும். எமது வரலாற்றில் இவ்வாறானதொரு பிரேரணை எந்தவொரு கால கட்டத்திலும் முன்வைக்கப்பட்ட தில்லை. தற்போது நாட்டில் காணப் படும் சட்டத்தில் மதஸ்தாபனங்கள் நிர்மாணிப்பது தொடர்பான சட்டங்கள் தெளிவாக உள்ள நிலைமையில், இது போன்ற புதிதான பிரேரணைகள் நாட் டுக்கு தேவையற்ற விடயங்களாகும்.

நாட்டில் இவ்வாறான பிரச்சினைகள் ஏன் தோன்றுகின்றன என்பது தொடர்பாக முதலில் நாம் தேடிப் பார்க்க வேண்டும். சட்ட ஆட்சியின் வீழ்ச்சி, அனைவரதும் சமஉரிமைகள் தொடர்பாக எழுந்துள்ள சந்தேகங்கள், பரஸ்பர நம்பிக்கை யீனங்கள் போன்றன இவற்றிற்குப் பிரதான காரணங்களாகும். நாட்டில் சந்தேகமும் நம்பிக்கையீனமும் இனங்களுக்கிடையில் தோற்றம் பெறும் போது அவை அந்நாட்டின் பின்னடைவுக்குப் பிரதான காரணங்களாக அமைகின்றன என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

சட்டம், நிர்வாகம் மற்றும் அரச கொள்கை களின் மேலுள்ள மக்களின் நம்பிக்கையில் சந்தேகம் ஏற்படுவதானது அரசாங்கம் ஒன்றை சிறந்த முறையில் வழிநடாத்திச் செல்வதற்குப் பெரும் தடையான காரணிகளாக மாறும். சட்டம் அனைவருக்கும் சமமாக பிரயோகிக்கப்படுவது தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் ஏற்படும் சந்தேகத்தினால், நாட்டில் ஏற்படும் நிலைமை மிக மோசமான பின் விளைவுகளை கொண்டு வரக்கூடியன.

நாட்டில் உரிய முறையில் சட்டம் நடை முறைப்படுத்தப்படாததால் புராதன வரலாற்று முக்கியமான இடங்களைப் பாதுகாப்பதற்காக மற்றும் மக்களை மீளக் குடியமர்த்தல் தொடர்பான விடயங்களுக்கு பௌத்த பிக்குமார் முன்னின்று போராட வேண்டிய நிலைமைக்கு அவர்கள் உள்ளாகியுள்ளனர். சிறீபாதைக்கு அண்மைய பகுதியில் கட்டப்படவிருந்த புதிய ஹோட்டல் தொடர்பான பிரச்சினை எழுந்துததும் மேற்கூறிய நிலைமையினாலாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்ற கேள்வியையும் சந்தேகத்தையும் எமக்கு மத்தியில் ஏற்படுத்துகின்றது.

அரசியலுக்கு மதத்தைக் கொண்டு வருவதும் மதத்திற்கு அரசியல் சாயம் பூசுவதும் மிகப் பாரதூரமான விடயங்களாகும். பிரதேச அரசியல்வாதிகள் இன, மத தீவிரவாதத்தைப் பரப்பும் நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது. பொது மக்களின் உணர்வுகளைத் தூண்டி, இனவாத்தைத் தூண்டி, தமது வாக்கு வங்கிகளை நிரப்பும் நிலைமையை குறிப்பாக வடகிழக்கு அரசியல்வாதிகள் கையாளுகின்றனர்.

தேசிய அரசியலில் முன்னர் போல் முன்னுதா ரணமான அரசியல்வாதிகளைக் காணமுடியவில்லை. கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் குழுக்களாக அல்லது பிராந்தியங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் நிலைமைக்கு அரசியல்வாதிகள் மாறியுள்ளனர். தொகுதிவாரித் தேர்தல் முறைமை உருவாக்கப்பட்டால் இப்பிரச்சினை மேலும் கூர்மையடைவதற்கான வாய்ப்பே உள்ளது.

நாட்டின் சட்டவாட்சி காணப் படாமை இன, மத பிரச்சினைகள் கூர்மையடைவதற்குப் பிரதான காரணியாய் அமைந்துள்ளது.' பௌத்தர்களுக் குள்ள பிரதான சவால் நாம் எமக்குள்ளே காணப்படும் பிரச்சினைகளை மறந்து, எமக்கு வெளியிலிருந்து வரும் சவால்களை மாத்திரம் பேசி வருகின் றமையாகும்.

இலங்கை சிங்கள மக்கள் மத்தியில் 5 வீதமானவர்களே தமிழ் பேசக் கூடியவர்கள். ஆனால் முஸ்லிம் மக்களில் 28-40 வீதத்தினர் சிங்கள மொழித் திறன் உடையவர்கள். இது எமக்கு மத்தியில் காணப்படும் பிரச்சினைகளை இனம் காண்பதற்கு சிறந்ததொரு சான்றாகும்.

பௌத்த மதத்தை காப்பாற்றுவதற்காக பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளும் குழுக்களும் போடப்பட்டு வருகின்றன. இவையொன்றினா லும் உரிய தீர்வுகள் பெற்றுத் தரப்படுவதில்லை. மாறாக பிரித்தானியரினால் 1931 இல் உருவாக்கப்பட்ட விகாரைகள் மற்றும் தேவாயலங்கள் சட்ட மூலத்தில் தங்கியுள்ள நிலையையே எமக்கு ஏற்படுத்தியுள்ளது. இது வெளித்தரப்பினரால் எம்மீது மேற்கொள்ளப்படும் சூழ்ச்சி என்று கூறி நாம் தப்பித்துக் கொள்ள முடியாது.

வெளியிலிருந்து எம்மீது மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிகள் தொடர்பாக கவனமாக இருப்பதோடு எமக்குள்ளேயே காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு, அவற்றை தீர்க்கும் வகையிலான உரிய செயற்பாடுகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

தமிழில்: நுஸ்ரத் நிலாம்

## பகிரங்க நிலைப்பாடு... (03 ம் பக்கத் தொடர்)

கூட்டு ஆலோசனை முறையில் தீர்மானங்கள் எடுக்கப்படாமல், தனிமனித செல்வாக்கில் கட்சி இயங்குவதும் இதற்குப் பங்களிக்கிறது. உயர் பீடக் கூட்டங்களில் உப்புச் சப்பில்லாத விடயங்களே அலசப்படுகின்றன. அத்தோடு அனாவசியமான உள்முரண்பாடுகள், தனி மனிதர்களின் பின்னே அணி சேரும் பண்பு காரணமாகவும் ஒரு திசையை நோக்கி தீர்மானங்கள் எடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதற்கு காரணமாகி விடுகிறது.

இந்த இக்கட்டான நிலை, ஒரு சிறு குழுவே தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலைக்கு காட்சியைத் தள்ளியுள்ளது. அதுவும் தலைவருக்கு விசுவாசமான அணியின் செல்வாக்கு இதில் அதிகம். மாற்றுக் கருத்துக்களை பரிசீலிப்பதற்கான வாய்ப்புகளும் அக்கட்சியினுள் அருகிப் போயுள்ளன. தலைவர், செயலாளர், தவிசாளர் மத்தியில் இப்போது நிலவும் முறுகல் நிலை இதன் காரணமாகவே பகிரங்கமாக வெடித்துள்ளன.

மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியலமைப்பு விவகாரம் போன்ற விடயங்களில் கவனம் குறைந்து, உட்கட்சிப் பிரச்சினைக்குள் அந்தக் கட்சி அகப்பட்டுள்ளது. அவர்களது நேரமும், முயற்சியும், கவனமும் எதை நோக்கிக் குவிக்கப்படுகிறது என்பது வெளிப்படை உண்மை. இதற்கு மேலதிகமாக, நமது கவனத்தைத் திருப்பும் வேறு கவனக் கலைப்பான்கள் பல உள்ளன. திடீரென்று ஊதிப் பெருப்பிக்கப்படும் பேரினவாதிகள் இந்தக் கவனக் [illegible]



மறுபுறம், அரசாங்கத்தையோ தமிழ் அரசியல் தலைமைகளையோ நோவிக்கக் கூடாது என்ற 'தாராள மனசும்' இதற்கு காரணம். யார் எதிர்த்தாலும் ஆதரித்தாலும், தமது அரசியல் நிலைப்பாட்டை தைரியமாக முன்வைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் மு. கா. பாடம் படிக்க வேண்டும். பேச்சுவார்த்தை, வீட்டுக் கொடுப்பு என்பது இன்னொரு விடயம். ஆனால், நமக்கு எது தேவை என்பதை நாம்தான் கேட்க வேண்டும். அடக்கி வாசிக்கிறோம், பொருத்தமான தருணத்தில் பேசுவோம் என்று சும்மா கதை விடக் கூடாது.

ஆய்வு பூர்வமான அணுகுமுறை இல்லாமல் மேலெழுந்தவாரியாக பேசும் போக்கும் இதற்கு வழியமைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால்தான் நிலைத்த தொடர்பற்ற முஸ்லிம் மாகாண சபை, தென்கிழக்கு அலகு, முஸ்லிம் அதிகார அலகு என்ற கோஷங்கள் மேலெழுகின்றன. இவற்றின் சாதக, பாதகங்களை அலசி ஆராய்ந்த ஆவணங்கள் எதுவும் இல்லாமை இன்னொரு காரணம்.

தீர்மானங்கள் துல்லியமாக அமைய போதிய தகவலும், விஞ்ஞானபூர்வமான முறைமையும், ஆய்வறிவியலும் மிகவும் முக்கியம். மு.கா. போன்ற நிதிப் பலமுள்ள கட்சிகளுக்கு இதைச் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம். குறைந்தபட்சம் சமீபத்தில் நடத்திய இஸ்லாமிய தமிழிலக்கிய பொன்விழா போன்ற பெரு முயற்சியை, அரசியலமைப்பு விடயத்தில் அக்கட்சி செய்திருக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஏனைய முஸ்லிம் அரசியல் கட்சிகளையும், சிவில் சமூக சக்திகளையும், புத்திஜீவிகளையும் அழைத்து இது குறித்துக் கலந்துரையாட வேண்டிய தார்மீகப் பொறுப்பு மு.கா.வுக்கு மிக அதிகம். இது கட்சி அரசியலையும் தாண்டிய ஒரு பொதுப் பிரச்சினையாகும். ஆனால், அது இதுவரை நடைபெறவில்லை. இப்போதும் தலை முழுகிப் போகவில்லை. எஞ்சியிருக்கும் நாட்களில் மு.கா. சில முன்னெடுப்புகளைச் செய்து பொது இணக்கப்பாட்டைக் கண்டடையலாம். ஆகக் குறைந்தது ஒரு நிபுணர் குழுவையாவது அமைக்கலாம். ஆனால், இதில் மு.கா. வுக்கு அவ்வளவு ஆர்வம் இல்லை போலவே தெரிகிறது.

இந்த காரணிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, மு.கா.வை ஒட்டுமொத்தமாகப் பலவீனப்படுத்தியுள்ளது. அதன் காரணமாக அரசியலமைப்பு விவகாரத்தில் முஸ்லிம் அரசியல் தரப்பின் வகிபாகம் மிகவும் தூர்ந்து போயுள்ளது. அதன் குரலைக் கேட்க முடியாதுள்ளது. இதை நிமிர்த்தி எடுக்கும் கடமை மீண்டும் சிவில் சமூகத்தின் தலையில்தான் சுமத்தப்பட்டுள்ளது. இது நம்மைப் பின்னோக்கிச் தள்ளியுள்ளது. நாம் ஆபத்தின் விளிம்பில் இருக்கிறோம் என்பது மட்டும் உண்மை.

## கொழும்பில் புதிய... (01 ம் பக்கத் தொடர்)

மேற்கண்டவாறு பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் விளக்கமளித்தார். மேலும், மத்திய கொழும்பில் பெறுமதியான ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கும் இந்தப் பாடசாலையை மூடுவதற்கு கடந்த அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டது. 90 மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒரு பாடசாலை தேவையில்லை என்பதே கடந்த அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது.

எனவேதான் மாகாண சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்போடும் எமது சமூகத்திலுள்ள' தனவந்தர்களின் உதவியோடும் 10 மில்லியன் ரூபா செலவளித்து இப்பாடசாலையை சகல வசதிகளோடும் கட்டியெழுப்பியுள்ளோம். இந்த வருடம் கொழும்பிலுள்ள பாத்திமா மற்றும் கைரிய்யா பாடசாலைகளுக்கு விண்ணப்பித்த 400க்கும் அதிகமான முஸ்லிம் பெண் மாணவிகளின் விண்ணப்பங்கள் இடமின்மை நிராகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக சர்வதேசப் பாடசாலைகளில் தங்களுடைய பிள்ளைகளைச் சேர்த்து பின்னர் பல்வேறு அசௌகரியங்களுக்கு பெற்றோர்கள் முகம் கொடுக்கின்றனர்.

இன்று கொழும்பில் வாழக்கூடிய மக்களுடைய பிள்ளைகளுக்கு குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கு சிங்கள மொழி மூலமாகக் கற்பதற்கான பாடசாலைகள் அரிதாகவே காணப்படுகின்றன. எனவே இந்த வருடம் தங்களுடைய பெண் பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி கிடைக்காத பெற்றோர்கள் இப்பாடசாலை நிர்வாகத்தை உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

இப்பாடசாலையை நவீன வசதிகளுடன் கூடிய தலைசிறந்த ஆரம்பப் பாடசாலையாக உருவாக்குவதற்கு நாம் திட்டமிட்டிருக்கின்றோம். எனவே உங்களின் பிள்ளைகளை தரம் குறைந்த சர்வதேசப் பாடசாலைகளுக்கு சேர்க்காமல் இப்பாடசாலையில் சேர்த்து மத்திய கொழும்பில் புதிய பெண் பாடசாலை ஒன்றை உருவாக்கும் எமது முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள் என்றும் அவர் தெரிவித்தார். இவ்வு+டக சந்திப்பில் மேல் மாகாண சபை உறுப்பினர் றிசாட் நிஸாமுதீனும் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி



# அதிகாரத்திலுள்ளவர்களை மாற்றி விடுவதால் உண்மையான மாற்றத்தைக் கொண்டு வர முடியாது

**நஜா முஹம்மத் - பொதுச்செயலாளர், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி**

- **நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன?**

முஸ்லிம் சமூகத்திலும் பொதுவாக தேசிய அரசியலிலும் விழுமிய அடிப்படையிலான மக்கள் நலன் சார்ந்த, மக்களுக்கு விசுவாசமானதொரு அரசியல் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது.

காத்தான்குடி நகர சபை எல்லையை மையப்படுத்தி 2006ம் ஆண்டு முதலாவது தேர்தலில் பங்கேற்று ஒரு ஆசனத்தை பெற்றது. அதிலிருந்து தொடர்ந்தேர்ச்சியான நல்லாட்சி விழுமியங்களின் அடிப்படையில் ஒரு அரசியல் மாற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் நடைமுறையில் கொண்டு வருவதற்கான பல முன்மாதிரியான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது.

2013 ஆம் ஆண்டு தேசிய ரீதியாக விஸ்தரிக்கப்பட்டு இதே சிந்தனையில் செயற்பட்டுக் கொண்டிருந்த இரண்டு அரசியல் அமைப்புகள் ஒன்றிணைந்து நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது.

- **வடக்கு கிழக்கிற்கு ஒரு அரசியல் தலைமையும் வெளியேயுள்ளவர்களுக்கு பிறிதொரு தலைமை தேவை என்கின்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இவ்விடயம் எவ்வளவு தூரம் சாத்தியமாக அமைகிறது?**

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு தலைமை தேவை என்பதை விட அந்தந்த பிரதேசங்களின் அந்தந்த மக்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி அதற்கேற்ற வியூகங்களை வகுத்துச் செயற்படும் தலைமையே இன்று தேவைப்படுகின்றது. அரசியல் ரீதியில் முஸ்லிம்கள் ஒரு பிரதேசத்தை மையப்படுத்திய சமூகமாக இல்லை (Non Territorial Minority) தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் வரையறுக்கப்பட்ட பிரதேசமுள்ளது.

என்வே தேசிய ரீதியான தலைமை எல்லா இடத்திற்கும் ஒரே வகையில் செயற்படுவதற்கு பதிலாக அந்தந்த சூழ்நிலைகளுக்கேற்ற வியூகங்களை வகுத்துச் செயற்படுகின்றதொரு அரசியல் போக்கு தேவைப்படுகிறது. இவ்வணுகு முறையை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மேற்கொண்டு வருகிறது.

- **இது குறித்து உங்களது கட்சி எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளது?**

வடகிழக்கு இணைக்கப்படுவதால் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலம் அப்படியே இல்லாமல் செய்யப் படுகின்றது. அதனால் ஒரு பெரிய விலையை அவர்கள் கொடுக்க வேண்டியேற்படும். எனவே அந்த விலையை ஈடுசெய்யக் கூடிய மாற்றீடான ஏற்பாடுகள் (Alternative Arrange ments) எதுவும் இன்னும் காத்திரமான முறையில் எந்த தரப்பினராலும் முன்வைக்கப்படவில்லை.

வடகிழக்கு இணைந்ததாக அமைய வேண்டும் எனக் கூறுகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அதனை முன்வைக்கவில்லை. வடகிழக்கு இணைப்பில் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு நாம் இடையூறாக நிற்கப் போவதில்லை என்று கூறுகின்ற முஸ்லிம் காங்கிரஸும் அதற்கான மாற்றீட்டை இன்னும் முன்வைக்கவில்லை. கோட்பாட்டு ரீதியான மாதிரிகள் முன்வைக்கப்படுகின்றதே தவிர அவற்றின் நடைமுறை சார்ந்த மாற்றீடுகள், வடகிழக்கு இணைக்கப்படுவதால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சமூக பொருளாதார அரசியல் ரீதியாக இழக்கின்ற பல்வேறு விடயங்களை ஈடு செய்யக்கூடிய மாற்றீடுகள் (Viabale Alternative) ஆழமாக முன்வைக்கப்படவில்லை. அது தொடர்பில் கலந்தாலோசிக்கப்படவுமில்லை.

வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட நிலையில் அங்குள்ள தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இரண்டு மாகாண சபைகள் இருப்பது பெரிய பிரச்சினைக் குரிய விடயமல்ல. எனவே இம்முறை தொடர்ந்திருக்க வேண்டும் என்பதுவே எமது கருத்து.

- **தற்போதைய அரசியல் செயற்பணிகள் குறித்தும் எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் பற்றியும் சற்று குறிப்பிட முடியுமா?**

இம்முன்னணியின் செயற் பாடுகள் கடந்த 10 வருடங்களாக இடம்பெற்று வருகிறது. மக்களின் அரசியல் சிந்தனையில் கருத்து மாற்றத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்திச் செல்லும் ஒழுங்கில் அதிகாரத்தை பெற வேண்டியதொரு நிலை உள்ளதனால் நாம் அரசியல் அதிகாரத்தை பெறுதல் என்கின்ற விடயத்தை மாத்திரம் நோக்காக கொள்வதில்லை. இது வரையில் நடைபெற்ற சகல தேர்தல்களிலும் நாம் வித்தியாசமான வியூகங்களை வகுத்து, முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவத்தில் எதிர் மறையான தாக்கங்கள் ஏற்படாத வகையில் எமது நிலைப்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளோம். பல கட்சிகளுடன் உடன்படிக்கை செய்துள்ளோம்.

நாம் கடந்த காலப்பகுதியில் பெற்ற அனுபவங்களும் கொள்கைகளும் எமது சிந்தனைகளும் புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கான ஒரு ஆரம்ப கட்ட தளத்தை இன்று முஸ்லிம் சமூகத்தில் உருவாக்கி விட்டுள்ளது. தேசிய அரசியலில் ஒரு மாற்று சக்தியாக பெரும்பான்மை கட்சிகளால் பார்க்கப்படும் அளவுக்கு அது ஒரு அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

எம்மை எதிர்நோக்கியுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்களில் கிழக்கு மாகாணத்தை முக்கிய இலக்காக வைத்து செயற்பட்டு வருகிறோம்.

- **தேர்தல்களில் போட்டியிடும்போது முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் எதிர்பார்ப்புள்ளதா?**

தேர்தல்களில் நாம் யாருடன் கூட்டணி அமைப்பது, கூட்டணி அமைக்கக் கூடாது என்கின்ற விடயங்கள் ஏற்கனவே தீர்மானிக்கப்படவில்லை. கள சூழ்நிலைகளுக்கு ஏற்ப வியூகங்களை வகுத்துச் செயற்படுகிறோம். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 3 மாவட்டங்களில் தனித்து போட்டியிட்டோம். வட மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து அதனடிப்படையில் போட்டியிட்டு ஒரு வேட்பாளரை போனஸ் ஆசனத்தில் வென்றுள்ளோம். ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் அன்றிருந்த அரசியல் சூழலை மையப்படுத்தி எதிரணியை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஐ.தே.க.வுக்கு ஆதரவு தெரிவித்தோம். கடந்த பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் போட்டியிட்டோம்.

- **இலங்கை முஸ்லிம்கள் மத கலாசார விடயங்களில் ஒற்றுமைப்பட்டாலும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கும் அதற்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கு மிடையில் வேறுபாடுகள் உள்ளன. அதனடிப்படையில் இன்று அரசியலில்**

- **தற்போதைய அரசியல் சூழலில் பலமான முஸ்லிம் அரசியல் சக்தியின் தேவை உணரப்படுகிறது. முஸ்லிம் சமூகத்தில் நிலவும் பல அடிப்படையான பிரச்சினைகளை சிவில் சமூக அமைப்புக்களே தேசிய மட்டத்தின் கவனத்திற் கொண்டு வரும் நிலையில் அதற்கான சவாலை நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு ஏற்க முடியாதா?**

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் நகர்வுகள் குறித்து மக்களிடம் பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. எம்மிடம் உள்ள வளங்களை வைத்தே எம்முடைய முயற்சிகளை மேற்கொள்ள முடியும். இது தொடர்ந்தேர்ச்சியானதொரு செயற்பாட்டின் மூலம் அடைய வேண்டியதொரு மாற்றம். நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு தேசிய மட்டத்திலும் முஸ்லிம் சமூகத்திலும் இருக்கின்ற தற்போதைய நிலையை அடைவதற்கு 10 வருடங்கள் சென்றதென்றால் அடுத்த கட்டத்தை அடைய பெரியதொரு காலம் எடுக்காது என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பு.

இன்னும் ஓரிரு தேர்தலிற்குள் அல்லது 2020 தேர்தல் வருகின்றபோது ஒரு காத்திரமான பங்களிப்பை செய்யக்கூடிய அரசியல் சக்தியாக எமக்கு வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. நாம் சிவில் சமூகத்துடனும் நெருக்கமான உறவுகளை வைத்துள்ளோம். சிவில் சமூகமும் அரசியல் கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும். அரசியல் கட்சியால் முடியாதவற்றை சிவில் சமூகம் செய்ய வேண்டும். சிவில் சமூகத்தினால் முடியாதவற்றை கட்சிகள் செய்ய வேண்டும். ஒத்துழைத்துச் செல்லும் கலாசாரம்' விரிவடைய வேண்டும்.

சில வேளையில் சிவில் சமூகத்தின் செயற்பாடுகளைப் பார்த்து அரசியல் கட்சிகள் பயந்து விடுகின்றன. அல்லது நாம் செய்ய வேண்டிய விடயங்களை சிவில் சமூகம் செய்கிறது. அதனால் அவர்களிடத்தில் எமது செல்வாக்கு குறைந்து விடுகின்றது என்ற அச்சம் அவர்களிடத்தில் உள்ளது. எமது கட்சி அவ்வாறு பார்ப்பதில்லை. சிவில் சமூகத்தின் செயற்பாடுகளை அவர்களின் செயற்பாடாகப் பார்க்கிறோம். அதனை அவர்கள் தான் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கு உதவிகளையும் செய்கிறோம்.

- **வட கிழக்கு இணைப்பு குறித்த கதையாடல்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் [illegible]**

- **புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் தேவைகள் என்ன?**

புதிய அரசியலமைப்பு என்னும் விடயம் நீண்ட காலம் பேசப்படுகின்ற விடயம். சுதந்திரத்திரத்திற்கு பின்னர் பிரித்தானியரால் வரைந்து தரப்பட்ட சோல்பரி யாப்பு அமுலில் இருந்தது. அதன் பின் 1972 இல் முதலாம் குடியரசு யாப்பு கொண்டு வரப்பட்டது. பெரும்பான்மை சமூகத்துக்கான அதிகாரம் குவிக்கப்பட்டதாகவும் சிறுபான்மை மக்களை புறந்தள்ளக் கூடியதாகவும் இந்த யாப்பு உருவாக்கப்பட்டது. இதில் பாரிய அதிருப்திகள் காணப்பட்டன.

இதன் பின்னர் 1978 இல் ஜே.ஆர். ஜயவர்தன அதிகாரத்தை தனிநபர் ஒருவரிடம் குவிக்கின்ற ஒரு யாப்பை உருவாக்கினார். அதற்கெதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. இது சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும் யாப்பாக வர்ணிக்கப்பட்டது. குறிப்பாக 18 ஆம் திருத்தத்திற்கூடாக மஹிந்த ராஜபக்ஷ இன்னும் பல அதிகாரங்களை ஏற்கனவே இருந்த சுயாதீன கமிஷன்களின் அதிகாரங்களையும் இல்லாமல் செய்து சர்வாதிகாரத்தை இன்னும் பலப்படுத்தும் வகையில் திருத்தத்தை கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து யாப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு சகல கட்சிகளும் வந்தன. இதனடிப்படையில் 2015 தேர்தலில் பொதுக் கூட்டணி முன்வைத்த விஞ்ஞாபனத்தில் அரசியலமைப்பு மாற்றத்திற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தது. இந்நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மக்களின் சுதந்திரங்களை பாதுகாப்பதற்கும் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்தக்கூடிய தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கக்கூடிய அரசியலமைப்பு நாட்டிற்கு தேவைப்படுகிறது.

அதேநேரம் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிறைவேற்றப்படுவதற்கும் சட்டத்தின் ஆட்சி நாட்டிற்கு தேவைப்படுகிறது. இவ்வாறான மாற்றங்களுக்காக வேண்டியே மக்கள் ஆணையும் வழங்கப்பட்டிருக்கிறது. அரசியலமைப்பு மாற்றத்தை கொண்டு வருவது அரசாங்கத்தின் அடிப்படை தேவையாக உள்ளது.

- **புதியதொரு அரசியலமைப்பு வடிவமைக்கப்படுகிறதா? அல்லது இருக்கும் யாப்பில் சீர்திருத்தங்கள் ஏதும் கொண்டுவரப்படவுள்ளதா?**

இருக்கின்ற அரசியலமைப்பை சீர்திருத்தம் செய்வதன் மூலம் எதிர்பார்க்கின்ற மாற்றங்களை கொண்டு வர முடியாது. அவ்வாறானதொரு முயற்சியையே இவ்வர்சாங்கம் 100 நாள் வேலைத் திட்டத்தில் 19 ஆம் திருத்தத்தின் மூலம் முன்வைத்தது. அதில் சர்வஜன வாக்கெடுப்பில்லாமல் பல விடயங்களை நிறைவேற்ற முடியாது என

(பக்.14





அபூ ஷாமில்

## இரண்டு நபிகளின் பிறந்த நாள்

பூமி உள்ளிட்ட முழுப் பிரபஞ்சத்தையும் அல்லாஹ்தஆலா படைத்தான். அதிலே மனிதன் வாழக் கூடிய இடமாக பூமியைப் படைத்தான். அந்தப் பூமியை நிர்வகிப்பதற்கான வழிகாட்டல்களை காலத்துக் காலம் தனது தூதர்களுக்கூடாக அல்லாஹ்தஆலா அனுப்பி வைத்தான். அந்தத் தூதர்கள் வரிசையில் இறுதியானவராக முஹம்மத் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்தஆலா தெரிவுசெய்தான்.

நபிகளார் அனுப்பப்படுவதற்கு 500 வருடங்களுக்கு முன்னர் இயேசு நாதர் என அழைக்கப்படுகின்ற ஈஸா (அலை) கடைசிக்கு முந்திய அல்லாஹ்வின் தூதராக உலகுக்கு அனுப்பப்பட்டார்கள். உலகத்தை வழிநடத்த அடுத்தடுத்து அனுப்பப்பட்ட இரண்டு நபிமார்களுடைய பிறந்த தினத்தை இலங்கை இந்த மாதத்திலே அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறது.

மனிதனுக்கு வழிகாட்டுகின்ற இஸ்லாம் என்கின்ற கட்டடம் காலத்துக்குக் காலம் வழிகாட்டல்களுடன் அனுப்பப்பட்ட அதனுடைய தூதர்களாலேயே கட்டப்பட்டது. இறுதிக் கல்லாக முஹம்மத் (ஸல்) அவர்கள் வந்து கட்டடத்தைப் பூரணப் படுத்தினார்கள். இனி இதுதான் இறுதிவரைக்கும் உலகத் தாருக்கான மார்க்கம் எனப் பிரகடனப்படுத்தினார்கள். இன்றுடன் இந்த மார்க்கத்தைப் பூரணமாக்கி விட்டேன் என்று அல்லாஹ்தஆலாவும் முஹம்மத் நபியவர்களின் அந்திம காலத்தில் அறிவித்துவிட்டான்.

இனி உலகம் முடியும் வரைக்கும் வாழ்கின்ற மக்களுக்கான வழிகாட்டல் இதுதான். இந்த வழிகாட்டலின்படி உலகத்தாரை வழிகாட்டுகின்ற பொறுப்பு, இந்த வழிகாட்டலை அறிந்து வைத்திருக்கின்ற, இந்த வழிகாட்டலை கொண்டுவந்தவரை ஏற்றுக் கொள்கின்ற அனைவரதும் பணியாகும். அதற்காக அனைத்து சாதனங்களையும் பொழுதுகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அந்தப் பணியைச் செய்கின்றவர்களின் திறமையின்பாற்பட்டது. இந்த வகையில் தான் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்த இந்த மாதம், அவர் கொண்டுவந்த வழிகாட்டலை வேண்டி நிற்கின்ற இந்த நாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது.

நபிகளார் இந்த வழிகாட்டலை பூரணப்படுத்துவதற்கு முன்னர் வந்த யேசுநாதரின் பிறந்த தினம் இந்த நாட்டில் கடந்த வாரம் அமோகமாக அனுஷ்டிக்கப்பட்டது. இது ஒரு கிறிஸ்தவ நாடா என்று எண்ணும் அளவுக்கு இயேசு கிறிஸ்துவின் பிறப்பை முழு நாடுமே கொண்டாடியது. அரச நிறுவனங்கள், பொது இடங்கள் என எல்லா இடங்களிலும் வித்தியாசமான வடிவங்களில் இயேசு நாதருடைய வழிகாட்டல்கள் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

உலக மக்களை துன்பங்களில் இருந்து மீட்க வந்த மீட்பர் எனவும், அனைத்து உயிரினங்களிடமும் அன்பு காட்டிய அன்பாளர் எனவும் அவரை மக்களுடைய மனதில் பதிய வைப்பதற்கான பல்வேறு முயற்சிகள் இந்தக் காலப்பிரிவில் எடுக்கப்பட்டன. முழு இலங்கையருக்கும் பொதுவான தேவதூதராக அவர் அடையாளப்படுத்தப்பட்டார்; கிறிஸ்தவ மத போதகராக அல்ல.

இந்தப் பிரசாரங்களுக்கு மத்தியில் இலங்கையில் நடந்த இறுதித் தூதரின் பிறந்த தின நிகழ்வுகள் அவரை ஒரு காலத்துக்குப் பொருத்தமற்ற பிற்போக்கான மனிதராகக் காட்டுவதாகவே அமைந்திருந்தன. ரஸூலுல்லாவின் இரத்தத்தைக் குடித்து நபித்தோழர் ஒருவர் பாவமீட்சி பெற்றார் என்று ஒரு கதீப் குத்பாவிலே முழங்கினார். காறித் துப்பிய எச்சிலையும், வுழு செய்து விட்டு எஞ்சிய தண்ணீரையும் உடம்பிலே பூசி நபித்தோழர்கள் தம்மை புனிதப்படுத்திக் கொண்டார்கள் என்று மேடைகளிலே நபிகளாரைப் பற்றி உலகத்தாருக்கு உலமாக்கள் எடுத்தோதிக் கொண்டிருக்கிறார்கள். மொத்தத்தில் அறிவுலகுக்குப் பொருந்தாத ஒரு வழிகாட்டியாக நபிகளாரைக் காட்டுவதற்கு நபிகள் பிறந்த தினத்தினை நம்மவர்களே கச்சிதமாகப் பயன்படுத்துகிறார்கள்.

இஸ்லாம் தவறாகப் புரியப்பட்ட ஒரு மார்க்கம் என தேசிய மீலாத் விழாவிலே பிரதமர் கூறியது நம்மவர்களது பிரச்சாரங்களை முன்வைத்துத் தானோ? அப்படியானால் அந்தத் தவறான புரிதலை நம்மவர்களிடம் இருந்தும் நாட்டின் ஏனைய சமூகங்களிடம் இருந்தும் களைய வேண்டிய பாரிய பணி நம் முன்னால் இருக்கிறது.

ராமனையும், சாயிபாபாவையும், அம்மாவையும், இறைநேசர்களையும் தெய்வீக அந்தஸ்துக்கு உயர்த்திவிடுகின்ற இந்தியப் பாரம்பரியத்திலிருந்து மீண்டு, அறிவுலகுக்குப் பொருத்தமான தீர்வுகளை வழங்கும் வழிகாட்டியாக நபிகளாரை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறது.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கான தீர்வு, பண்பாட்டுச் சூழலைப் பாதுகாப்பதற்கான தீர்வு, அறிவு வளர்ச்சிக்கான வழிகாட்டல் என நபிகளாரின் ஒளியில் பல வழிகாட்டல்களை நாங்கள் நாட்டுக்கு வழங்க முடியும். முஸ்லிம் சமூகம் ஒன்று கூடி ஒவ்வொரு தேசிய மீலாதி லும் நாட்டின் பிரச்சினைக்கான ஒரு தீர்வை முன்வைக்குமா னால், இன்னும் சில வருடங்களில் இலங்கையின் பிரச்சினை கள் நபிகளாரின் வழிகாட்டலில் தீர்க்கப்பட்டிருக்கும். நாட்டை பிரச்சினைகளில் இருந்த மீட்ட மீட்பராக நபிகளாரை நாடு கொண்டாடும்.

நபிகளாரை கண்ணியப்படுத்துவதற்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பார்வை

## இஸ்ரேலுக்கு எதிரான வாக்கெடுப்பிலிருந்து எகிப்து நழுவல்




இஸ்ரேலின் சட்டவிரோத குடியேற்றத் திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று கடந்த 14 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை சபை கொண்டு வந்த தீர்மானம் குறித்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் இருந்து எகிப்து கவனமாக நழுவிச் சென்றுள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் மற்றும்` இஸ்ரேலுடன் எகிப்து கொண்டுள்ள உறவும் அதன் மீதான அழுத்தங்களுமே எகிப்தின் இந்நிலைப்பாட்டுக்கான காரணமாகும். சர்வதேச சட்டங்களை மீறும் வகையில் இஸ்ரேல் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான யூதக் குடியேற்றங்கள் பலஸ்தீனர்களின் நிலங்களை படிப்படியாகக் குறைத்து வருவதோடு, இரு நாட்டுத் தீர்வுத் திட்டத்திற்கும் பாரிய சவாலாக மாறியுள்ளது.

ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்னதாகவே இஸ்ரேலின் சட்டவிரோதக் குடியேற்றத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டில் தீவிரமாக இறங்கியுள்ளார். இஸ்ரேலுடன் அப்துல் பத்தாஹ் ஸீஸி பேணி வரும் இரு தரப்பு ஒப்பந்தங்கள் இஸ்ரேலுக்கு அடிபணிய வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. இப்பின்னணியிலேயே இஸ்ரேலுக்கு எதிரான வாக்களிப்பிலிருந்து எகிப்து விலகியுள்ளது.

## மொரோக்கோவில் புதிய அரசாங்கம்



மொரோக்கோவில் நீதிக்கும் அபிவிருத்திக்குமான இஸ்லாமிய கட்சியின் தலைவர் அப்துல்லாஹ் பின் கீரானை புதிய அரசாங்கத்தை முடியுமானவரை அவசரமாக உருவாக்குமாறு மொரோக்கோவின் மன்னர் ஆறாம் முஹம்மத் வேண்டியுள்ளார்.

மன்னரின் அரண்மனையிலிருந்து இதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டரை மாதங்களாக கீரான் ஏனைய அரசியல் கட்சிகளோடு நடத்தி வரும் பேச்சுவார்த்தைகளே புதிய அரசாங்கத்தை அமைப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது. பின் கீரானுடன் மன்னரின் அலோசகர்களான அப்துல் லதீப் மற்றும் உமர் கப்பாஜ் குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

2015 ஒக்டோபரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இஸ்லாமிய கட்சியான நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி 125 ஆசனங்களைப் பெற்றது. 198 ஆசனங்கள் கொண்ட மொரோக்கோவின் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மேலும் சில ஆசனங்களே அதற்குத் தேவை.

இஸ்திக்லால் மற்றும் சோசலிச ஒருமைப்பாட்டுக் கட்சி என்பவற்றோடு அப்துல்லாஹ் பின் கீரான் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்.

## சிரியாவில் சமாதானம் குறித்து ரஷ்யா-ஈரான்-துருக்கி பேச்சுவார்த்தை



ரஷ்ய ஜனாதிபதி புட்டின் சிரியாவின் ஜனாதிபதி அஸத், துருக்கி, ஈரான் நாடுகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் கஸகஸ்தான் தலைநகரில் சிரியாவின் சமாதானம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். ரஷ்யா, ஈரான், துருக்கி என்பன ஏற்கனவே மொஸ்கோவில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர்.

அலெப்போ சிரிய இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னர், சிரியாவின் நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கிலேயே இப்பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

வடக்கு நகரான அலெப்போவை சிரிய இராணுவம் கைப்பற்றுவதற்கு ரஷ்யாவின் படைப்பலம் பெருமளவு உதவியுள்ளது. அலெப்போவில் மனித உரிமைகள் மீறப்படவும் ரஷ்யா காரணமாகியுள்ளது. மீட்கப்பட்டுள்ள அலெப்போவில் தாஇஸ் மற்றும் அல் காயிதா தீவிரவாதிகள் ஊடுருவலாம் என்று சிரிய ஜனாதிபதி அஸத் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, சிரியாவின் பல்வேறு பகுதிகள் இன்னும் தாஇஷ், அல் காயிதா போன்ற ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இந்நிலையில் நிலையான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை அடையும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

## அலெப்போவில் 400 ரஷ்ய இராணுவப் பொலிஸார்

அலெப்போவிலுள்ள ரஷ்ய இராணுவத் தளங்களைப் பாதுகாப்பதற்கு 400 இராணுவப் பொலிஸாரை அங்கு நிலைநிறுத்தியுள்ளதாக ரஷ்ய அரசாங்கம் அறிவித்துள்ளது. தொடர்ந்தும் சிரியாவில் நிலைகொள்வதே ரஷ்யாவின் நோக்கம் என்று அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானுக்கு ஆதரவாகவே ரஷ்யா சிரியப் போரில் இறங்கியது. தரை வழியாக ரஷ்யப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். இதனால், ரஷ்யா மற்றும் சிரிய அரசாங்கத்திற்கு எதிரான போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டது. சவூதி அரேபியா, கட்டார் ஆகிய அறபு நாடுகள் பொதுச்-சபையின் இத்தீர்மானத்தை வரவேற்றுள்ளன.




## ஈராக் பிரதமர், முக்ததா சத்ரை சந்திக்கின்றார்



ஈராக்கின் இரும்பு மனிதர் என அறியப்படும் முக்ததா சத்ரை ஈராக் பிரதமர் ஹைதர் அல் ஆபாதி கடந்த திங்களன்று சந்தித்து ஈராக்கின் களநிலவரங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார். சமீபகாலங்களில் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் முக்ததா சத்ரை தலைவராகக் காண்ட சத்ர் அணியினர் மேற்கொண்டு வந்த நிலையிலேயே இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

மொசூலில் ஈராக்கிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் தாஇஷ்களுக்கு எதிரான போர் குறித்தும் அல் காயிதா பயங்கரவாத இயக்கம் குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளன. 328 உறுப்பினர்களைக் கொண்ட ஈராக்கின் பாராளுமன்றத்தில் சத்ரின் கட்சி 34 ஆசனங்களைக் கொண்டுள்ளது. அரசாங்கம் ஊழலில் ஈடுபட்டுள்ளதாக சத்ர் அணி குற்றம் சாட்டி வந்துள்ளது.

ஷீஆக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈராக்கிய பாராளுமன்றத்தில் மிகச் சொற்பமான அளவிலேயே சுன்னி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2011 இல் விடுவிக்கப்பட்டோருக்கு ஆயுள் சிறைத் தண்டனை




2011 இல் இஸ்ரேலிய சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பலஸ்தீன் கைதிகள் சிலருக்கு இஸ்ரேலிய நீதிமன்றம் மீண்டும் ஆயுள் சிறைத் தண்டனை தீர்ப்பளித்துள்ளது. இராணுவ நீதிமன்றத்தில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ராமல்லாஹ்வைச் சேர்ந்த பலஸ்தீனர் நாஇப் ரத்வானுக்கு எதிராக இரு ஆயுள் சிறைத் தண்டனையோடு இன்னும் 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இவர் 17 ஆண்டுகள் சிறை வாழ்வை அனுபவித்த நிலையில், 2011 இல் விடுவிக்கப்பட்டார்.

பலஸ்தீன் போராட்டக் குழுவான ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் எகிப்தின் மத்தியஸ்தத்தோடு நடைபெற்ற ஒப்பந்தத்தின்படியே, ரத்வான் விடுவிக்கப்பட்டார். கிலாத் சலித் எனப்படும் இஸ்ரேலிய சிப்பாய் 2006 ஹமாஸினால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தார். அவரை விடுவிப்பதற்குப் பகரமாக 1000 பலஸ்தீன சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவரே நாஇப் ரத்வான் என்பது குறிப்பிடத்தக்கது.

## எகிப்து-அமெரிக்க இராணுவ ஒப்பந்தம்



எகிப்துடனான 11.5 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தமொன்றில் ஐக்கிய அமெரிக்கா கைச்சாத்திட்டுள்ளது. இதனை அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் கடந்த 26 ஆம் திகதி உறுதி செய்துள்ளது.

எகிப்தின் விமானப் படைப் பலத்தை விஸ்தரிப்பதே இதன் நோக்கமாகும். எகிப்துக்கு இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்வது அமெரிக்காவின் நோக்கமாகும். அமெரிக்காவின் வெளிநாட்டு ஆயுத விற்பனைத் திட்டத்தின் ஒரு பகுதியே இதுவென்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

டிசம்பரின் தொடக்கத்தில் எகிப்திய வெளிவிவகார அமைச்சர் ஸாமி சுக்ரி, வொஷிங்டனுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது எகிப்து-அமெரிக்க பாதுகாப்பு விவ காரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதன் பலனாகவே ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

சர்வதேச ரீதியில் இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்யும் முதல் நாடாக அமெரிக்கா பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச ஆயுதச் சந்தையில் அரைவாசிக்கு மேற்பட்ட தொகையுடன் சுமார் 40 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுத வணிகத்தில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

## கிழக்கு சன்ஆவை அரச ஆதரவுப் படையினர் கைப்பற்றியுள்ளனர்



கிழக்கு சன்ஆவிலுள்ள நெஹூம் மாவட்டத்தை ஷீஆ ஹூதி தீவிரவாதிகளிடமிருந்து யெமன் அரச ஆதரவுப் படையினர் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யெமனின் இராணுவம் இச்செய்தியை உறுதி செய்துள்ளது. இராணுவப் பேச்சாளர் இது குறித்து கருத்து வெளியிடுகையில், நெஹூம் பிரதேசத்தில் முன்னேறியுள்ள எமது படையினர ஸர்ஹான், கர்ன் வதா ஆகிய கிராமங்களைக் கைப்பற்றியுள்ளனர். சவூதி தலைமையிலான கூட்டணி மேற்கொண்ட வான் தாக்குதல்களில் ஹூதிகளின் 3 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், ஹூதி தலைவரோ அவர்களுக்கு ஆதரவாகப் போராடுகின்ற யெமனின் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் படையோ இது குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. 2014 இறுதிப் பகுதியிலிருந்து யெமனில் பெரும் உள்நாட்டுப் போர் ஒன்று நடந்து வருகின்றது. அதில் ஹூதிகள் தலைநகர் சன்ஆவைக் கைப்பற்றினர். 2015 இன் நடுப்பகுதியில் சவூதியும் கூட்டணி நாடுகளும் யெமன் மீது ஹூதிகளை இலக்கு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கின் புவி அரசியலும் புதிய கூட்டணியும்

றவூப் ஸெய்ன்

சிரியாவில் வடக்கு நகரமான, வரலாற்றுப் புகழ் மிக்க அலெப்போ நகரம் கிளர்ச்சியாளர்களிடமிருந்து வீழ்ந்ததை அடுத்து, மத்திய கிழக்கின் புவி அரசியலில் புதிய மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாற்றத்தின் நடுநாயகமாக ஷீஆ கொள்கையின் மத்திய நிலையமான ஈரான் இருக்கும் என்று எதிர்வுகூறப்படுகிறது.

சிரியாவில் எழுந்த மக்கள் புரட்சி ஷீஆ அடக்குமுறையாளர்களுக்கு எதிரானது



என்பது தெட்டத் தெளிவானது. அலவி ஷீஆ அதிகார வர்க்கத்திடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் பெரும்பான்மை சுன்னி முஸ்லிம்கள் ஜனநாயக அரசாங்கமொன்றை நிறுவுவதுமே அதன் இலக்காக இருந்தது. விரும்பியோ விரும்பாமலோ ஷீஆ-சுன்னி முரண்பாடுகளே அந்த மோதலின் மையமாக இருந்தது.

ஆனாலும், வளைகுடாவில் ஷீஆ-சுன்னி அதிகாரச் சமநிலையுள்ள அணிகள் மோதலுக்கு வரவில்லை. கொள்கை ரீதியில் துருவமயப்பட்டுள்ள மத்திய கிழக்கில் ஷீஆயிஸம் எனும் ஒற்றைத் துருவம் மிகப் பலமான கூட்டணியோடு சிரியாவின் பெரும்பான்மை சுன்னி சமூகத்தைத் தோற்கடித்துள்ளது என்பதே கள உண்மையாகும்.

சிரியாவின் சுன்னி கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான கூட்டணி மிகவும் பலமானது. அதில் மத்திய கிழக்கின் மூன்று அரசாங்கங்களும் ஒரு பாரா இராணுவக் கும்பலும் இணைந்துள்ளன. சிரிய ஷீஆ அரச படை, ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படை (IRGC), ஈராக்கின் அரச படையோடு, லெபனானின் ஈரான் கைக்கூலிகளான ஹிஸ்புல்லாஹ்வும் அதில் இணைந்துள்ளது.

இது போன்ற ஒரு சுன்னி இராணுவக் கூட்டணிப் படை பிராந்தியத்தில் உருவாகவில்லை. அதன் உருவாக்கம் துருவமயப்பட்டுள்ள வளைகுடாவில் மீளவும் ஒரு பிராந்தியப் போருக்கு இட்டுச் செல்லலாம் என்ற அச்சம் நிலவுகின்றது.

யெமனில் ஹூதி ஷீஆ கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து வான் தாக்குதல்களை நடத்தி வரும் சவூதி அரேபியா தலைமையிலான கூட்டணியை ஈரானின் தலைமையிலான ஷீஆ கூட்டணிக்கு நிகராக்க முடியாது. ஏனெனில், ஷீஆ கூட்டணியின் நோக்கங்களும் இலக்குகளும் மூலோபாயங்களும் பாரியவை என்பதை தற்போதைய சிரியாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இக்கூட்டணி வெளிப்படுத்தி வரும் கருத்துகள் காட்டுகின்றன.

சவூதி தலைமையிலான கூட்டணி பிராந்தியத்தில் வளர்ந்து வரும் ஈரானின் தலைமையிலான ஷீஆ பேரரசை தோற்கடிக்கும் நோக்கம் கொண்டதல்ல என்பதையே வளைகுடா கூட்டுறவு நாடுகளின் நகர்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஆக, ஒப்பீட்டு ரீதியில் ஷீஆ கூட்டணி இராணுவ ரீதியிலும் மூலோபாய ரீதியிலும் முன்னேறி வருவதையே களநிலவரம் காட்டுகின்றது.

சிரிய ஜனாதிபதி அஸத் ஈரானின் உயர் அதிகாரிகளோடு உரையாற்றுகையில், ''இந்த வெற்றி சிரிய அரசாங்கத்தை விட ஈரானுக்கும் ரஷ்யாவுக்கும் கிடைத்த பெரும் வெற்றி'' என்று பொங்கி வழிகிறார்.

லெபனானைத் தளமாகக் கொண்டு, ஈரானின் புரட்சிகரப் படைக்குத் தலைமை தாங்கிய ஹிஸ்புல்லாஹ்வின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ், ''அலெப்போ வெற்றி பஷ்ஷார் அல் அஸதை தோற்கடிக்க முடியாது என்ற கசப்பான உண்மையை சுன்னிக் கிளர்ச்சியாளர்களுக்கு உணர்த்தி விட்டது எனவும், இதற்கு மேல் ஆயுத ரீதியான போராட்டம் வெற்றி பெறாது'' எனவும் தெரிவித்துள்ளார். இந்த வெற்றி மத்திய கிழக்கு அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குவதாகவும் நஸ்ருல்லாஹ் சூளுரைத்துள்ளார்.

அடுத்த கட்டம் சுன்னிக் கிளர்ச்சியாளர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிராந்தியங்களிலும் சூழவுள்ள பிராந்தியங்களிலும் பாதுகாப்பைப் பலப்படுத்துவதே எனத் தெரிவித்துள்ள நஸ்ருல்லாஹ், இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிரான மாபெரும் இஸ்லாமிய வெற்றியே அலெப்போ வெற்றி எனவும் சிலாகித்துள்ளார்.

இத்தனைக்கும் இடையில் சிரியாவில் சுன்னிகளை வெற்றி கொள்ள ஈரான் தயாரித்த விரிந்த இராணுவப் படைப் பிரிவில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மற்றும் பஹ்ரைன் ஷீஆ ஜிஹாதிகளும் பங்குகொண்டுள்ளனர்.

யெமனில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சவூதி அரேபியா தலைமையிலான வளைகுடா கூட்டமைப்பு நாடுகளின் வான் படைகள் நடத்தி வரும் தாக்குதல் ஈரான் ஆதரவு ஹூதிகளை பலவீனப்படுத்தவில்லை என்பது பாரிய இராணுவத் தோல்வியாகும். மூலோபாய ரீதியிலும் அறபுக் கூட்டணி ஷீஆ ஆதிக்கத்தை வெற்றி கொள்வதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

யெமனில் மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளும் எல்லையற்ற அழிவும் அறபுக் கூட்டணிகளின் மூலோபாயமற்ற போருக்குக் கொடுக்கப்படும் பெரும் விலையாகவே பார்க்கப்படுகின்றது.

எளிய தர்க்கத்தின்படி, அறபுக் கூட்டணி சிரியாவை நோக்கியும் தனது இராணுவத் திட்டத்தை வியாபித்திருக்க வேண்டும். ஆனால், யெமனில் மாத்திரம் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் விளையாட்டில் அவை ஏன் ஈடுபடுகின்றன என்பது சந்தேகத்துக்குரிய கேள்வியாகும்.

அறுதிச் சிறுபான்மை ஷீஆக்களைக் கொண்ட யெமன், ஒரு சுன்னி பெரும்பான்மை நாடாகும். அது சுன்னி அரசுகளாலேயே அழிக்கப்பட்டு வருகின்றது. ஈராக்கில் நிழல் அரசொன்றை நடத்தி வரும் ஈரான், பஹ்ரைனையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதற்கு மூலோபாயத் திட்டத்தை வகுத்துச் செயல்படுகின்றது.



| நாடுகள் | ஷீஆக் களின் % |
|---|---|
| ஈரான் | 90 |
| பஹ்ரைன் | 65 |
| அஸர்பைஜான் | 65 |
| ஈராக் | 60 |
| லெபனான் | 50 |
| யெமன் | 10 |
| சிரியா | 10 |
| ஆப்கானிஸ்தான் | 10 |
| சவூதி அரேபியா | 10 |
| அறபு எமிரேட்ஸ் | 10 |
| கட்டார் | 10 |
| துருக்கி | 10 |
| பாகிஸ்தான் | 10 |
| இந்தியா | 10 |

ஈரான் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் தலைவர் ஹூஸைன் ஸலாமி இதனை தெளிவாகவே சுட்டியுள்ளார். ''அலெப்போ விடுதலைக்குப் பின்னர் பஹ்ரைன் மீதான எதிர்பார்ப்புகள் கூர்மையடைந்துள்ளன. இஸ்லாத்தின் எதிரிகள் மீதான வெற்றியினால் யெமனிலுள்ள ஹூதிகளும் மகிழ்ச்சியடைவார்கள்'' என ஹூஸைன் ஸலாமி சிலாகித்துள்ளார்.

ஈரானின் அரசாங்க மதகுருவான ஆயதுல்லாஹ் கஷ்ஷானி, ''அலெப்போ வெற்றி இறை நிராகரிப்பாளர்களுக்கு எதிரான

வெற்றியாகும்'' என வர்ணித்துள்ளார். அவர் நாடுவது சிரியாவிலுள்ள 90 வீத சுன்னி முஸ்லிம்களை மட்டுமன்றி, முழு சுன்னி உலகையுமே என்பது தெளிவானது.

ஈரான் லெபனானில் தமது கைக்கூலிகளான ஹிஸ்புல்லாஹ்வை களமிறக்கி ஷீஆ கொள்கையின் ஆடுகளமாக லெபனானை மாற்றியுள்ளது. சுன்னி சமூகம் தமது தேச ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதை ஈரான் பயங்கரவாதம் என்று முத்திரை குத்துகின்றது. தேச விடுதலைக்கான சுன்னிப் போராளிகளை காபிர்கள் என்று வர்ணிக்கின்றது. அதே வேளை ஈரான், ஈராக், லெபனான், சிரியா, பஹ்ரைன், அஸர்பைஜான், யெமன் என்பவற்றை இணைத்த ஒரு 'அகன்ற ஈரானை' ஸ்தாபிப்பதற்கு முனைகின்றது.

அதன் மூலோபாய திட்டத்தின் ஒரு பகுதியே அலெப்போவை இலக்கு வைத்த ஷீஆக்களின் அகன்ற கூட்டணியாகும். ரஷ்யா கொள்கை, கோட்பாடுகளுக்கு அப்பால் அமெரிக்காவை மிஞ்சும் நோக்கில் இக்கூட்டணிக்கு வழங்கி வரும் ஆதரவு மத்திய கிழக்கை மேலும் பலவீனப்படுத்தவே காரணமாகின்றது. மத்திய கிழக்கில் ஈரான் தலைமையிலான பழைய சாசானியப் பேரரசை நிறுவும் கனவுகளில் மிதக்கும் ஷீஆக்கள், தொடர்ந்தும் திட்டமிட்டு செயல்படுகின்றனர்.

சுன்னி அரசுகளோ தமது சொந்த அதிகார பீடங்களைப் பாதுகாப்பதில் மாத்திரம் குறியாய் இருக்கின்றன. இதற்கு நீண்ட காலத்தில் மத்திய கிழக்கு சுன்னி சமூகங்கள் கொடுக்க வேண்டிய விலை மிகப் பாரியதாக இருக்கும். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

வெள்ளம் தலை மேலால் பரவிச் செல்கின்றது. இங்கே சாண் என்ன? முலம் என்ன? எல்லாம் தலைகீழாய் மாறி விட்டது. இஸ்லாத்தின் பரம எதிரிகளால் உருவாக்கப்பட்ட ஷீஆக் கொள்கை அசீதா பரிமாணத்திலிருந்து அரசியல் வடிவம் பெற்று, இப்போது முழு முஸ்லிம் உம்மத்துக்கும் உலகப் பெரும் அச்சுறுத்தலாக உருமாறியுள்ளது. அதனை மூலோபாய ரீதியிலும் அரசியல் ரீதியிலும் எதிர்கொள்வதற்கான திராணி அறபு நாடுகளுக்கு உள்ளதா என்பதே இப்போது எழும் கேள்வி.

இதற்குரிய மூலோபயத் திட்டமொன்று இல்லை என்றால் அதற்கு முஸ்லிம் உம்மா கொடுக்கும் விலை பாரியதாகவே இருக்கும். அலெப்போ [illegible] தரும் [illegible] இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொஸ்பரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 10

முஸ்தபா கமால் சியோனிஸ இயக்கத்தின் பின்னணியோடு கொண்டு வந்த அதிரடியான மாற்றங்கள் துருக்கியை மட்டுமன்றி, முழு இஸ்லாமிய உலகத்தையும் பாதித்தது. 600 ஆண்டு காலம் இஸ்லாமிய அடையாளத்துடனும் நாகரிக, கலாச்சார சின்னங்களுடனும் முஸ்லிம் உலகிற்குத் தலைமை தாங்கிய துருக்கியில், மதச்சார்பின்மை திணிக்கப்பட்டதனால் துருக்கியர்களின் சமூக வாழ்க்கை படிப்படியாக இஸ்லாமிய அடையாளத்திலிருந்து தூரமாகியது.

பள்ளிவாயல்கள் மூடப்பட்டமையும், அறபு எழுத்துக்கள் அழிக்கப்பட்டமையும், கலாச்சார தனித்துவத்தைப் பாதுகாப்பதில் பெரும் சவாலாக மாறியது. இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களுக்குப் பதிலான ஜேர்மன் மற்றும் சுவிட்சர்லாந்து சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. இதனால், ஷரீஆவின் பங்களிப்பு முற்றிலும் இல்லாமல் ஆக்கப்பட்டது.

இஸ்லாத்தை ஒழிப்பதே கமாலிஸத்தின் இலக்காக இருந்ததனால் நாட்டில் பொருளாதாரம் வெகுவாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. பணவீக்கம் அதிகரித்தது. துருக்கிய ஐரோப்பாவின் நோயாளியாக மாறியது.

ஹிஜாப் சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டதனால் பெண்களின் ஆடை ஒழுங்கில் ஐரோப்பிய கலாசாரம் ஊடுருவியது. புவியியல் ரீதியில் துருக்கி ஐரோப்பாவுக்கு சமீபமாக இருப்பதனால் மதச்சார்பின்மைக்கு நெருக்கமான மாற்றங்களையும் ஐரோப்பிய கலாசார ஊடுருவலையும் இலகு வாக்கியது. மக்கள் மார்க்கத்திலிருந்து தூரமாகத் தொடங்கினர். அறபு, இஸ்லாமிய கலா நிலையங்களும் மத்ரஸாக்களும் இழுத்து மூடப்பட்டு, அந்த இடங்களை மதச்சார்பற்ற மேற்கத்தேய கல்வி நிறுவனங்களால் நிரப்பப்பட்டன.

இந்நடவடிக்கை முஸ்லிம்களின் இஸ்லாமிய சிந்தனைத் தனித்துவத்தில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியது. ஐரோப்பிய மூளையால் சிந்திக்கும் தலைமுறையொன்று அங்கு உருவாக்கப்பட்டது.

முஸ்தபா கமால் கொண்டு வந்த அரசியலமைப்பின் படி அவனால் அறிமுகம் செய்யப்பட்ட இஸ்லாம் விரோத நாஸ்திகக் கோட்பாடுகளையும் மதச்சார்பற்ற சமூக, பொருளாதாரக் கட்டமைப்பையும் பாதுகாக்கும் முழுப் பொறுப்பும் இராணுவத்திற்கு வழங்கப்பட்டது. துருக்கியில் மதச்சார்பின்மையின் காவலர்கள் இராணுவம் என பிரகடனப்படுத்தப்பட்டது. இதனால், இராணுவத்திற்கு வகைதொகையற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஐரோப்பாவிலோ ஆசியாவிலோ எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவுக்கு துருக்கிய இராணுவத்தின் அதிகாரம் எல்லையில்லாமல் குவிக்கப்பட்டது. இராணுவம் விரும்புவதைச் செய்வதற்கு இடமளிக்கப்பட்டது.



சட்டங்களை இயற்றுவதற்கும் அமுலாக்குவதற்குமான உரிமையும் அதிகாரமும் இராணுவத்திற்கு வழங்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சர் பெயரளவில் செயல்படும் ஒருவராகவே இருந்தார். அவரைக் கலந்தாலோசிக்காமல் வெறொரு நாட்டுடன் ஒப்பந்தங்கள் செய்யவும் இராணுவக் கூட்டமை உருவாக்கவும் இராணுவத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

பெருந்தொகை ஆயுதங்களை மிகப் பெரிய விலைக்கு கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களில் துருக்கிய இராணுவம் அரசாங்கத்தைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக ஈடுபடவும் இராணுவத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

இத்தகைய இராணுவ சர்வதிகாரம், கமாலிஸத்தின் கொள்கைச் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட மிக மோசமான விளைவாகும். பிற்காலத்தில் 1960, 1971, 1980, 1997, 2016 ஆகிய ஆண்டுகளில் இராணுவம் வீதிக்கு இறங்கி புரட்சிகளில் ஈடுபட்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய, கைப்பற்ற முயன்ற சதிப் புரட்சிகளுக்கு கமாலின் அரசியல் மாற்றங்களே வழிகோலியது.

இவ்வாறு முஸ்தபா கமாலின் ஊடுருவல் துருக்கியின் கலாசாரம், சமூகக் கட்டமைப்பு, பொருளாதாரம், அரசியல், இராணுவம், ஆன்மீகம் என அனைத்தையும் தலைகீழாய் மாற்றி விட்டது. அதிலிருந்தே துருக்கியை மீளெழுச்சி செய்ய வேண்டிய நிலைக்கு இஸ்லாமியவாதிகளைத் தள்ளியது.

கமாலின் காலத்திலேயே அவனது கொள்கைகளை எதிர்த்து நின்ற இஸ்லாமியவாதிகள் துருக்கியில் தோன்றினர். (தொடரும்)

• கருணாகரன்

இனப்பிரச்சினைக்கான தீர்வை தமிழ் பேசும் மக்கள் அல்லது தமிழர்கள் எப்படிச் சாத்தியப்படுத்தலாம்? அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்வைச் சாத்தியப்படுத்துவதற்கு தமிழ்பேசும் மக்கள் என்ன செய்ய வேண்டியுள்ளது?

இந்தக் கேள்விகள் தீர்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இன்றைய நிலையில், தமிழ் பேசும் மக்களுக்கு முக்கியமானவையாக உள்ளன. இரண்டு கேள்விகளும் சாரம்சத்தில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்தாலும் இரண்டும் நுணுக்கமான வேறுபாடுகளைக் கொண்டவை. ஆகவே இரண்டுக்குமுரிய பதில்களைத் தேடுவதைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

புரிதல்களோ, தீர்வைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமோ உருவாகவில்லை. எனவே, தமிழ்த்தரப்பு தன்னுடைய இழப்புக்கும் போராட்டத்துக்கும் ஏற்ற பயனை எதிர்பார்க்கிறது. இதில் மற்றவர்கள் எப்படிப் பங்கைக் கோர முடியும்? இப்படிச் சிந்திப்பதில் என்ன தவறு? என்பது.

தமிழ்த் தரப்பினர் இந்த நியாயத்தை தமக்குச் சரியானதென்று கொள்ளலாம். அப்படி நியாயப்படுத்திப் பொது வெளியில் சொல்லவும் கூடும். இதைச் சரியானதென்று ஏற்றுக்கொண்டபடியால் தான் தமிழ் ஊடகங்களும் தமிழ் அரசியல் தரப்பினரும் தமிழர்களுடைய அரசியல் உரிமைகளைப் பற்றி மட்டுமே பேசி வருகின்றனர். அரசாங்கத்துடன் நடத்தும் உரையாடல்களிலும் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தீர்வு யோச

இலங்கை ஒரு பல்லினச் சமூகங்கள் வாழும் நாடு. ஆகவே, அதனுடைய அரசியல் யாப்பும் சட்டங்களும் ஆட்சியும் பல்லினத் தன்மைக்கமைவாகவே உருவாக்கப்பட வேணும். தீர்வு என்பது இதன்வழியாகவே சாத்தியமாகும். இன்றைய உலகத்தின் மொழியும் இதுதான். பல்லினத் தன்மைக்கு இடமளித்தல். ஆகவே, இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சர்வதேச சமூகத்தின் ஆதரவும் கோரிக்கையும் அப்படித்தான் இருக்கும். பல்லினத் தன்மைக்கு இடமளிக்க வேணும் என்ற அடிப்படையில்.

அப்படியானால், தமிழர்கள் தமக்கான அரசியல் தீர்வை எட்டுவதாக இருந்தால் நிச்சயமாக முஸ்லிம்களையும் பங்காளிகளாக்கியே அரசுடன் உரையாட வேண்டும். தீர்வு யோசனைகளில் தனியே தமிழர்களும் சிங்களவர்களும்

மூலம் இணக்கப்பாட்டுக்கும் ஒரு முகத்துக்கும் வரவேணும். அதன் மூலமே தமிழ்பேசும் மக்களின் கோரிக்கைகள் பலமடையும்.

தமிழ்த்தரப்பினுடைய தீர்வுக்கான தளத்தயாரிப்பு இதிலிருந்தே தொடங்கப்பட வேணும். இதில் மலையகத்தினரையும் பொருத்தமாக இணைத்துக் கொள்வது அவசியம். இதில் எட்டப்படும் ஒருங்கிணைந்த வெற்றியின் மூலமே தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களை உள்ளடக்கிய தாயகக் கோட்பாடு என்ற எண்ணக்கருவையும் வடிவமாக்க இயலும். இதன் தொடர்ச்சியாகவே தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெற்றுக்கொள்வதும் நிகழும். அதாவது, தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பெற்றுக்கொள்வது என்பது ஏனைய சமூகங்களுடன் நிகழாமல்

அடுத்தது, "தீர்வைச் சாத்தியப்படுத்துவதற்கு தமிழ்பேசும் மக்கள் என்ன செய்ய வேண்டியுள்ளது?"

இது பெரும்பாலும் மக்களுடன் சம்பந்தப்பட்டது. முன்னையதில் பெருமளவுக்கும் அரசியல் தரப்பினருக்கே அதிக பொறுப்புகள் அதிகமுண்டு. கூடவே ஊடகங்களும் இணைந்து கொள்ளலாம். ஆனால், இந்த இரண்டாவதில், தமிழ் பேசும் மக்களான தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத்தினர் என்ற மக்களுக்கும் மக்கள் அமைப்புகளுக்குமே கூடுதல் வலுவுடைய பொறுப்புகள் உள்ளன.

அரசியல் தீர்வையும் அது தொடர்பான விவகாரங்களையும் யாரோ சிலர் அல்லது தலைவர்களாக இருப்பவர்கள் பெற்றுத்தருவார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்காமல், மக்களும் இதில்

# இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழ்பேசும் தரப்பின் பங்கு?

முதலாவது, "இனப்பிரச்சினைக்கான தீர்வை, தமிழ் பேசும் மக்கள் அல்லது தமிழர்கள் எப்படிச் சாத்தியப்படுத்தலாம்?" என்பதைப் பற்றியது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு தமிழ்த் தரப்பு தனியே முயற்சிப்பதாகவே தெரிகிறது. சக பங்காளிகளான முஸ்லிம்களோடும் மலையகத்தினரோடும் கூட்டிணைந்த முயற்சிகள் நடக்கவில்லை. முஸ்லிம் தரப்பையும் மலையகத்தினரையும் புறநீங்கலாக்கி விட்டுத் தமிழ்த் தரப்பின் அபிலாஷைகளைப் பற்றியே தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வருகிறது.


தமிழ் ஊடகவெளியிலும் தமிழ்த் தரப்பின் எண்ணங்களே வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்த் தரப்பின் நியாயங்களுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. அரசாங்கத்துடனான தமிழ்த் தரப்பின் உரையாடல்களும் அப்படித்தான் உள்ளன. இதற்குச் சொல்லப்படும் காரணங்களில் ஒன்று, தமிழர்களே இன ஒடுக்குமுறைக்கு எதிரான குரலை வெளிப்படுத்தி, சிங்கள மேலாகத்துக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டத்தில் அதிகளவிலான இழப்புகளைச் சந்தித்தவர்களும் தமிழர்களே.

இந்தப் போராட்டத்தில் முஸ்லிம்களுடைய பங்களிப்பும் மலையத்தினருடைய பங்கேற்பும் குறிப்பிடத்தக்களவில் இருக்கவில்லை. மட்டுமல்ல, உக்கிரமான போர் நடைபெற்ற, அழிவுகளையும் இழப்புகளையும் உச்சகட்ட ஒடுக்குமுறையையும் தமிழர்கள் சந்தித்துக் கொண்டிருந்தபோது முஸ்லிம் தரப்பும் மலையகத்தினரும் அரசுடன் இணைந்திருந்தனர். அரசு வழியான நன்மைகளை - அனுகூலங்களைத் தாராளமாகப் பெற்றுக்கொண்டனர்.

குறிப்பாக தமிழர்களுடைய போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்கும் வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதற்கும் முஸ்லிம்கள் அரசினால் கருவியாக இருந்துள்ளனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர்கள் மீது அரசு மேற்கொண்ட ஒடுக்குமுறைக்கு எதிரான கண்டனத்தையோ எதிர்ப்பையோ வெளிப்படுத்தவும் இல்லை. அரசாங்கத்தை விட்டு வெளியேறவும் இல்லை. ஆகவே தமிழர்களுடைய நியாயத்தையும் பிற சமூகத்தினுடைய நியாயத்தையும் ஒன்றாக இணைத்துப் பார்க்க முடியாது.

தமிழ்த் தரப்பின் இழப்பையும் போராட்டத்தையும் கணக்கிலெடுத்தே அரசியல் தீர்வைப் பற்றி யோசிக்க வேண்டியுள்ளது. தமிழர்களுடைய தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாகவே இனப்பிரச்சினை என்ற ஒரு விடயம் நாட்டில் உள்ளது என்பதை சிங்களத் தரப்பு ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

மற்றும்படி சிங்களத் தரப்பில் இயல்பாக ஏற்பட்ட உணர்வின் வெளிப்பாடாக இனப்பிரச்சினையைப் பற்றிய



னைகளிலும் கூட தமிழ்த் தரப்பு தனியே தான் மட்டும் ஈடுபடுவதும் இந்த அடிப்படையில்தான். முஸ்லிம்கள், மலையக மக்கள் போன்ற தரப்பினரைத் தமிழ்த் தரப்பு சேர்த்துக் கொண்டதாகவோ, கவனத்திற் கொண்டதாகவோ இல்லை.

இதைப் பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் பேசியபோது அவர் சொன்னார், "நாங்கள் அரசாங்கத்துடன் ரகசியமாகப் பேச்சுகளை நடத்தவும் இல்லை. தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கவும் இல்லை. எங்களுடைய மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கொழும்புடன் பேசி வருகிறோம். அது எங்களுடைய கடமை. அதைச் செய்கிறோம்.

அதைப்போல சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் இந்தியாவோடும் பிற நாடுகளோடும் எங்களுடைய மக்களின் பிரச்சினைகளைப் பற்றியும் அரசியல் தீர்வின் அடிப்படைகளைப் பற்றியும் பேசி வருகிறோம். இவையெல்லாம் பகிரங்கமாகவே நடக்கின்றன. எவரைச் சந்தித்தாலும் அந்தச் சந்திப்புகளில் நாங்கள் என்ன பேசினோம் என்பதை மக்களுக்குப் பகிரங்கப்படுத்தியிருக்கிறோம். எங்களுடைய மக்களின் இழப்புக்கும் வலிகளுக்கும் ஏற்ற நீதியை நாங்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதைப்போல, முஸ்லிம் கட்சிகளும் மலையகத் தலைமைகளும் தங்கள் பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கத்துடன் பேசட்டும். அவர்களுக்கும் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்கள் அதைச் செய்யட்டுமே" என்று.

மேலோட்டமாகப் பார்த்தால் மேற்குறித்த பாராளுமன்ற உறுப்பினருடைய இந்த நியாயப்பாடு சரியானதாகவே தோன்றும். ஆனால், இது சரியானதா என்றால், இல்லை என்பதே பதில். இலங்கையின் அரசியல் நிலவரத்தை சரியாக அறிந்தால் இப்படிப் பதிலளிக்கவும் முடியாது. இந்தச் சிந்தனை முறையை ஏற்றுக்கொள்ளவும் இயலாது.

மட்டும் பேசிப் பயனில்லை. அதற்கப்பால் முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என்ற பிற சமூகங்களோடும் பேசுவது அவசியம். அவர்களுடைய உடன்பாடுகளையும் பெற்றுக்கொள்வது முறை.

இலங்கை ஒரு பல்லின நாடு என்ற நிலையில் சிந்தித்தால் மட்டுமே தீர்வை எட்ட முடியும். இல்லையென்றால், இந்த நாட்டில் மேலும் மேலும் புதிய நெருக்கடிகளே உண்டாகும். இது முதலாவது கட்டம். இதற்கு அப்பாலும் வேலைகள் உண்டு.. இந்த முதலாவது கட்டத்தில் முஸ்லிம்களுடன் பங்காளிகளாவது என்பதற்கு பல விடயங்களில் புரிந்துணர்வும் நெகிழ்ச்சியான அணுகுமுறைகளும் விட்டுக்கொடுப்புகளும் ஏற்றுக்கொள்ளல்களும் தேவை. இதற்கான அகபுறத் தயாரிப்புகளில் தமிழ்த் தரப்பு ஈடுபட வேணும். அதைப்போல முஸ்லிம் தரப்புக்கும் பொறுப்புகளும் செயல் விளைவுகளும் உள்ளது.

இதைச் சற்று விரிவாக்கிப் பார்த்தால், இன்றைய நிலையில் வடக்குக் கிழக்கு இணைப்பைத் தமிழ்த்தரப்புக் கோருகிறது. கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்கு இதில் ஆர்வமில்லை. இதுவே ஒரு பெரிய பிரச்சினை. இதற்குத் தீர்வு காணப்படவில்லை என்றால் தமிழரின் தாயகக்கோட்பாடே தகர்ந்து விடும்.

எனவே இந்த விடயத்தில் விவகாரத்துக்கு இடமளிக்காமல், தமிழர்களும் முஸ்லிம்களும் இணக்கம் கண்டால் தான், இந்த விவகாரத்தை அரசாங்கம் மீண்டும் ஒரு கருவியாகக் கையாள முடியாமல் போகும். அதைப்போல, அதிகாரப் பகிர்வோ, சமஷ்டியோ முன்வைக்கப்படும் போதும் முஸ்லிம்கள் அதை எந்த வகையில் அங்கீகரிப்பார்கள் என்பதை தமிழ்த்தரப்பு அறியாமல் இருந்தால், அதனுடைய விளைவும் எதிரானதாகவே அமையும். ஆகவே தவிர்க்க முடியாதவாறு முஸ்லிம் தரப் [illegible] தமிழ் மக்களின் [illegible]

தனியே நிகழ முடியாது. இது வரலாற்றின் விதியாக இன்று உருப்பெற்றுள்ளது.

இரண்டாவது கட்டம், தமிழர்களுடைய உரிமையை, கோரிக்கைகளை, நியாயங்களை ஏற்றுக்கொள்வதற்கு சிங்களத்தரப்பின் ஆதரவும் தேவை. தீர்வு முயற்சிகளின் போது தீர்வுக்கெதிராக சிங்கள மக்களை இனவாத அடிப்படையில் தூண்டுவதற்கான சாத்தியங்கள் நிறையவுண்டு. அரசாங்கத்துக்கு எதிரான சக்திகளும் இனவாதிகளும் இதைச் செய்வர். இதொன்றும் புதிய விசயமுமில்லை. ஆகவே, இந்த அபாய நிலையை முறையடிக்க வேண்டுமானால், சிங்கள மக்களுடனும் சிங்கள முற்போக்குச் சக்திகளோடும் தமிழ் பேசும் தரப்பினர் பரவலான அளவில் உரையாடல்களை நடத்த வேண்டியுள்ளது.

கிராமங்களிலும் நகரங்களிலும் சமாதான இயக்கத்தை வலுவூட்ட வேண்டும். இது தவிர்க்க முடியாதது. இவ்வாறு சிங்களத் தரப்பில் சமாதானத்துக்கான புரிதலை உண்டாக்கி, அதை ஒரு பேரார்வமாக வளத்தெடுப்பதன் மூலம் தீர்வைக் குறித்த ஐயங்களையும் அதற்கு வரும் அபாயங்களையும் நீக்க முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதாக இருந்தால், அதை நடைமுறைப் படுத்துவதற்கான அதிகாரமும் விதிகளும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேணும். இல்லையென்றால் தீர்வை எட்டவே முடியாது. அது அர்த்தபூர்வமாகவும் இருக்காது. அதனால்தான் தீர்வு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு வசதியாக அரசியலமைப்பை மாற்றிக் கொள்வதற்கும் பிற அடிப்படைகளுக்குமாக பாராளுமன்றம் அரசியலமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டுள்ளது. ஆகவே முதலாவது ஏற்பாடு ஓரளவுக்குச் செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புப் பேரவையாக பாராளுமன்றத்தை மாற்றியதில் புதிய ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியதில் தமிழ்த்தரப்பும் பங்களித்துள்ளது.

இனி அடுத்த ஏற்பாடு. இனப்பிரச்சினைக்கான தீர்வு எப்படி அமையவுள்ளது என்பதைப் பொறுத்தே, அதற்கான ஆதரவும்அதைநடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளும் உண்டு.

ஆகவேதான் சொல்கிறேன், அரசாங்கத்துடனோ அல்லது சிங்கள அதிகார வர்க்கத்தினுடனோ, அல்லது சிங்க மக்களுடனோ மட்டும் தமிழர்கள் பேச்சுகளை நடத்தினால் எல்லாம் சரியாகி விடும் என்றில்லை. அல்லது தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து தீர்வைத் தயாரித்தால் மட்டும் எல்லாம் சரியாகிடும் என்றுமில்லை. அப்படித்தான் தமிழ்த்தரப்பும் சிங்களத்தரப்பும் இணைந்து தீர்வொன்றை உருவாக்கினாலும் அதை நடைமுறைப்படுத்துவது எப்படி? அதற்கு பிற தரப்பினராகிய முஸ்லிம்கள். மலையகத்தமிழர்கள் போன்றவர்களின் ஆதரவு தேவையில்லையா? தீர்வு யோசனைகளிலும் பேச்சுகளிலும் அவர்களை உள்ளடக்காமல், அவர்களுடைய ஆதரவை எப்படிப் பெற்றுக்கொள்ள முடியுமா? என.

பங்கேற்றுச் செயற்பட வேணும். மக்களிடம் ஏற்படும் அரசியல் ஈடுபாடும் விழிப்புணர்வும் செயற்பாடுகளுமே அரசியற் தீர்வைச் சாத்தியப்படுத்தும். அரசியல் நெருக்கடிகளை, இனமுரணின் விளைவுகளை, யுத்தத்தை, சமாதானமின்மையின் விளைவுகளை அனுபவித்தவர்கள் மக்களே. ஆகவே கடந்த கால வலிகளை உணர்ந்து, புதியதொரு நிலைமையினை உருவாக்க வேண்டும் என்பதற்கு மக்களே முன்வரவேணும்.

தங்கள் சுய அனுபவங்களின் வழியாகச் சிந்தித்து, இருண்ட காலத்திலிருந்து மீள்வதற்கு முயற்சிப்பது அவசியம். மக்கள் இயக்கமாக பிற சமூகங்களுடன் உரையாடத் தொடங்கும்போது இடைவெளிகளும் ஐயங்களும் அச்சங்களும் போக்கப்பட்டு விடும். விளைவாக புரிந்துணர்வும் நேசமும் உறவும் அதிகமாகும். இன்று அங்கங்கே நடத்தப்படுகின்ற நல்லிணக்கச் செயற்பாடுகள் இந்த வகையிலானவையே. இந்த அடிப்படையிலானவையே என்று யாரும் சொல்லக்கூடும். அவை நிச்சயமாக அந்த அடிப்படையிலானவை அல்ல. அவை மேலிருந்து கீழ் நோக்கி கொண்டு செல்லப் படுகின்றவை. அதனால் பயனில்லை.

அந்த மாதிரியான முயற்சிகளை மக்கள் சந்தேகத்தோடுதான் பார்ப்பார்கள். மேலே இருந்து கொண்டு வரப் படுவதால் அதை ஒரு பொறியாகவே பலரும் சந்தேகிக்கிறார்கள். நல்லிணக்கம் என்ற பேரில் தமிழ் பேசும் மக்களின் போராடும் குணாம்சத்தை முனை மழுங்க வைக்கும் நடவடிக்கை என. ஆகவே அது கீழிருந்து உருவாக வேண்டும். மக்களிடமிருந்து உருவாகினால், மக்கள் அதைச் சந்தேகிக்கமாட்டார்கள். அதை அவர்கள் தாங்களாகவே உருவாக்கும் பொழுது அவர்களுக்கு சந்தேகங்கள் உருவாக வாய்ப்பில்லை. அத்தகைய அவசியப்பாடு, பிற சமூகங்களோடு உரையாடி உருவாக்கப்படும் ஒரு தீர்வே சாத்தியம் என்ற எண்ணம் மக்களுக்கு வரவேண்டும். அந்த எண்ணத்தை, உண்மையை உணர வைப்பதே இன்றைய தேவை.

இதில்தான் ஆய்வாளர்களும் ஊடகங்களும் கருத்துருவாக்கிகளும் சமூகச் செயற்பாட்டாளர்களும் சமாதான விரும்பிகளும் ஒன்று பட்டுழைக்க வேண்டியுள்ளது.

ஆகவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தனியே இரண்டு தரப்புகள் மட்டும் மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக அமையாது. அப்படி உருவாகவும் முடியாது என்று அழுத்தமாகச் சொல்கிறோம். அப்படி நம்பியிருந்தால் நிச்சயமாக ஏமாற்றத்தையே சந்திக்க வேண்டியிருக்கும்.மட்டுமல்ல, அதில் அனைவரும் பங்கேற்பதன் மூலமாகவே தீர்வைச் சாத்தியப்படுத்தவும் முடியும். மாற்றங்களை நடத்துவதற்கான வாய்ப்புகளையே ஜனநாயகம் அளித்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்வதே மக்களின் பொறுப்பும் சிறப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஸலாஹுத்தீன்



# மௌனங்களின் தவறான மொழிபெயர்ப்பு

முஸ்லிம் பெண்களின் திருமண விடயங்களின்போது பெண்ணின் சம்மதம் பெரும்பாலும் பெறப்படுவதில்லை. நான்கைந்து பேர் வந்து பார்த்து விட்டுப் போன பிறகு ஆறாவது நபரை தனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால் வீட்டில் தனக்குக் கிடைக்கும் மரியாதை பற்றி தெரிந்து வைத்திருப்பதனால் பெண்கள் மௌனமாக இருந்து விடுகிறார்கள். அவர்களுடைய மௌனத்தை மொழிபெயர்ப்பதற்குரிய அவகாசம் இன்றியே அவர்களது திருமணம் கபூல் செய்யப்பட்டு விடுகிறது. இப்படித்தான் நமது சமூகத்தில் மௌனம் மொழி பெயர்க்கப்படுகிறது.

உத்தேச முஸ்லிம் தனியார் சட்ட திருத்தத்தில் இந்த மௌனம் சம்மதம் என்ற விவகாரம் பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதியாகப் பார்க்கப்பட்டு அது திருத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் இந்த விடயத்தில் உடன்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. திருமணத்தில் பெண்ணின் சம்மதம் எழுத்து மூலம் பெறப்பட வேண்டும் என்பது சட்டத் திருத்தத்தில் உள்வாங்கப்படவிருக்கிறது.

மௌனம் சம்மதத்தின் அடையாளமாக சமூகத்தினால் தவறாக மொழி பெயர்க்கப்பட்டு வருவதனை ஜம்இய்யதுல் உலமா புரிந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அல்குர்ஆனில் உள்ள சில வசனங்கள் தொடர்பில் பொதுபலசேனா கேட்ட கேள்விகள் விடயத்திலும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தனது மௌனத்தைக் களைய வேண்டும். இல்லாவிடில் இந்த மௌனமும் இலங்கை மக்களிடையே தவறாக மொழிபெயர்க்கப்படுவதன் பொறுப்பை ஜம்இய்யதுல் உலமா ஏற்க வேண்டும்.

பொதுபலசேனா அரசியல் காரணங்களுக்காக பௌத்த மதத்தைப் பாவிக்கின்ற ஒரு அமைப்பு என்ற வகையில், அல்குர்ஆன் தொடர்பில் அவர்கள் விளக்கம் கேட்பது மார்க்கத்தைப் புரிந்து கொள்வதற்காக அல்ல என்பது நிகாப் அணியாத உண்மையாகும்.
இலங்கையில் பௌத்த மதமும் புத்தர் சிலைகளும் அரசியலினதும் ஆக்கிரமிப்பினதும் அடையாளங்களாக மாறியிருப்பதை சிங்கள சமூகமே ஏற்றிருக்கிறது.

அரசியல்வாதிகளின் அடிவருடிகளாகிப் போன பௌத்த தலைமைகளிடம் இருந்து பௌத்த மதத்தைக் காப்பாற்ற முடியாத கையறு நிலைமையில் பௌத்த மக்கள் கலங்கிப் போயிருக்கிறார்கள். இந்த நிலையில் பௌத்த மதத் தீவிரவாதிகளின் நிகழ்ச்சி நிரல், நிச்சயமாக பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கல்ல என்பதை அவர்கள் விளங்கியே வைத்திருக்கிறார்கள். இதனால் பௌத்த தீவிரவாதிகள் கேள்விக்குட்படுத்தும் எல்லா விடயங்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் முஸ்லிம் சமூகத்துக்கு இல்லைதான்.

ஆனாலும் சத்திய இஸ்லாம் சந்தேகத்துக்குட்படுத்தப்படும்போது, அது கேள்விக்குள்ளாக்கப்பட்டு கேலி செய்யப்படும்போது நாங்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தால், இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்ற நல்லுள்ளங்களையும் நாங்கள் இழந்துவிட வேண்டியிருக்கும். அதைவிட தொண்ணூறு வருட ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டலில் இதுவரையும் இஸ்லாத்தை விளங்காமலிருக்கின்ற பெரும்பான்மை முஸ்லிம்களும் தமது மார்க்கத்திலேயே சந்தேகம் கொள்ளும் நிலைமையும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்த விடயத்தில் இனியும் மௌனம் காப்பது இஸ்லாத்தின் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கான சம்மதமாகவே கணிக்கப்படப் போகிறது என்ற வகையில் ஜம்இய்யதுல் உலமா இனியாவது வாய் திறக்க வேண்டும். அது SLTJ கடிதம் மூலம் கேட்டுக் கொண்டது போல ஞானசார தேரருக்கு நேரடியாக பதிலளிப்பதாக அமைய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

ஞானசார தேரரை நேரடியாகச் சந்தித்தமைக்காக ஜனாதிபதியையே நாங்கள் குறை கூறி வருகிறோம். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் அவர்களை புறக்கணிக்க வேண்டும் என்று நாங்கள்தான் பல மட்டங்களுக்கும் அழுத்தங்களைக் கொடுத்து வருகிறோம்.

இந்த நிலையில் அவர்களை ஒரு பொருட்டாகக் கருதி அவர்கள் கேட்கும் பொழுதெல்லாம் அவர்களுக்கு பதில் அளித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. அப்படி அளிக்கப் போனாலும் அவர்களை இயக்குகின்ற சர்வதேச சக்திகள் அடுக்கடுக்காக இன்னும் பல கேள்விகளை தொடராக முன்வைப்பார்கள் என்பதிலும் எள்ளளவும் சந்தேகமில்லை.

இந்த நிலையில் உசுப்பி விடும் போது மட்டும் உஷாரடைகின்ற உஷார் மடையன்கள் போல ஜம்இய்யதுல் உலமா தொழிற்படக் கூடாது. அவ்வாறானதொரு நிலைமை வருவதற்கு முன்னரேயே தொழிற்படுகின்ற வீரியம் அதனிடம் இருக்க வேண்டும்.

முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் ஜம்இய்யதுல் உலமாவின் அசமந்தப் போக்குதான் நிலைமையை பூதாகரமாக்கியது என்ற கருத்து சமூகத்தில் நிலவுகிறது. இந்தப் பதிவைப் போக்குவதற்கு ஜம்இய்யதுல் உலமா இதுவரை எந்த முயற்சியும் எடுக்காமல் மௌனமாகவே இருந்து வருகிறது. இதனால் ஜம்இய்யதுல் உலமா கல்லிலே குந்திய பூனை போல அமைதியாக இருக்கும் போதெல்லாம் ஜம்இய்யதுல் உலமா மீதான சந்தேகம் சமூகத்திலே வளர்வதற்கு வழியமைகிறது. இதனைப் போக்க ஜம்இய்யதுல் உலமா நடவடிக்கை எடுக்காவிட்டால் நம்பிக்கையான முஸ்லிம் தலைமை ஒன்றை சமூகம் இழக்க நேரிடுகிறது.

இதே போலத்தான் பொதுபல சேனா எய்திருக்கின்ற அம்பும். இந்த சந்தர்ப்பத்திலே முஸ்லிம்கள் மீதும் இஸ்லாத்தின் மீதும் நம்பிக்கை வைத்துள்ள முஅல்லபதுல் குலூபுகளை இந்தச் சந்தேகங்களில் இருந்து பாதுகாக்க வேண்டிய கடமை ஜம்இய்யதுல் உலமாவுக்கு இருக்கிறது.

மௌலானா மௌதூதியுடைய (ரஹ்) இதுதான் இஸ்லாம் புத்தகத்தின் சிங்களப் பிரதியொன்றைக் காட்டி, சபையிலே பேசிய பௌத்த பிக்கு ஒருவர், இதுதான் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இஸ்லாமாக இருந்தால், இலங்கையில் பௌத்தம் நீண்ட காலம் நீடித்து நிலைக்கப் போவதில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

இஸ்லாத்துக்கு எதிராகக் கிளப்பப்படும் சந்தேகங்களை இஸ்லாத்தை முன்வைப்பதற்கான சந்தர்ப்பமாக உலமாக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாதபோது இதுபோன்ற நல்ல பௌத்த தலைவர்களையும் பௌத்த மக்களையும் நாங்கள் இழந்து விடக் கூடும்.

முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தங்களை முன்வைப்பதற்கு தமக்கு காலக்கெடு எதுவும் தரப்படவில்லை என்றொரு நியாயம் ஜம்இய்யதுல் உலமாவால் முன்வைக்கப்பட்டது. அதேபோல பொதுபல சேனாவின் இந்தக் கடிதம் தொடர்பிலும் இது யாரையும் பெயர் குறிப்பிட்டு அனுப்பபடவில்லை என்று அதற்குப் பதில் அளிக்காமைக்கு காரணம் கூறப்பட்டது.

இது போன்ற சாக்குப் போக்குகள் வழிநடத்துகின்ற தலைமைகளுக்குப் பொருத்தமானதல்ல. ஜம்இய்யதுல் உலமா இஸ்லாத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருப்பதாகவே இலங்கை முஸ்லிம் சமூகம் நம்பிக்கொண்டிருக்கிறது. நிறைகுடம் தளும்பாது என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. ஆனாலும் ஒன்றுமே இல்லாத குடமும் தளும்பாது என்பதனையும் அறிவுள்ள சமூகம் தெரிந்து வைத்திருக்கிறது.

இதனால் இஸ்லாத்தைப் பற்றிய இதுபோன்ற சந்தேகங்கள் ஏற்படும் போது உலமாக்கள் அது தொடர்பிலான சரியான நிலைப்பாட்டை சமூகத்துக்கு சொல்லித் தர வேண்டும்.

இன்று ஆயுதம் ஏந்தியிருக்கின்ற ஐஎஸ் அமைப்போ போகோ ஹராம் அமைப்போ சில குர்ஆன் வசனங்களைச் சொல்லித்தான் ஆயுதமேந்தியிருக்கிறது. பிரதமரும் கூட 'இஸ்லாம் தவறாகப் புரியப்பட்டிருக்கிறது' என்று தேசிய மீலாத் விழாவின்போது கூறியிருக்கிறார். இதனால் இவற்றுக்கெல்லாம் பதிலளிக்கும் வகையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தனது மௌன விரதத்தை விரைவில் களைய வேண்டும்.

---

மிப்றாஹ் முஸ்தபா
படஉதவி: அனஸ் அப்பாஸ்

# மாகொல லேடி பரீத் முதியோர் இல்லம்

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் விரும்பியோ விரும்பாமலோ சந்திக்கின்ற பருவம் முதுமைப் பருவம். முதுமைப் பருவத்தை ஒரு மனிதனின் அந்திமப் பருவம் என்றும் சொல்லலாம். அன்போடும் கனிவோடும் அரவணைக்கப்பட வேண்டிய முதியோர்கள் நிறையவே கைவிடப்படக்கூடிய துரதிஷ்டமான நிலையே இன்று காணப்படுகின்றது.

குழந்தையொன்று பிறக்கும்போது அந்தக் குழந்தையை வளர்த்து உருவாக்குவதற்காக பெற்றோர்கள் செய்யக்கூடிய தியாகங்களுக்கு நிகராக இந்த உலகில் எதுவுமில்லை. தமக்கு இயலுமாக இருக்கின்ற காலத்தில் பிள்ளைகளுக்காக தமது இயலுமைக்கும் அதிகமாகவே பாடுபட்ட பெற்றோர்களை, அவர்களுக்கு இயலாமல் போகும் பருவத்தில் தூக்கி எறியும் சந்தர்ப்பவாதத்தை துரோகம் என்ற பெயரால் கூட வரையறுக்க முடியாது.

வயதான பெற்றோர்களைக் கைவிடுவது மிகப்பெரும் பாவம் என்பதே இஸ்லாத்தின் கோட்பாடு. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், பெற்றோருக்கு நோவினை செய்தல் என்பன பெரும் பாவங்களில் உள்ளவையாகும் என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள். அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடச் சிறந்ததொரு செயற்பாடுதான் பெற்றோருக்குப் பணிவிடை செய்வது.

ஒரு ஸஹாபி நபி (ஸல்) அவர்களிடம் வந்து ஜிஹாத் செய்வதற்கான அனுமதியைக் கேட்டபோது "உமது வயதான பெற்றோரைக் கவனி. அது ஜிஹாதை விட உமக்கு சிறந்தது" என்று அறிவுரை வழங்கினார்கள். நபி(ஸல்) அவர்கள் தமது வளர்ப்புத் தாயோடு எந்த அளவிற்கு அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொண்டார்கள் என்பதை அவர்களின் வாழ்வியலினூடாக அறிந்து கொள்ளலாம். ஹலீமா நாயகி நபியவர்களைப் பார்க்க வந்தபோது நபி(ஸல்) அவர்கள் உடனே எழுந்து தாம் போர்த்தியிருந்த போர்வையை தமது வளர்ப்புத் தாய் அமர்வதற்காகத் தரையில் விரித்து அவர்களை கௌரவித்திருக்கிறார்கள்.

இன்று எமது நாட்டில் வயதான பெற்றோர்கள் தமது பிள்ளைகளாலும் குடும்பத்தினராலும் துன்புறுத்தப்பட்டு கைவிடப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக எமது நாட்டில் சுமார் 287 முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன. இவற்றில் எமது சமூகத்தின் அவலத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மேல் மாகாணத்தின் மாகொல பிரதேசத்தில் அமைந்துள்ள லேடி பரீத் முதியோர் இல்லமும் ஒன்றாகும்.





உண்மையிலேயே இம்முதியோர் இல்லம் தமது உறவுகளால் கைவிடப்பட்ட முதியோர்களைப் பராமரிக்கும் உன்னதமான பணியைச் செய்து வந்தாலும், தமது உதிரத்தாலும் வியர்வையாலும் வளர்த்தெடுத்து, இந்த உலகை அறிமுகம் செய்து அதில் வாழக் கற்றுத் தந்த பெற்றோரை தான் மனைவியோடும் குழந்தைகளோடும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காக இத்தகைய முதியோர் இல்லத்தில் விட்டுச் சென்றுள்ளமை எக்காலத்திலும் மன்னிக்க முடியாத துரோகத்தனமேயன்றி வேறில்லை.

மாகொல லேடி பரீத் முதியோர் இல்லம் தமது உறவுகளால் கைவிடப்பட்ட முதியோர்களை சிறந்த முறையில் 'பராமரிக்க வேண்டும்' என்ற நோக்கில் 1957ஆம் ஆண்டு செப்டம்பர் 22ம் திகதி அன்றைய ஆளுனர் சேர் ஒலிவர் குணதிலகவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த முதியோர் இல்லத்தை அமைப்பதற்கான 193 பேர்சஸ் நிலம் சேர் ராஸிக் பரீத் அவர்களின் மனைவி அமீனா ராஸிக் பரீத் அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதன் பிறகு மெலிபன் கார்மன்ட்ஸ் உரிமையாளர் அல்ஹாஜ் இல்யாஸ் அப்துல் கரீம் தனது பெற்றோரின் நினைவாக சகல வசதிகளோடும் கூடிய கட்டிடத்தை நிர்மாணித்து, 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் 02ஆம் திகதி அது திறந்து வைக்கப்பட்டது.

தற்போது இம்முதியோர் இல்லம் சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தினால் (MICH) இயக்கப்படுவதுடன் முகாமைத்துவ சபையில் 7 பேர் அங்கம் வகிக்கின்றனர். . கடந்த காலங்களில் இம்முதியோர் இல்லத்தில் 35 இற்கும் அதிகமான வயோதிபர்கள் இருந்தாலும், தற்போது 12 பேர் (06 ஆண்கள், 06 பெண்கள்) உள்ளனர்.

"தங்கள் பிள்ளைகள், உறவினர்கள் எங்களை கைவிட்டு விட்டனர், நாங்கள் அநாதையாகி விட்டோமே" என்ற ஏக்கத்தைத் தவிர அமைதியான சூழல், சுகாதாரமான உணவு என சகல வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் மாகொல லேடி பரீத் முதியோர் இல்லத்தை நடாத்தி வருகின்ற முகாமைத்துவ சபை உறுப்பினர்களும் இங்குள்ள முதியோர்களும் எம்மோடு பகிர்ந்து கொண்ட உணர்வுகள் இவை.

**முஹைதீன் ரஜாப்தீன்**

தலைவர் - முகாமைத்துவ சபை, லேடி பரீத் முதியோர் இல்லம்.

இந்த முதியோர் இல்லத்தினூடாக 60 வயதுக்கு மேற்பட்ட, தங்குவதற்கு வீடு



வசதிகளற்ற முஸ்லிம் ஆண், பெண் முதியோர்களைக் கவனிக்கும் பணியை முன்னெடுத்து வருகின்றோம். இங்கு விடப்படும் முதியோர்களை யாராவது ஒருவர் பொறுப்பேற்கும் பட்சத்திலேயே நாம் இந்த முதியோர் இல்லத்தில் அவர்களை சேர்த்துக் கொள்கின்றோம். உடல் ஊனமான, மனநலம் பாதிக்கப்பட்ட முதியோர்களை நாம் பொறுப்பேற்பதில்லை.

வயதான ஒருவரை நாம் பாரமெடுப்பதற்கு நாங்கள் மாதாந்தக் கட்டணம் அறவிடுகின்றோம். நாம் அறவிடுகின்ற பணம் முழுவதையும் இங்குள்ள முதியோர்களின் நலன்களுக்காகவே செலவளிக்கின்றோம். இந்த முதியோர் இல்லத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதற்குப் பலர் பங்களிப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். எமக்கு உதவி செய்ய விரும்புபவர்கள் பின்வரும் வங்கிக் கணக்கில் பணத்தைச் செலுத்தி எமக்கு அறியத் தந்தால் அது பேருதவியாக இருக்கும். (Bank of Ceylon: 0000350911)

இந்த முதியோர் இல்லத்தில் 68 பேரை பராமரிப்பதற்கான வசதி காணப்படுகின்றது. இம்முதியோர் இல்லத்திற்கு முஸ்லிம் சமையல் காரர் ஒருவர் தேவைப்படுகிறார். அவருக்கான அனைத்து வசதிகளையும் நாம் செய்து கொடுப்போம். நான் ஒரேயொரு விடயத்தை இங்கு அழுத்திச் சொல்ல விரும்புகிறேன். அனைவருக்கும் முதுமைப் பருவம் வரும். எனவே, பெற்றோர்களுக்கு உபகாரம் செய்வது, அவர்களை கண்ணியப்படுத்துவது எம் அனைவரினதும் கடமை என்ற உணர்வு எப்போதும் எம்மிடம் இருக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பாக மதத்திற்கு அப்பால் மனிதர்கள் என்ற வகையில் அனைவருக்கும் தெளிவூட்ட வேண்டிய கடமை ஊடகங்களுக்கு இருக்கின்றது.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் பார்வையில் ரஷ்யத் தூதுவரின் படுகொலை

• முஹம்மத் பகீஹுத்தீன்

நயவஞ்சகன் பத்ஹுல்லா கோலனின் மறை கரம் இந்தக் கொலைக்குப் பின்னால் இருப்பதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளன. அதன் உண்மை நிலையை இன்னும் சில நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் பகிரங்கமாக சுட்டு வீழ்த்தும் பரபரப்பான இந்தக் கொலைச் சம்பவம், அது தொடர்பான காட்சித் தொகுப்புகள் அனைத்து ஊடகங்களிலும் வலம் வந்தன. சிரியாவிலும் ஈராக்-மௌஸூலிலும் இன்று யமனிலும் ஆயிரக்கணக்கான பொது மக்கள், வயோதிபர்கள், பெண்கள் குழந்தைகள் குத்திக் குதறிப் போடப்படுகிறார்கள். அப்பாவிப் பெண்கள் சூரையாடப்படுகிறார்கள். பட்டினியால் வாடும் சிரியா மக்கள் மீது கொத்து கொத்தாக தாக்கியழிக்கும் குண்டு மழை பொழிகின்றன. இதனைப் பார்ப்பதற்கு ஆளில்லை. கேட்பதற்கு வாயில்லை. ஆனால் ஒரு ராஜ தந்திரி கொலை என்றவுடன் உலகம் அதிர்ந்தது. கொட்டை எழுத்துக்களில் செய்தி வந்தது. இது இன்யறைய உலகின் சியோனிச ஊடக தர்மம்.

இந்த நேரத்தில் இருக்கின்ற ஆத்திரத்தை தீர்க்கும் வகையில் துருக்கியில் நடைபெற்ற அந்தக் கொலைச் சம்பவத்தை ஆதரித்தும் வாழ்த்தியும் செய்திகள் பரிமாறப்பட்டன. அதனால் பொது மக்கள் சந்தோசப்படும் ஒரு நிலையையும் காணமுடிகிறது. சில அறிஞர்களும் இதனை ஆதரித்து கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

ரத்தம் கொதிக்கும் இந்த வேலையில் இப்படியான நிகழ்வுகளை அணுகுவது எவ்வாறு? அதன் ஷரீஆ சட்டப் பின்புலம் யாது என்பது குறித்து மகாஸித் அறிஞர்களில் ஒருவரான வஸ்பி அபூ ஸைத் அவர்கள் காத்திரமான ஒரு பதிவை வெளியிட்டிருந்தார்கள். அதனை தழுவியே இந்த ஆக்கத்தை எழுதுகிறேன்.

'அலப்போவை மறக்காதீர்! சிரியாவை மறக்காதீர்! இந்த அநியாயத்தில் யார் யார் பங்கெடுத்தார்களோ அவர்கள் யாவரும் அதற்குரிய விலையை கொடுத்தாக வேண்டும். எமது நாட்டில் இல்லாத அமைதியை நீங்கள் மட்டும் உங்கள் நாட்டில் எப்படி நிம்மதியாக அனுபவிக்க முடியும்? நடக்காது. 'இது துருக்கிக்கான ரஷ்யாவின் தூதுவரை பகிரங்கமாக கொலை செய்த மௌலூத் மெர்த் அல்தின்தாஷின் வாசகமாகும்.

'அப்பாவி சிரியா மக்களை படுகொலை செய்த ரஷ்யர்களை காணுமிடமெல்லாம் இலக்குவைப்பது அவர்களுக்குரிய நியாயமான தண்டனையாகும். கொலைக்கு கொலை தான் பதில் நடவடிக்கை. பலிக்கு பலி தான்' இது ரஷ்யா தூதுவர் கொலை செய்த போது அகமகிழ்ந்த பொது மக்களின் ஆதங்கமாகும்.

கடந்த 19.12.2016 திங்கள் துருக்கியின் தலைநகர் அன்காராவில் நடைபெற்ற படுகொலை பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

பரபரப்பான இந்த சூழ்நிலையில் குறித்த கொலைச் சம்பவம் பற்றிய ஷரீஆவின் நிலைப்பாடு யாது என்பதில் பிழையான மனப்பாங்கும் மதிப்பீடுமே காணப்படுகிறது என்பது கசப்பான உண்மையாகும்.

அபயமளிக்கப்பட்டவர்களுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டவர்களுடனும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய இஸ்லாமிய சட்டங்களை விளங்குவதில் தெளிவின்மை காணப்படுவதைத்தான் மேலுள்ள மக்கள் வாசகமும் கொலையாளியின் கூற்றும் எமக்கு சொல்லும் செய்தியாகும்.

ஷரீஆ சட்ட வரம்புகள் எமது உணர்ச்சிகளை விட உயர்ந்ததாகவே இருக்க வேண்டும். பொங்கிவரும் எமது உணர்ச்சிகள் நியாயமானதாக இருந்தாலும் சட்டத்தின் வரம்புகளால் அதற்கு நாம் கடிவாளமிடத்தான் வேண்டும். எந்தப்பாவமும் செய்யாத அப்பாவி சிரிய மக்களை கொத்து கொத்தாக கொலை செய்து நாட்டையும் அதன் முதுசங்களையும் கபளீகரம் செய்த ரஷ்யப் படையையும் ஈரான் படையையும் பழிவாங்க வேண்டும் என்ற ஆசை மேலீட்டால் இஸ்லாமிய சட்ட வரம்புகளை மீற முடியாது. அது தர்மமும் அல்ல. தவறுகள் நடைபெறலாம். அதற்காக சட்ட அங்கீகாரம் வழங்க முடியாது என்ற யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

சிரியா மண்ணில் தற்போது மனித ரத்தம் உறிஞ்சும் ரஷ்யர்களும் ஈரானியர்களும் அஸதின் மிருகங்களும் மனிதம் இழந்தவர்கள் என்பதில் இரு கருத்துகள் கிடையாது. அவர்கள் குற்றாவிகள் என்பதில் அணுவளவேனும் சந்தேகமில்லை. அந்தக் கயவர்கள் கண்டனத்துக்குரியவர்களே. உலகமே மௌனமாக கை கட்டி வாய் பொத்தி பார்த்திருக்க பல்லாயிரக்கணக்கான உயிர்களை அவர்கள் கொலை செய்யும் போது பேசாமல் இருக்க முடியாது.

ஒட்டு மொத்த சட்டங்களையும் மீறி பட்டப்பகலில் ஒரு நகரம் படுகொலை செய்யப்பட்ட போது வாய் பொத்திய உலகம் ஒரு ராஜதந்திரியின் உயிருக்காக வானம் இடிந்து விழுந்தது போல் எழும்பி நிற்பதை விமர்சிப்பதில் எந்த தவறுமில்லை. அந்த அநியாயத்தை தட்டிக் கேட்பது எமது உரிமை. அதற்காக குரல் கொடுப்பது எமது கடமை. சுற்றியுள்ள துரோகிகளையும், இதுவரை மௌனம் காக்கும் அரபு சமூகத்தையும் விழித்துப் பேசுவது, திட்டுவது அல்லது ஆத்திரம் தீர வார்த்தைளை கொட்டுவது தவறல்ல.

ஆனால் இதனை காரணம் காட்டி நிலையான ஷரீஆ சட்டத்தை மாற்றுவதற்கோ அல்லது எமது விருப்பப்படி பதிலீடுகளை கொண்டுவருவதற்கோ அனுமதி கிடையாது. பொது மக்களின் ஆசாபாசம் இதற்கு மாற்றமாக இருந்தாலும் சரியே. பொதுக் கருத்துக்கு பின்னால் நிலையான ஷரீஆ சட்டங்களை இழுத்து கொண்டு செல்ல முடியாது.



ரஷ்யா தற்போது போராடும் நிலையில் உள்ள ஒரு நாடு. எமது நிலங்களில் உள்ள முஸ்லிம்களை கொலை செய்கிறார்கள். எனவே பழி வாங்குவது எமது கடமை தானே என சிலர் தமது வாதங்களை முன் வைக்கலாம். இது தவறான மறுக்கப்பட வேண்டிய வாதமாகும்.

கொலை செய்யப்பட்ட ரஷ்யாவின் தூதுவர் இஸ்லாமிய நாடொன்றின் உடன்படிக்கையில் ஒப்பந்தம் செய்தவர். ஒப்பந்த அடிப்படையில் முஸ்லிம் நாடுகளில் உள்ள ராஜதந்திரிகள், தூதுவர்கள், வியாபாரிகள் போன்ற அனைவரும் பாதுகாப்பு பெற்றவர்களே. அவர்கள் போராடும் நிலையில் உள்ள நிராகரிப்பாளர்களாக இருந்தாலும் சரியே.

இறை தூதர் (ஸல்) அவர்கள் அவர்கள் அனுப்பிய தூதுக் குழுக்கள் பல தடவைகள் வஞ்சிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்த வேளையில், இறை நிராகரிப்பாளர்களின் தூதுக் குழுக்கள் நபிகளாரிடம் வந்தபோது யாரையும் பழிவாங்கவும் இல்லை. கொலை செய்யவுமில்லை. பதிலாக அவர்கள் தங்கள் இருப்பிடம் திரும்பிச் செல்லும் வரை பாதுகாப்பும் கொடுத்தார்கள். இது தான் நபிகளார் காட்டித் தந்த அரசியல் வரலாறு. இன்றும் இந்த நிலை தான் இங்கு நிலவுகிறது.

இது போன்ற கொடுமைகள் நிகழும் நெருக்கடியான நிலமைகளில் சட்டரீதியான அரசியல் வழிமுறைகளை பின்பற்ற முடியும். ராஜதந்திரிகளை நீக்கலாம் அல்லது பொருளாதார மற்றும் ராஜதந்திர உறவுகளைத் துண்டிக்கலாம். சிரியா மண்ணில் எதிரிகளுக்கு எதிரான போராட்டத்தில் கூட்டிணையலாம். இப்படி பல சட்ட அங்கீகாரமுள்ள வழிகளை பின்பற்றலாம். மாறாக ஒப்பந்த அடிப்படையில் வாழும் பிரஜைகளை சுட்டு வீழ்த்த முடியாது.

பொய் நபியான முஸைலமா தனது இரு தூதர்களை நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பிவைத்தான். நபி (ஸல்) அவர்கள் அந்த இருவரிடமும் தான் அல்லாஹ்வின் தூதர் என்பதற்கு சான்று பகர்கின்றீர்களா என வினவியபோது, இல்லை முஸைலமா தான் அல்லாஹ்வின் தூதர் என நாம் சாட்சியம் கூறுகின்றோம் என பதில் சொன்னார்கள். உடன நபிகளார் நான் அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் ஈமான் கொள்கின்றேன். தூதுவராக வந்தொருவனை கொல்பவனாக நான் இருந்தால் உங்கள் இருவரையுமே கொண்டிருப்பேன் என்றார்கள். தூது கொண்டுவரும் ராஜதந்திரிகள் கொலை செய்யப்பட மாட்டார்கள் என்பதே நபி வழியாக நடைமுறையில் இருந்து வந்தது என இந்த ஹதீஸை அறிவித்த இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல் அஹ்மத்)

'முஸ்லிம் தரப்போடு ஒப்பந்தம் செய்து கொண்ட ஒரு குடிமகனை யார் கொலை செய்கிறானோ அவன் சுவன வாடையைக் கூட நுகரமாட்டான்' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ்வின் அம்ர் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (நூல்: புகாரி)

மக்கா வெற்றியின் போது மக்ஸூம் கோத்திரத்தை சேர்ந்த இருவர் உம்முஹானி (ரழி) அவர்களிடம் பயந்தோடி வந்து அபயம் கேட்டார்கள். அவ்விருவருக்கும் உம்முஹானி (ரழி) அவர்கள் முறைப்படி அபயம் கொடுத்தும் கூட அவ்விருவரையும் பின்தொடர்ந்து தேடி வந்த அலி (ரழி) அவர்கள் நான் அவர்கள் இருவரையும் கொலை செய்வேன் என சூழுரைத்தார்கள். அப்போது உம்முஹானி (ரழி) அவர்கள் நபிகளாரிடம் அவசராமா ஓடிவந்து விடயத்தை கூறினார்கள். நீர் உயிர் பிச்சை கொடுத்த இருவர்களுக்கும் நாமும் பாதுகாப்பு கொடுப்போம் என நபி (ஸல்) தீர்ப்பு சொன்னார்கள். உம்முஹானி (ரழி) அவர்கள் அலி (ரழி) அவர்களின் உடன் பிறந்த சகோதரியாவார். மக்கா வெற்றியின்போதே இஸ்லாத்தை தழுவினார்கள். போராட்ட சூழலில் இஸ்லாத்தை தழுவிய ஒரு பெண் தன் சொந்தங்களுக்காக அபயம் கொடுக்கிறாள். நபிகளார் அதனை அங்கீகரிக்கின்றார்கள்.

தூதுவர்கள், ராஜதந்திரிகள், வீசாவுடன் நாட்டுக்குள் வரும் பிரஜைகள் அல்லது வேறு அனுமதிகளோடு நாட்டுக்குள் பிரவேசிக்கும் பிரஜைகள் யாவரும் ஒப்பந்தம் செய்து கொண்ட பிரஜைகளே. அவர்கள் போராடும் குழுமத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒப்பந்த அடிப்படையில் அவர்கள் பாதுகாப்பு பெற்றவர்கள். அவர்களின் உயிர் உடமை பாதுகாக்கப்படுவது கட்டாயமாகும் என்பதே நவீன கால இஸ்லாமிய அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும். ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது கண்டிப்பான கடமையாகவே அல்குர்ஆனின் பல வசனங்கள் முஸ்லிம்களை பணிக்கிறது.

இந்தக் கொலைச் சம்பவம் நடைபெற்ற நாடு இங்கு எமது கவனத்தை ஈர்க்க வேண்டிய இன்னொரு விடயமாகும். துருக்கியை வீழ்த்துவதற்கு எதிரிகள் பகீரதப் பிரயத்தனம் எடுத்துள்ளார்கள். 2016 ஜுலை 15ல் அர்துகானின் அரசுக்கு எதிராக ராணுவம் சதிப் புரட்சி செய்து தோல்வி கண்டது. அதனைத் தொடர்ந்து சதிகாரக் கும்பல் பொருளாதார நெருக்கடி கொடுத்தது. அதுவும் பயனளிக்காத போது குண்டு வெடிப்புக்கள் மூலம் நாட்டை தீ மூட்டப் பார்க்கின்றனர். ஷரீஆ சட்டம் தடை விதித்துள்ள சட்டங்களை மீறி ராஜதந்திரிகளை கொலை செய்வதன் மூலம் குழப்பத்தை கொண்டுவர முயல்கின்றனர். எனவே நிகழ்வுகள் பல பல்வேறு வடிவங்களில் அரங்கேறலாம். நாம் உணர்ச்சிக்கு இடம் கொடுக்காது கவனமாக காய் நகர்த்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். தவறும் போது எதிரியின் திட்டத்திற்கு கூலியின்றி வேலை செய்பவர்களாக மாறிவிடுவோம்.

நயவஞ்சகன் பத்ஹுல்லா கோலனின் கூலிப்படைகளில் ஒருவனே இந்தக் கொலையை செய்துள்ளதாக துருக்கிப் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். ஆரம்ப கட்ட விசாரணையின் போது இது தெரியவந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

துருக்கி முஸ்லிம் உம்மாவின் கவலைகளை தோலில் சுமக்கும் ஒரே ஒரு நாடாக எஞ்சியுள்ளது. அதன் கழுத்தை அறுத்துவிட சதிகாரக் கும்பல் கண்விழித்து அயராது பாடுபடுகிறது. எனவே இப்படியான நிகழ்வுகள் நிகழும் போது உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை அள்ளி வீசக் கூடாது. பொய்யர்கள் அழிய வேண்டும் என்று எல்லோருக்கும் ஆசைதான். அதற்கா சட்டங்களையும் நிலையான ஷரீஆ நியதிகளையும் மீறக் கூடாது. அசத்தியம் அழியும். அது அழிந்தே தீரும். அதற்காக எமது போராட்ட வழிகள் அசத்தியத்தின் மீது எழுந்து நிற்க வேண்டிய தேவையில்லை. சத்தியம் இறுதியில் வெல்லும். பொறுமை காத்துப் போராடுவதே எமது பொறுப்பாகும்.

---

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியல் போக்கு வரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.




## குத்ஸ் நகரமும் இன்றைய நிலையும்

சென்றவாரத் தொடர்...

இஸ்ரவேலுக்கு எதிராக பல சர்வதேச தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐ.நா சபையும், பாதுகாப்பு சபையும் கிழக்கு குத்ஸ் பிரதேசத்தை இஸ்ரேல் தன்னோடு இணைத்துக் கொள்வதை மறுத்துள்ளது. குத்ஸ் நகரின் தற்போதைய நிலையில் சட்ட, நிர்வாக, சட ரீதியாக எந்த மாற்றத்தை செய்வதனையும் அது ஏற்றுக் கொள்ளவில்லை. சர்வதேச சட்டத்தின்படி இவை அத்துமீறலாகும். இந்த தீர்மானங்களின் பிரகாரம் இஸ்ரேல் காஸா, மேற்குக் கரை, குத்ஸ் பிரதேசத்திலிருந்து உடனடியாக வெளியேறிவிட வேண்டும்.

இத்தகைய முதல் தீர்மானம் 04/07/1967 ல் ஐ.நா வின் தீர்மானமாக பொதுச்சபையில் தீர்மானிக்கப்பட்டது. இதன் இலக்கம் 2253 ஆகும். குத்ஸ் நகரை இஸ்ரேல் இணைத்துக் கொண்டபோது ES 712 என்ற இலக்க சட்டமும் நிறைவேற்றப்பட்டது. இது 29/07/1980 நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும். 112 மேலதிக வாக்குகளினால் இது நிறைவேற்றப்பட்டது. 7 நாடுகள் எதிராக வாக்களித்தன. 24 நாடுகள் தவிர்ந்து கொண்டன. ஆக்கிரமித்துக் கொண்ட பகுதிகளில் இருந்து நிபந்தனையின்றி உடனடியாக வெளியேற வேண்டும் என்று அந்தத் தீர்மானம் குறிப்பிடுகிறது.

30/07/1980 இல் பாதுகாப்பு சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 14 மேலதிக வாக்குகளால் அது வெற்றியும் அடைந்தது. அமெரிக்கா தலையிட்டு இத்தீர்மானத்தை மாற்றியமைத்தது.

இப்படியாக பல தீர்மானங்களில் பலஸ்தீனர்களின் உரிமை ஏற்கப்பட்டபோதும் இஸ்ரேலை நிர்ப்பந்திக்க யாரும் இருக்கவில்லை.

### பலஸ்தீன் மக்களின் [illegible]

ஷகபா பிரதேசத்தில் நதூப் பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சி, அங்கு கிடைத்த சிலாசனங்களின் அடிப்படையில் பலஸ்தீனர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை சேர்ந்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. மத்திய தரைக்கடல் பரம்பரை அலகை உடையவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

கி.மு 3000களில் செமித்தியர்கள் அரபு தீபகற்பத்திலிருந்து தொடராக இடம்பெயர தொடங்கினார்கள். இதனூடாக அவர்கள் மிகைத்து விட்டார்கள். கி.மு 2500களில் கன்ஆனியர்கள் பலஸ்தீனுக்கு வந்தார்கள். கி.மு 1500களில் மஆபியா, இதூமியா, அமூனியா கோத்திரங்களை சேர்ந்த செமித்தியர்கள் தென்சிரியா பிரதேசங்களில் குடியேறினார்கள். இது சாக்கடலுக்கும் அகபா தீபகற்பத்திற்கும் இடைப்பட்ட பிரதேசமாகும். கி.மு 500களில் மூன்றாம் முறையாகவும் செமித்தியர்கள் ஷாம் தேசத்தின் அன்பாத் பிரதேசத்தில் குடியேறினார்கள். (பலஸ்தீன் கலைக்களஞ்சியம் பாகம்: பக் 362)

இன்னொரு பகுதியிலிருந்தும் பலஸ்தீனுக்கு மக்கள் இடம்பெயர்ந்தார்கள். ஈஜா தீவிலிருந்தும் சின்னாசியாவின் மேற்கு பிரதேசங்களில் இருந்தும் கடலோரக் குடிகள் கி.மு 1200 களில் பலஸ்தீனை நோக்கி வந்தார்கள். இவர்கள் பலஸத (PLST) என்று பிரபலமானார்கள். இவர்கள் மிக விரைவாக கன்ஆனியர்களுடன் கலந்துவிட்டார்கள்.

பனூ இஸ்ராஈல்கள் (யஃகூப் நபியின் சந்ததிகள்) கி.மு 12ம் நூற்றாண்டுகளில் (கி.மு 1230) மூஸா (அலை) தலைமையில் பலஸ்தீனில் பிரவேசிக்க முயற்சி செய்தார்கள். பின்னர் அவர்கள் பலஸ்தீனின் வடகிழக்கு பிரதேசங்களில் நிலை கொண்டார்கள். அவர்களது ராஜ்யமான ''இஸ்ராஈல்'' கி.மு 721 இல் வீழ்ச்சியடைந்ததை தொடர்ந்து அவர்களின் 12 கோத்திரங்களில் 10 கோத்திரங்கள் ஈராக் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து விட்டார்கள். இதேபோன்று கி.மு 597, 586 களிலும் பெரும்தொகையிலான யூதர்கள் ஈராக்கை நோக்கி சென்றுவிட்டார்கள். அக்காலத்தில் பலஸ்தீனில் மிகக் குறைவான யூதர்களே காணப்பட்டார்கள்.

இதன் பின்னரான காலத்தில் சில யூத எழுச்சிகள் ஏற்பட்டு மகாபிய்யா குடும்பத்தினரின் தலைமையில் சுயாட்சியை (கி.மு 165-37) நிறுவினார்கள்.

தொடரும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 இல் இலங்கையில் வீதி விபத்துகள்



## சட்டங்கள் மாத்திரம் குற்றங்களைக் குறைக்குமா?

நாளாந்தம் வீதி விபத்துக்களில் மக்கள் இறக்கும் நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். வீதி விபத்துக்களின் எண்ணிக்கை 2016 இல் ஜனவரி முதல் நவம்பர் வரை எத்தனை எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2635 விபத்துகள் இவ்வாண்டில் இடம்பெற்றுள்ளன. இதில் டிசம்பர் மாதம் உள்ளடக்கப்படவில்லை. 2015 இல் இது 2587 ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இறந்தோரில் 773 பாதசாரிகளும் 885 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களும் 214 சாரதிகளும் 395 பயணிகளும் 216 துவிச்சக்கர வண்டி ஓட்டுநர்களும் உள்ளடங்குவர்.

எவ்வகை வாகனங்களால் அதிகளவிலான விபத்துக்கள் நமது நாட்டில் இடம்பெற்றுள்ளன என்பதை பாதை பாதுகாப்புக்கான தேசிய சபை மதிப்பிட்டுள்ளது. அதன்படி ஆகக் கூடிய எண்ணிக்கையிலான விபத்துகளுக்குக் காரணமாக இருப்பது மோட்டார் சைக்கிள்களாகும். அதன் மூலம் 2015 இல் 1000 மரணங்களும் 2016 இல் 1200 மரணங்களும் சம்பவித்துள்ளன. முச்சக்கர வண்டிகளால் 2015 இலும் 2016 இலும் 380 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. அதற்கடுத்த இடத்தில் சிறிய வகை லொறிகள், தனியார் பஸ் வண்டிகள், வேன்கள், கார்கள், கெப் ரக வண்டிகள், அரச பஸ் வண்டிகள் என்பன வகைப்படுத்தப்பட்டுள்ளன.

டிரெக்டர்கள், ஜீப் வண்டிகள், கொள்கலன் வண்டிகள் மட்டுமன்றி, சாதாரண துவிச்சக்கர வண்டிகள் மற்றும் லேன் மாஸ்டர்கள் தொடர்பான மரணங்களும் குறிப்பிட்டளவில் சம்பவித்துள்ளன. இவற்றுள் முச்சக்கர வண்டிகளால் ஏற்படும் விபத்துகள் பற்றி கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபையின் தலைவர் டொக்டர் சிசிர கொடாகொட தெரிவித்துள்ளார்.

2016 இல் மாத்திரம் ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் 358 மரணங்கள் முச்சக்கர வண்டியினால் ஏற்பட்டுள்ளன. மணித்தியாலத்திற்கு 50 கி.மீ. வேகத்தில் முச்சக்கர வண்டிகள் செலுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது என்று சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஆனாலும் முச்சக்கர வண்டிக்காரர்கள் மணித்தியாலத்திற்கு 50 கி.மீ. வேகத்தையும் தாண்டிச் செல்கின்றனர்.

மிகப் பாரம் குறைந்த வாகனம் என்பதனால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள வேகத்தின் அளவு சட்ட ரீதியில் குறைக்கப்படுவதோடு, சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான வயதெல்லையும் அதிகரிக்கப்பட வேண்டும் என பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவிடம் கடந்த வாரம் இது தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டி இறக்குமதியாளர்களைச் சந்தித்த டொக்டர் கொடாகொட, மணித்தியாலத்திற்கு 40 கி.மீ. அளவில் அவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கு இறக்குமதியாளர்கள் உடன்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதி கூடிய வேகம் பாரம் குறைந்த இவ்வகை வாகனங்களைப் பாதைகளில் இலகுவாகப் புரளச் செய்கின்றது. சாரதிகளின் கட்டுப்பாட்டை மீறுகின்றது. இதன் விளைவாகவே அதிகமான மரணங்கள் சம்பவிக்கின்றன.

மாதத்திற்கு 2000 முச்சக்கர வண்டிகளை இறக்குமதி செய்யும் ஒரு கம்பனி, மணித்தியாலத்திற்கு 40 கி.மீ. என்ற அளவில் முச்சக்கர வண்டியின் வேகத்தை மட்டுப்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. சில முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் கழுத்திற்கும் தோள்பட்டைக்கும் இடையில் செல்லிடத் தொலைபேசிகளைத் திணித்து பேசிக் கொண்டே ஓட்டுகின்றனர். அது சாரதியின் கவனத்தைக் கலைத்து விபத்துக்களை ஏற்படுத்துகின்றன என வீதிப் போக்குவரத்து உப பொலிஸ் பரிசோதகர் பாலித பெர்னான்டோ தெரிவிக்கின்றார்.

கடந்த 11 மாதங்களில் நடந்த 325 மிக ஆபத்தான முச்சக்கர வண்டி விபத்துகளில் 345 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில் 300 முச்சக்கர வண்டி விபத்துக்களிலர் 350 பேர் உயிரிழந்தனர்.

முச்சக்கர வண்டிகள் தவிரவும் மோட்டார் சைக்கிள்கள், தனியார் பஸ் வண்டிகள், லொறிகள் மூலம் ஏற்படும் விபத்துகளும் அதிகரித்து வருகின்றன. கடந்த பத்தாண்டுகளில் வருடாந்தம் 2500 இற்கும் அதிகமானோர் வீதி விபத்துக்களில் இறந்துள்ளனர். அவர்களில் சாரதிகள், பயணிகள் மற்றும் பாதசாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

இலங்கையில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்த அளவுக்கு வீதிகள் விஸ்தரிக்கப்படவில்லை என்பது சிலரது குற்றச்சாட்டாகும். ஆனால் மது போதையில் வாகத்தை ஓட்டுதல், தூக்கத்தில் வாகனம் ஓட்டுதல், அதிவேகமாக ஓட்டுதல் போன்ற காரணங்களே விபத்துகளை ஏற்படுத்துகின்றன.

வீதி ஒழுங்குகளை மீறுவோருக்கு எதிரான தண்டப் பணம் 25,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம், விபத்துக்களால் ஏற்படும் மரணங்களைக் குறைக்கவே என்கிறது அரசாங்கம். ஆனால், சாரதிகள் அருந்தும் மதுபானத்திற்கான தவறணைகளுக்கு அனுமதி வழங்குவதும் அரசாங்கமே. நடைமுறைப்படுத்தலுக்கான கள ஒழுங்குகளைக் கவனிக்காமல் வெறுமனே சட்டத்தை இறுக்கமாக்குவதனால் விபத்துக்களைக் குறைக்க முடியாது. இதைத்தான் இலங்கையில் அதிகரித்து வரும் விபத்துக்கள் உணர்த்தியுள்ளன.

# ஆர்வத்துடன் கூடிய தேடல் நினைவாற்றலை அதிகரிக்கும்



மனித உளவியல் குறித்த அறிவியல் ஆராய்ச்சிகள் நாளாந்தம் முன்னேறி வருகின்றன. மனித மூளை பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்ற வண்ணம் உள்ளன. நரம்பியல் மற்றும் மூளை தொடர்பான சமகால ஆராய்ச்சிகள் மனிதனின் நினைவாற்றல் பற்றி பல வியத்தகு உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன. அமெரிக்காவிலிருந்து வெளிவரும் பிரபல ஆய்வுச் சஞ்சிகையான Neurology இல் சமீபத்தில் வெளியான தகவலொன்று பின்வருமாறு அமைந்துள்ளது.

தனக்கு மிக ஆர்வமான துறையொன்றில் ஒருவர் தனது தேடலை விசாலப்படுத்துவாராயின், அது குறித்த அவரது மூளையின் செயற்பாடுகள் உச்சம் பெறுவதோடு, அதன் விளைவாக குறிப்பிட்ட துறை தொடர்பான தகவல்கள் மூளையில் இலகுவாகவும் அதிகமாகவும் தங்கிவிடுகின்றன. அதாவது ஆர்வத்துடன் கூடிய தேடல் நினைவுத் திறனை அதிகரிக்கின்றது என்பதே அச்சஞ்சிகை குறிப்பிட்டுள்ள உண்மையாகும்.

ஐக்கிய அமெரிக்காவில் டேவிஸ் என்ற நகரில் அமைந்துள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆய்விலேயே இவ்வுண்மை கண்டு பிடிக்கப்பட்டது. நாட்டம் கொண்ட துறையொன்றில் தேடலில் ஈடுபடுகையில் மூளையின் செயற்பாடுகளை அவதானிக்கும் ஆய்வொன்று அங்கு முன்னெடுக்கப்பட்டது.

அப்பலைக்கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் ஆய்வாளர்களான சாரல் ரங்கனாத், மெத்யூஸ் குரூபர், பேர்னாட் கல்மென் ஆகியோர் இந்த ஆய்வில் ஈடுபட்டனர். ஆய்வில் இரு வழி அணுகுமுறைகள் கையாளப்பட்டன.

1. வெளிப்படையான நடத்தைகளை ஆராய்தல்

2. மூளையின் அகப் பகுதியிலான இரசாயன மாற்றங்களை அவதானித்தல்

மேற்படி ஆய்விதழில் இந்த ஆராய்ச்சியின் முடிவுகள், States of Curiosity modulate heppocompus dependant learning via the dopaminergic cercuit எனும் தலைப்பில் வெளியாகியுள்ளது. இந்த ஆய்வில் ஈடுபட்டவர்கள் பல்துறை சார்ந்த வினாக்களை தயார்செய்து, ஆவர்வமூட்டும் வகையில் வினாக் கொத்துக்களாக தயாரித்தனர்.

ஆய்வில் ஈடுபடுத்தப்படுவதற்காக குறிப்பிட்ட குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிடம் மேற்குறிப்பிட்ட கேள்வித் தொகுப்பிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டன. இவர்களின் முன்னே வைக்கப்பட்ட திரையில் முதலில் வினா காண்பிக்கப்பட்டன. பின்னர் அந்த வினாவுக்கான விடையினை திரையில் காண்பிப்பதற்கு இடையில் 14 செக்கன் நேர இடைவெளி தரப்பட்டது.

இந்த இடைவெளியின்போது திரையில் ஒரு தொடர்பற்ற முகமொன்று இரு செக்கன்களுக்குள் தோன்றி மறைந்தது. அதற்குப் பின்னர் மற்றைய கேள்வி திரையில் காண்பிக்கப்பட்டது. இவ்வாறாக உற்சாகம் தருபவை, ஆர்வத்தினை தராதவை என்ற வகையான பல்துறை வினாக்கள் வினவப்பட்டதுடன், பின்னர் முகமொன்று காண்பிக்கப்பட்டு, பின்னர் அதற்கான பதில்களும் வழங்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட அதேவேளை, அதில் பங்குபற்றியோரின் மூளை மாற்றங்கள் FMRI (Functional Megnatic Resonance Imaging) கருவிகளின் உதவியுடன் அவதனிக்கப்பட்டது. பின்னர் ஆய்வில் ஈடுபடுத்தப்பட்ட நபர்களின் நினைவாற்றல் பரிசோதிக்கப் பட்டது.

ஆர்வமூட்டும் வினாக்கள் தொடுக்கப்படுகையில் காண்பிக்கப்பட்ட வினாவுடன் தொடர்பற்ற முகம் அவர்களுக்கு நினைவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதேபோல் எதிர்பார்ப்பினை தராத வினாக்கள் காண்பிக்கப்பட்ட வேளை, தோன்றி மறைந்த முகத்தினை பெரும்பாலானவரால் நினைவுபடுத்த முடியாமல் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

FMRI ஊடான அவதானிப்பின்போது ஆர்வமூட்டும் வினாக்கள் திரையில் காட்சிப்படுத்தப்பட்டு, பதிலுக்காக 14 செக்கன்கள் காத்திருந்த வேளை, மூளையின் ஹிபகொம்பஸ் பகுதி உயர் செயல் திறனுடன் இருந்தமை பதிவு செய்யப்பட்டிருந்தது. மூளையின் இக்குறிப்பிட்ட பகுதியே தரவுகளை நினைவில் வைப்பதற்கு உதவும் பகுதியாகும். இந்த ஆய்விலிருந்து எதிர்பார்ப்புடன் கூடிய தேடல் மூளையின் நினைவாற்றலை அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஒரு மாணவன் ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் ஒன்றைக் கற்கும் போது நினைவாற்றல் சிறப்பாகச் செயல்படுகின்றது. கற்றலில் எதிர்பார்ப்போ ஆர்வமோ இல்லாத நிலை நினைவாற்றலை பாதிக்கின்றது என்பதே இதன் மறு அர்த்தமாகும்.

வீடுகளில் மாணவர்கள் கற்கும்போது அவர்களின் தேடல் ஆர்வமுள்ளதாகவும் எதிர்பார்ப்புள்ளதாகவும் இருக்க வேண்டும்.




# உடற் பயிற்சி மூலம் கிடைக்கும் 3 ஹோமோன்கள்

உடற் பயிற்சி செய்வதால் எவ்வாறான பயன்கள் கிட்டுகின்றன. உடற் பயிற்சி மூலம் உடலில் ஏற்படுகின்ற இரசாயன மாற்றங்கள் எவை? அழகான உடலமைப்பு என்பதைத் தாண்டி, நாம் உடற் பயிற்சி செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?

உடற் பயிற்சி செய்வதால் நமது உடலில் ஹோமோன்கள் சுரக்கின்றன. உடற் பயிற்சியால் மட்டுமே சுரக்கக் கூடிய அந்த ஹோமோன்கள் நம் உடலுக்கு முக்கியம் தேவையானவை. அவற்றுள் ஒன்று ஐரிசின் (Irisin). இதற்கு எக்ஸசைஸ் ஹோமோன் என்று இன்னொரு பெயரும் உள்ளது.

உடற் பயிற்சி செய்யும்போது இரத்தத்தில் சுரக்கக் கூடிய இந்த ஹோமோன் ரத்த திசுக்கள், திட்டுக்களை உடல் முழுக்கப் பரப்பும் வேலையைச் செய்கிறது. உடலில் இருக்கின்ற கொழுப்புகள் ஒரே இடத்தில் தேங்கி விடாமல் உடல் முழுக்கப் பரப்பும் வேலையை ஐரிசின் செய்கிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமாயின், உடலின் எரிபொருள் சக்தியாக இந்த ஹோமோன் செயல்படுகின்றது. மட்டுமன்றி, இந்த ஹோமோன் குரோமசோமின் வால்ப் பகுதி வளர்வதற்கு உதவி செய்கிறது. குரோமசோமின் வால் பகுதி வளர்ந்தால்தான் உடல் ஆரோக்கியமாக இருக்கும். வளரவில்லை என்றால் புற்றுநோய், இரத்த அழுத்தம், முதுமையில் ஞாபக மறதி போன்ற பிரச்சினைகள் ஏற்படும். அதனால் தேவையான ஐரிசின் உடற் பயிற்சி மூலம் மாத்திரமே பெறப்படுகின்றது.

இரண்டாவது ஹோமோன், பெப்டிட் வைவை என்பதாகும். இது வயிற்றில் சுரக்கக் கூடிய ஹோமோன். இதுவும் உடற் பயிற்சியால் மட்டுமே சுரக்கின்றது. நாம் உண்ணக் கூடிய உணவு, போதும் என்ற மனநிறைவை ஏற்படுத்துவது பெப்டிட் ஹோமோனின் பிரதான செயல்பாடாகும். இந்த ஹோமோன் சுரக்கச் சுரக்க உணவுகள் மூளைக்கு உந்தப்பட்டு, நமது உணவுத் தேவையை தீர்மானிக்கிறது. பசியைத் தூண்டும் வேலையையும் இதுவே செய்கிறது.

மூன்றாவது ஹோமோன் டெஸ்ரோஸ்டிரோன். இது விதைப் பையில் சுரக்கக் கூடிய ஹோமோன். இப்போது அநேகமானோர் ஆண்மைக் குறைவால் அவதிப்படுகின்றனர். லேகியம் மற்றும் சித்த வைத்தியத்தை தேடிச் செல்கின்றனர். பாலியல் உறவுக் குறைபாடு உள்ளவர்களாக இருப்பவர்கள் அதனால் ஏற்படும் மனக் குழப்பத்திற்கு ஆளாகின்றனர். அதற்கு மிக முக்கிய காரணம் உடற் பயிற்சி இன்மையே. மேற்குறிப்பிட்ட ஹொமோன் சரியான அளவில் சுரக்குமாயின், அது பாலியல் ரீதியான பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவில் சமூக... (01 ம் பக்கத் தொடர்)

அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டில் காலத்துக்குக் காலம் ஆட்சி மாற்றங்கள் நடைபெற்ற போதும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் நடைபெறவில்லை. ஆட்சி செய்கின்ற எந்தக் கட்சியிலும் இதுபற்றிச் சிந்திக்கக் கூடிய சிந்தனையாளர்களை காணக் கிடைப்பதில்லை. எனவே சிவில் சமூகம் இந்த இடத்தை நிரப்ப முன்வர வேண்டும். முஸ்லிம் சமூகத்திலிருந்தும் இதற்குரியவர்கள் தயார்ப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கென சிவில் சமூகத்தை தயார்ப்படுத்தும் பணி முதலில் தன்னிலிருந்து தொடங்க வேண்டும். பின்னர் குடும்பம், சமூகம் என அது விரிந்து செல்ல வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில் தேசிய ஷூறா சபையின் உபதலைவர் ரீஸா யஹ்யா, கலந்துரையாடலுக்கும் ஆய்வுக்குமான நிலையத்தின் பணிப்பாளர் சிராஜ் மஷ்ஹூர் ஆகியோரும் வளவாளராக்க் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## சுனாமி வீட்டுத்... (01 ம் பக்கத் தொடர்)

பீ. வணிகசிங்க கருத்து ஊடகங்களில் தெரிவித்திருந்தார். இதனடிப்படையில் கடந்த 8 வருடங்களுக்கு முன் சவூதி அரேபியாவின் நிதியில் முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்களின் முயற்சியினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த 500 வீடுகளையும் டிசம்பர் 31க்கு முன்னர் பகிர்ந்தளிக்கும்படி பாராளுமன்ற பிரதிநிதிகள், பொதுநிர்வாக அமைச்சர் ஜனாதிபதி, பிரதமர் சவூதி அரசாங்கம் போன்றோரிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வாவின் தீர்ப்பின் படி, அம்பாறை மாவட்டத்தில் உள்ள மூவின சனத்தொகையின் இன விகிதாசாரத்திற்கேற்ப இந்த 500 வீடுகளும் வீடற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். இதன்படி அம்பாறை மாவட்ட இன விகிதாசாரத்துக்கேற்ப முஸ்லிம்களுக்கு 250 வீடுகளும், சிங்களவர்களுக்கு 200 வீடுகளும், தமிழர்களுக்கு 50 வீடுகளும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தீகவாபி ஊடகவே இவ் வீடுகளுக்குச் செல்லும் பாதை உள்ளதால் தீகவாபி பௌத்த குருக்கள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

எவர்கள் தடுத்தாலும் உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி ஆகக்குறைந்தது 250 வீடுகளாவது முஸ்லிம்களுக்குக் கிடைக்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனாலும் இவ் வீடுகளில் அம்பாறை மாவட்ட மூவின மக்களையும் குடியேற்றுவதை அரசாங்க அதிபர் தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்வதாக தெரியவருகிறது.

அதேபோல மருதமுனை மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத் திட்டத்திலும் 65 வீடுகள் இன்னமும் மக்கள் பாவனைக்கு விடப்படாது பாழடைந்து கிடப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அரசியலமைப்பில்... (01 ம் பக்கத் தொடர்)

ஆதரவு வழங்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அழைப்பும் விடுத்திருந்தார்.

இந்த நிலையில், புதிய அரசியலமைப்பின் ஊடாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்பட மாட்டாதென்றும் ஒற்றையாட்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதெனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் மீன்பிடித்துறை அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைக்கப்பட மாட்டாது. அரசாங்கம் ஒருபோதும் சமஷ்டி முறையை அறிமுகம் செய்யாது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தப்பட மாட்டாது. இதை மக்கள் நம்ப வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் மாற்றம் செய்வதற்கான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒற்றையாட்சியின் கீழ் சிறுபான்மை இனத்தவரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான ஒரு தீர்வினை பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக உள்ளதென சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், எமது மக்களுக்கான தீர்வு ஒற்றையாட்சிக்குள் ஏற்பட முடியாது எனவும், புதிய அரசியல் சாசனத்துக்கு பெரும்பான்மையான மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக எமது மக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய விட்டுக் கொடுப்புகளுக்கு இடமளிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கைத் தலைவர்களை சந்தித்த போதெல்லாம் ஒற்றையாட்சிக்குள் எமது மக்களுக்கான தீர்வை எட்ட முடியாது என தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்கின்ற தீர்வே நிரந்தரமானதாக இருக்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின்... (01 ம் பக்கத் தொடர்)

இந்த வாரப் பிரகடனத்தின் முக்கிய நோக்கம் நாட்டின் ஐக்கியம், சமாதானம், சகோதரத்துவம், அன்பு போன்றவற்றினூடாக மதத்தால், மொழியால் கலாச்சாரத்தால் வேறுபட்ட சமூகத்தினரிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதேயாகும்.

ஒற்றுமை, பலம், சுபீட்சம் என்பவற்றுடன் கூடிய ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப இது நல்ல அத்திவாரம் என்று தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி குறிப்பிட்டுள்ளார்.

## புதிய அரசியலமைப்பு... (01 ம் பக்கத் தொடர்)

முஸ்லிம்களுக்கான தீர்வுகள் தொடர்பில் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதை முஸ்லிம் சமூகத்துக்கு வெளியிடாமல் மறைத்து வருகிறார்கள். இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு தலைமை தாங்குகின்ற அகில இலங்கை ஜம்மியதுல் உலமா, தேசிய ஷூறா சபை, ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் ஆகிய அமைப்புக்கள் இணைந்தோ தனியாகவோ கூட ஒரு தீர்வுப் பொதியை முன்வைக்க வில்லை.

இந்த நிலையில் புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்படும் பொழுது முஸ்லிம்களது பிரச்சினைகளுக்கான யாப்பு ரீதியான தீர்வுகள் முன்வைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அருகிவருகின்றன.

முஸ்லிம் சமூகத்தலைமைகள் அவசரமாக ஒன்றுகூடி பொதுவானதொரு தீர்வுத் திட்டத்தை வரைந்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை வழிப்படுத்துவது, காலத்துக்குக் காலம் இனமோதல்கள் வரும்போது மட்டும் அரசியல்வாதிகளை நாடுவதனை விட உசிதமானதாகும்.

## அதிகாரத்தில்... (07 ம் பக்கத் தொடர்)

உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே 19 ஆம் திருத்தத்தில் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் மாத்திரம் மாற்றக்கூடிய விடயங்களை உட்புகுத்தினார்கள்.

19 ஆம் திருத்தம் எதிர்பார்க்கக் கூடிய முழு மையானதொரு ஜனநாயக சூழலை ஏற்படுத்தக் கூடிய மாற்றமாக அது நிகழவில்லை. சர்வஜன வாக்கெடுப்பொன்றிற்குச் சென்று யாப்பு எதிர்ப் பார்க்கப்பட்ட வகையில் மாற்றப்பட முடியும் என்பது யாப்பின் ஷரத்தாக உள்ளது. எனவே சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்வதாக இருந்தால் அதுவொரு முழுமையான யாப்பாகத் தான் இருக்கும்.

- **நல்லாட்சிக்கான தேசிய முன்னணி புதிய அரசியலமைப்பில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது?**

அரசியலமைப்பு மாற்றப்பணி தற்பொழுது 3 கட்டமாக நடைபெற்றுக் கொண்டுள்ளது. பொது மக்களின் கருத்தறியும் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. அவர்கள் மாவட்ட ரீதியில் சென்று கருத்துக்களை பெற்று வந்தார்கள். அதில் நாம் சிவில் சமூக செயற்பாட்டாளர்களையும் மக்களையும் விழிப்படையச் செய்தோம். இதன் மூலம் பல விடயங்கள் இக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் பாராளுமன்ற மட்டத்தில் 6 உப குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு அதில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளார்கள். தற்பொழுது அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளார்கள்.

இக்குழுக்கள் ஒவ்வொன்றிலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்துள்ளார்கள். ஆனால் நாம் பாராளுமன்றத்தை பிரநிதித்துவப்படுத்தும் கட்சியாக இல்லாததனால் அதில் எமக்கு எவ்வித பங்களிப்பும் செய்ய முடியவில்லை. தற்பொழுது பாராளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டு ஜனவரி 09ம் திகதி இடைக்கால வரைபு முன்வைக்கப்படவுள்ளது.

எனவே இவ்வரைபை வைத்து 3 நாள் விவாதம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மக்கள் கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பங்களும் உள்ளன. எதிர்பார்க்கப்படுகின்ற அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்காக முயற்சித்து வருகின்ற பல்வேறு தரப்பினர்களோடும் கலந்துரையாடல்களை நடாத்தி, எமது கருத்துக்களை அவர்களிடம் முன்வைத்துள்ளோம்.

- **எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் புதிய தேர்தல் எல்லை நிர்ணய முறையில் நடாத்தப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளனவா?**

வட்டார முறையும் விகிதாசார முறையும் கலந்த தேர்தல் முறையிலேயே தற்போதைய தேர்தல் சட்டத்தின் படி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறலாம். ஏற்கனவே உள்ள விகிதாசார முறையில் தேர்தல் நடாத்தப்படுவதாக இருந்தால் அது பாராளுமன்றில் மீண்டும் ஒரு பிரேரணையாக முன்வைக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட வேண்டும்.

தற்போதைய தேர்தல் சட்டத்தின் படி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடாத்தப்படுவதாக இருந்தால் கடந்த அரசாங்கத்தில் சட்ட மாக்கப்பட்ட கலப்புமுறையிலேயே தேர்தல் நடைபெற வேண்டும். பாராளுமன்றத்தில் உள்ள கட்சித் தலைவர்கள் தேர்தல் முறை சம்பந்தமாக தீர்மானிப்பதாகவும் சொல்லப்படுகிறது. எது எப்படியிருந்தாலும் சட்டத்தின் அடிப்படையில் நடத்துவதாக இருந்தால் கலப்பு முறையாகவே அது இருக்கும்.

- **கடந்த ஆட்சிக்காலத்தைப் போன்றே தற்பொழுது நாட்டில் இனவாதம் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. நீதியமைச்சர் விஜேதாசவின் செயற்பாடுகள் அதன் அண்மைய வெளிப்பாடாக உள்ளது. இந்நகர்வுகள் முஸ்லிம்களின் எதிர்காலத்திற்கு எவ்வாறான பாதகங்களை எற்படுத்தும்?**

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இங்கு பல முன்னேற்றமான விடயங்கள் இருந்தபோதிலும் கூட இனவாதம் என்பதும் இனவாதத்தை அரசியலுக்காக பயன்படுத்துவது என்பதும் எல்லா காலத்திலும் இருந்து வந்துள்ளது. அதனுடைய விளைவுகளே நாம் நாட்டில் கண்ட யுத்தமும் இன முரண்பாடுகளும் வன்முறைகளுமாகும். ஆனாலும் நாம் இன்னும் கடந்த காலத்தை வைத்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பது துரதிஷ்டமானது.

ஆனால் காலத்துக்குக் காலம் எழுச்சி பெற்று வருகின்ற இனவாத சக்திகள் அரசியல் ரீதியாக இனவாதத்தை ஊட்டி வளர்க்கின்ற அரசியல்வாதிகள் இந் நாட்டில் நீடித்ததில்லை. அதுவே யதார்த்தம். மக்கள் அவர்களை நிராகரித்திருக்கிறார்கள். கடந்த அரசாங்கத்தின் அனுசரணையுடன் செயற்பட்ட பொதுபல சேனா அமைப்பை மக்கள் தேர்தலில் நிராகரித்தார்கள். விஜேதாச ராஜபக்ஷ ஒரு சிரேஷ்ட அமைச்சராக இருந்து கொண்டு ஏதோவொரு அரசியல் நோக்கத்திற்காக மக்களால் நிராகரிக்கப்பட்ட சக்திகளை வலுவூட்டிக் கொண்டிருக்கிறார். அது அவரின் எதிர்கால அரசியலுக்கு பாதகமான விடயமாகும். அதிகாரத்திலுள்ளவர்களை மாற்றி விடுவதால் உண்மையான மாற்றத்தை கொண்டு வர முடியாது. அதையும் தாண்டிய ஏற்பாடுகள் யாப்பின் மூலம் கொண்டு வரப்பட வேண்டும்.

## மாகொல.... (11 ம் பக்கத் தொடர்)

**எஸ்.எம். உஸ்மான்**
விடுதி அதிபர்



இரண்டு மாதங்களுக்கு முன்தான் இங்கு வந்தேன். நான் இங்கு வந்தவுடன் முழுக்க முழுக்க முஸ்லிம்களே இந்த முதியோர் இல்லத்தில் இருக்கிறார்கள் என்று அறிந்து கொண்டேன். இங்குள்ள முதியோர்கள் அனைவரும் பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்கள் அல்லர். இங்குள்ள பெண்களில் அதிகமானோர் திருமணம் முடிக்காதவர்கள். அவர்களைப் பொறுத்த வரை இப்படியான முதியோர் இல்லம் தேவையான ஒன்றாகவே இருக்கின்றது.

எனக்கு இங்கு ஒப்படைக்கப்பட்ட முதலாவது வேலை இங்கு வசிக்கும் முதியோர்களை மார்க்க ரீதியாக வழிகாட்ட வேண்டும் என்பதாகும். இந்த வேலையை தற்போது சிறப்பாக செய்து வருகின்றேன் என்ற திருப்தி எனக்கு காணப்படுகின்றது. இங்குள்ள முதியோர்களிடம் தொழுவதற்கான ஆர்வத்தை நான் ஏற்படுத்தியுள்ளேன். அதிகாலை 4.30 மணிக்கு அவர்கள் எழுந்து சுபஹ் அதான் சொல்லி தொழுகை நடாத்துவதற்காக என்னை அழைப்பார்கள். அதே போன்று குர்ஆன் ஓதுவதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றார்கள். நான் அவர்களுக்கு மரணம் தொடர்பாக அதிகம் ஞாபகப்படுத்துவதுதான் இதற்கான காரணமாகும்.

**வைத்தியர் திருமதி. வித்தானராச்சி**

நான் இங்கு வாரத்திற்கு ஒருமுறை வந்து முதியோர்களைப் ,பரிசோதிக்கின்றேன். இவ்வாறு முதியோர் இல்லத்திற்கு வந்து இங்குள்ள வயோதிபர்களுக்கு சேவை செய்வதை பாக்கியமாக கருதுகின்றேன். இங்கு நான் பரிசோதிக்கும் முதியோர்கள் என்னோடு மனம் விட்டுப் பேசுகின்றனர். அவர்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் உள ரீதியாக சோர்வடைந்தவர்களாகவே இருக்கின்றனர். எனவே நான் அவர்களுக்கு உள ரீதியாக உற்சாகமூட்டுகின்றேன். நான் அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கும்போது மிகவுமே சந்தோஷமடைகின்றனர். நான் இங்கு வருவதற்காக நிர்வாகம் பணம் தந்தாலும் நான் அதனை எடுப்பதில்லை. இதனை நான் ஒரு பாக்கியமாகக் கருதியே இங்கு வருகின்றேன்.

**டீ.கே. பூஸோ (பதுளை) வயது - 60**

நான் இங்கு வந்து 02 வருடங்களாகின்றன. எனக்கு 02 பிள்ளைகள் இருக்கின்றார்கள். நான் ஆட்டோ சாரதியாக நீண்ட காலம் இருந்தேன். எனது மனைவி என்னை விவாகரத்து செய்து விட்டார். என்னைக் கவனித்துக் கொள்வதற்கு யாருமில்லை. மாதத்திற்கு ஒருமுறை பிள்ளைகள் இங்கு வந்து பார்த்து விட்டுச் செல்கின்றார்கள்.

**ஏ.ஆர்.எம். ரிஸீன் (காலி) வயது - 80**

எனது மனைவி மௌத்தாகி விட்டார். எனக்கு 02 பிள்ளைகள் உள்ளனர். நான் இங்கு வந்து 03 வருடங்களாகின்றன. எனது 02 ஆண் பிள்ளைகளும் வியாபாரம் செய்கின்றனர். நானும் ஒரு காலத்தில் வியாபாரம் செய்தவன்தான். கொழும்பில் எனது தந்தையின் நகைக்கடையில் சிறிது காலம் வேலை செய்திருக்கின்றேன். அதன் பின் தட்டெழுத்தாளராக வேலை செய்தேன். எனது குடும்பம் என்னை இங்கு சேர்த்து விட்டனர். அவர்களுக்கு என்னைக் கவனிப்பதற்கு நேரமில்லை. நானும் அதனைப் பொருத்திக் கொண்டு இங்கு இருக்கின்றேன்.

**உம்மு நோனா (கொழும்பு) வயது - 65**



எனக்கு யாரும் இல்லை. உறவு என்று சொல்லிக் கொள்ள நாநா மாத்திரமே இருந்தார். அவரும் இப்போது மரணித்து விட்டார். நான் திருமணம் முடிக்கவில்லை. வறுமைதான் அதற்குக் காரணம். எனது நாநாவின் மகள் என்னை இங்கு சேர்த்து விட்டார். இங்கு வந்து 04 வருடங்களாகின்றன. இங்கு வருவதற்கு முதல் நானாவின் வீட்டில்தான் இருந்தேன். அந்த வீடு மிகவும் சிறியதாக இருந்ததால் என்னை இங்கு விட்டுள்ளனர்.

**பீபி தூபா (நாவலபிட்டிய) வயது - 76**

நான் இங்கு வந்து 1½ வருடங்களாகின்றன. எனக்கு கணவர், பிள்ளைகள் இருந்தும் ஒருவருமே என்னைப் பார்ப்பதில்லை. என் மீது யாருக்குமே அக்கறை இல்லை. எனது சகோதரியின் மகன்தான் என்னைக் கவனிக்கின்றார். எனக்கு 03 பெண் பிள்ளைகள் உள்ளனர். இருந்தும் பயனேதுமில்லை. எனது கணவர் சவூதியில் வேலை செய்கிறார். அவர் என்னை தலாக் செய்து விட்டார். எனக்கு பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்களுடன் கொஞ்சி விளையாடுவதற்கான பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. என்னைப் பார்க்க அல்லாஹ் இருக்கிறான். அவன் மாத்திரமே போதுமானவன்.

## நெக்கடியில்.... (04 ம் பக்கத் தொடர்)

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன. இன்று பெரும்பாலான நாடுகளில் இப்பிரச்சினையே தலைவிரித்தாடுகிறது.

அன்று அரசாங்கத்தின் நிதி நிறுவனங்கள் மிகச் சிறந்த முறையில் இயங்குகின்ற முறைகளைக் காண முடிந்தது. இந்நிறுவனங்கள் தனியார் பிரிவுகளுடன் சிறந்த முறையில் போட்டி போட்டன. இந்நிலையை இன்னும் மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளது. ஆனாலும் அரசாங்கத்தின் கொள்கை அதுவல்ல. பொதுச் சொத்துக்களை விற்பதே அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது.

தற்பொழுது இந்நாடு பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்குள் சிக்குண்டுள் ளது. சகல விடயங்களிலும் மக்கள் பாரிய அழுத்தங்களுக்கு உட்பட்டிருப்பதைக் காண முடிகிறது. சகல அம்சங்களிலும் கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டு வருகிறது. இது பொருளாதாரத்தில் ஆரோக்கியமான நிலையொன்றல்ல. இதனால் முதலீடுகளும் குறைய ஆரம்பிக்கிறது. நாட்டின் இத்தகைய நெருக்கடிகளை தணிக்காத போது அது மென்மேலும் உக்கிரமடைந்து செல்வதை தவிர்க்க முடியாது போகும்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - | 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - | 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அரபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - | 4700.00 |
| | | | | | | சீனா | - | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0112 691258, People's bank a/c: 156100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்

# உடுநுவர ஹந்தெஸ்ஸ அல்-மனார் தேசிய பாடசாலை

## (1892 - 2015)

''இலங்கை முஸ்லிம்களின் நவீன கல்வி வரலாறு பற்றி முழுமையான வரலாறு இல்லை என்பது பெரியதொரு குறைபாடு. இருந்தாலும் மாகாண, மாவட்ட ரீதியிலான கல்வி வரலாறு எழுதும் முயற்சிகள் அவ்வப்போது இடம்பெறுவது வரவேற்கத்தக்கது. அந்த வரிசையில் அல்-மனார் தேசிய பாடசாலை என்ற இந்நூல் முன்னுதாரணமாகக் கொள்ளக்கூடியது'' என்ற பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களின் அணிந்துரை உடுநுவர ஹந்தெஸ்ஸ அல்-மனார் தேசிய பாடசாலை என்ற நூலின் கனதியை அச்சொட்டாகப் பிரதிபலிக்கின்றது.

அல்மனாரை உட்படுத்தியதாக மாத்திரமல்லாது முழு உடுநுவரயின் கல்வி வரலாற்றையும் வரலாற்றுக் குறிப்புகளையும் இந்நூல் தருகின்றமை விசேட அம்சமாகும். குறிப்பாக உடுநுவரயிலுள்ள பிற முஸ்லிம் பாடசாலை தொடர்பான சுருக்கமான வரலாறும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. உடுநுவர பட்டுப்பிட்டியைச் சேர்ந்த எஸ்.எல்.எம். பரீத் ஆசிரியர் இந்நூலை ஆக்குவதற்கு மிகத் தகுதியான ஒருவர். ஏனெனில் 36 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளதோடு அல்-மனாரின் உப அதிபராகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் அவர் பதவி வகித்துள்ளார். பாடசாலையின் கல்வி மற்றும் பௌதிக வள விருத்திக்கும், தர உயர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பங்கை யாரும் மறக்க முடியாது. இவரது வரலாற்று ஆய்வு ஈடுபாட்டிற்கும் அல்-மனார் மீது இவர் கொண்டுள்ள பற்றுக்கும் சான்றாக இந்நூல் திகழ்கின்றது.

123 வருடங்களுக்கு முன் 73 மாணவர்களுடனும் தலைமை ஆசிரியருடனும் மாத்திரம் துவங்கப் பட்ட இப்பாடசாலை இன்று ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர் களோடும் நூற்றுக்கணக்கான ஆசிரியர் களோடும் வீறுநடை போட்டு இப்பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பணியாற்றுகின்ற ஒரு தேசிய பாடசாலையின் வரலாறு தொகுக்கப்பட்டுள்ளமையானது நிச்சயம் பாராட்டத்தக்க முயற்சியே. அல்-மனாரைப் பொறுத்தவரையில் இப்பாடசாலை தொடர்பான ஆவணங்கள் தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருவதன் காரணத்தினாலேயே அதன் வரலாற்றை ஒரு நூல் வடிவில் ஆக்க முடிந்தது என முன்னுரையில் குறிப்பிடுகின்ற நூலாசிரியர், உடுநுவரயிலுள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் மட்டுமின்றிப் பிரதான சிங்களப் பாடசாலைகளின் வரலாறு பற்றியும் ஊடகங்களில் அவ்வப்போது தெரிவிக்கப்படும் தவறான கருத்துக்களே இந்நூலை எழுதத் தூண்டிய பிரதான காரணி எனவும் குறிப்பிடுகின்றார்.

337 பக்கங்களைக் கொண்ட ''உடுநுவர ஹந்தெஸ்ஸ அல்-மனார் தேசிய பாடசாலை'' எனும் இந்நூலானது 4 பிரதான அத்தியாயங்களையும் 2 பின்னிணைப்புகளையும் உள்ளடக்கியதாக எழுதப்பட்டுள்ளது. முதலாவது அத்தியாயம் உடுநுவர பற்றிய அழகானதோர் அறிமுகத்தைத் தருகின்றது. உடுநுவர உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் பாரம்பரிய கலைக் கலாசார முதுசங்களைக் கொண்ட ஒரு பிரதேசம் என்ற வகையில் அங்கு காணப்படும் உடுநுவர கெட்டக்கும்புர மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளமையானது வரவேற்கத்தக்கது.

அதேபோன்று பௌத்த விகாரைகளோடு முஸ்லிம்கள் கொண்டுள்ள தொடர்புகளும் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ள மையானது விசேட அம்சமாகும்.




நூலின் இரண்டாவது அத்தியாயம் இலங்கையின் கல்வி நிலை தொடர்பாக விரிவாக ஆராய்கின்றது. ஐரோப்பியர் காலம், போர்த்துக்கேயர் காலம், ஆங்கிலேயர் காலம், இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலை, இலங்கையில் இஸ்லாமியக் கல்வி, உடுநுவர பிரதேச முஸ்லிம்கள், உடுநுவர முஸ்லிம்களின் கல்வி நிலை போன்ற பல விடயங்களை இவ்வத்தியாயம் பேசிச் செல்கின்றது.

உடுநுவர பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் தோற்றம் தொடர்பாக 03வது அத்தியாயம் பேசுகின்றது. இதில் முஸ்லிம் பாடசாலைகள் மாத்திரமல் லாது உடுநுவர பிரதேசத்தின் சிங்கள மகளிர் பாடசாலை வரலாறு மற்றும் சிங்கள ஆண்கள் பாடசாலை வரலாறு என்பனவும் இடம்பெற்றுள்ளன. நூலின் இறுதி அத்தியாயம் வளர்ச்சிப் பாதையில் கெட்டக்கும்புர தமிழ்ப் பாடசாலை எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இந்த அத்தியாயத்தில் நூலாசிரியர் மிக விரிவான முறையில் அல்-மனார் தேசிய பாடசாலையின் முழு வரலாற்றையும் ஆராய்ந்திருக்கிறார். இறுதியாக நூலாசிரியர் இரண்டு பின்னிணைப் புகளைச் சேர்த்திருக்கிறார். அவற்றில் உடுநுவரயிலுள்ள பிற முஸ்லிம் பாட சாலைகள் தொடர்பான தகவல்கள், ஹந் தெஸ்ஸ கல்வித் திட்டம் தொடர்பான தகவல்கள் மற்றும் உடு நுவரயில் உயர் கல்வி கற் றோர் விபரம் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

அந்தவகையில் சமூக நிறுவனமான பாடசாலையின் வளர்ச்சி என்பது தனி ஒரு சிலரின் முயற்சியினால் மாத்திர மன்றி பிரதிபலன் பாராது பல தசாப்தங் களாக சமூகத்தின் பல்வேறு தரப்பினரா லும் செய்யப்பட்ட தியாகத்தின் பிரதி பலனே என்பதை பாடசாலை நிர்வாகத் தைப் பொறுப்பேற்கும் தற்கால நிர்வாகி களுக்கு உணர்த்துமாயின் பல்லாண்டு களாக அரும்பாடுபட்டு உருவாக்கிய இந்நூலின் வெற்றிக்கு அது ஒன்றே போதுமானது என்று முன்னுரையில் நூலாசிரியர் பரீத் ஆசிரியர் குறிப்பிட்ட கருத்தை இறுதியாக இங்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

## சிந்திப்பதற்காக...



எல்லா நிகழ்வுகள் போலவே இதுவும் மறந்துபோய்விடும். இயல்புவாழ்க்கை மெல்ல மெல்லத் திரும்பும். இன்னுமொரு நிகழ்வு வரும்வரை எமது போராட்டத்திற்கு ஓய்வு விட்டு ஒதுங்கிக் கொள்வோம்....

சம்பவங்களாலும் செய்திகளாலும் இயக்கப்படுகிற சமூகமல்லவா நாம்? படிப்பினை பெறுவதற்கும், திட்டமிட்டு செயற்படுவதற்கும் எமக்கு அவகாச மில்லையே!

வெறும் சம்பவமாகப் பார்த்தால், இது ஒரு இரட்டைக் கொலை. அவ்வளவுதான். ஆனால் இந்த சம்பவம் வெளிப்படுத்திச் சென்றுள்ள அபாய சமிக்ஞைகள் ஏராளம்.

எமது கொள்கைச் சண்டையெல்லாம் ஒரு பக்கம் மூட்டை கட்டிவத்துவிட்டு திறந்த மனதோடு, கூட்டாக எமது பிரச்ச னைகளை அணுகவேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறோம் என்பதை இன்னுமா புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறோம்?

இனியும் காலம் தாமதிக்காமல் ஒரு கட்டுக்கோப்புள்ள சமூக அமைப்பை உருவாக்குவதற்கான நேர்மையும், அர்ப்பணமுள்ள கூட்டு சிவில் தலைமைத்துவத்தை நிறுவியாக வேண்டியிருக்கிறது.

- றமீஸ் அப்துல் ஸலாம் (நளீமி)

---

# இங்கிருந்த அழகுமிக்க நகரம் எங்கே போயிற்று?

'தூரத்தே உள்ள ஒரு மலை முகட்டின் உச்சியிலிருந்து சூரிய கிரணங்கள் இந்த நிசப்தமான பசுமை நிறைந்த பிரதே சத்தில் ஊடுருவிப் பரவுவதைக் காண்கி றேன். இது பனிமூடிய பாரதம். சிலோ னின் மத்திய பகுதியில் அதி அற்புதமான நிசப்தத்தைக் கொண்ட அந்த இடத்தில் தான் ஒரு காலத்தில் பிரமிப்பூட்டும் அனு ராதபுரம் இருந்தது. இந்த நகரம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்து போனது.' மேகமூட்டத்துடன் இருந்த அந்தக் காலைப்பொழுதில் புயல் வரு வது போன்ற நிலை. மேற்கே பிரான்ஸ் நாட்டில் அதே சமயம் நள்ளிரவாக இருக் கையில் இங்கு காலைக் கதிரவன் தனது வண்ண ஜாலங்களுடன் உதிக்கின்றான்.

'இங்கிருந்த அழகு மிக்க நகரம் எங்கே போயிற்று? ஒரு மாலுமி பாய் மரத்தண்டில் நின்று கடலை நாற்புறமும் நோக்குவது போன்று நானும் சுற்றிச் சுற் றிப் பார்க்கிறேன்; மனிதன் இருந்த சுவடு களே காணோம்! காண்பதெல்லாம் மரங் கள், மரங்கள், மரங்கள் மட்டுமே! தாழ் வான பகுதிகளில் ஆங்காங்கே நீர் நிறைந்த சிறிதும் பெரிதுமான ஏரிகள்; அவற்றில் முதலைகள்; நீர் அருந்த வரும் யானைக் கூட்டங்கள்; கானகம் முழு வதும் நிறைந்திருக்கும் சப்தம் அந்த அதி காலைப் பொழுதில் சுறுசுறுப்பாக அங்கு மிங்கும் பறக்கும் பறவைகள் எழுப்பும் வித விதமான ஒலிகளே! எனினும் அற்புத நகரத்தின் அடையாளங்களே இல்லையே!'

'சாதுக்களான புத்தபிட்சுக்கள் தற் போது இந்த அழிவிடங்களிலிருந்து முக் கியமானவற்றை - பழைய கடவுள் சிலை களின் பகுதிகள் உள்ளிட்டவை- சேக ரித்து அவற்றை அக் கோயில்களில் அடுக்கி வைத்துள்ளனர். இவற்றை அவர் கள் மலர்களால் அலங்கரித்து, அணையா விளக்குகளை அமைத்து, தினமும் வழிபடுகின்றனர்.

'அவர்களது பார்வையில் அனுரா தபுரம் இன்னும் பண்டைய புனித நகர மாகவே இருக்கிறது. பல்வேறு இடங்க ளிலிருந்தும் யாத்திரிகர்கள் வருகை புரிந்து மரங்களினடியில் அமர்ந்து தியா னமும் பிரார்த்தனையும் செய்கின்றனர்.

'பெரும் கோயில்களின் வெளிப் புறங்களில் பெரும் தூண்களும் சல




வைக்கல் அமைப்புகளும் உடைந்து சித றிக் கிடக்கின்றன. அவை கோயில்களின் பிரம்மாண்டத்தைத் தெளிவாகக் காட்டு கின்றன. கருவறையை அடைய பல பிரகாரங்களைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. ஒவ்வொரு பிரகாரத் தின் வாயில்களும் காவல் தெய்வங்களால் காக்கப்பட்டிருந்தன. ஆயின், தற்போது எல்லாமே உடைந்து போன கற்குவியல் களாக இருந்தன.'

ஜீலியன் வியாத் ஒரு பிரெஞ்சு நாவ லாசிரியர். இவரது புனைபெயர் பியர் லோட்டி. பிரெஞ்சு கடற்படையில் பணி யாற்றியவர். 1899 இல் இங்கு வந்து, இரண்டு ஆண்டுகள் இந்தியாவெங்கும் சுற்றித் திரிந்தார். இலங்கையையும் இந்தி யா என்றே தவறாக குறிப்பிடுகிறார். அனுராதபுரத்தில் தொடங்கிய இவரது பயணம் குறித்த தொடக்க வரிகளே இவை.

Inde (Sans les Anglais) என்ற இவரது பிரெஞ்சு நூல் 'ஆங்கிலேயர்கள் இல்லாத இந்தியா' என்ற பெயரில் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளது. சி.எஸ் வெங் டேஸ்வரன், ஒரு நாவலை வாசிக்கிற விறுவிறுப்புடன் அழகிய மொழிநடை யில் தமிழாக்கியுள்ளார். இதை சந்தியா பதிப்பகம்2013இல்வெளியிட்டிருக்கிறது.

மனதை ஈர்க்கிற காட்சிகளும் மனி தர்களும் நிறைந்திருக்கும், வாசிப்புச் சுவை மிக்க அழகிய நூல்.

- சிராஜ் மஷ்ஹூர்

### ஒரு சொட்டுக் கண்ணீரும் ஓராயிரம் பிரார்த்தனைகளும்

அலப்போவில் அலைகிறது
மனசு
கலைந்த கூடாரமாய்
தொலைந்து போனது மனிதம்

பேச்சிழந்தோம்
மூச்சிழந்து மூர்ச்சையானோம்.

நாகரிகத்தின் தொட்டிலில்
வன்கொடுமையின் காட்டுக்
கூச்சல்.

மீண்டு வருகிறது
முள்ளிவாய்க்கால் நினைவுகள்

[illegible]
தாங்குமா இந்தப் பூமி?

- சிராஜ் மஷ்ஹூர்



# உலகத்துக்காக அழுது கொள்

இந்த உலகத்துக்காக அழுவதைத்
தவிர
உன் சுயநலத்துக்காக அழுது
கொண்டிருக்காதே
நீ வாழ்வின் ஒரு புள்ளியே.

பல குரூரமானவர்கள்
இப்பூமியில்
விதைக்கப்பட்டிருக்கிறார்கள்.
அவர்கள் மலையளவு வலியையும்
நதிகளைப் போல் கண்ணீரையும்
குருதியையும்
சிந்த வைக்கின்றனர்.

உனக்கு செயற்படுவதற்கு
சரியான சிந்தனையே
தேவைப்படுகிறது.
நடந்ததையே எண்ணிக்
கொண்டிருக்காதே
முயற்சித்து முன்னேறு.

இங்கு எமக்கெதுவுமேயில்லை
உன் மரணம் நிகழும் வரை
உலகம் இருந்து கொண்டேயிருக்கும்.

-ஹியாம் நெளர்
தமிழில்- நஸார் இஜாஸ்

ஹியாம் நெபளர் மனித உரிமை வழக்கறிஞராகவும் ஊடக வியலாளராகவும் சூழலியலாளராகவும் செயற்பட்டு வருகின்றார். தனது கட்டி ளமைப்பருவத்தின் ஆரம்பத்திலிருந்தே பலஸ்தீன் தேசத்தின் நீதிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தன்னைப் போ ராட்டத்தில் ஈடுபடுத்தி வருபவர். ஊட கத்துறை, சட்டத்துறை என்பவற்றோடு கட்டட நிர்மாணத்துறை வடிமைப்பு போன்றவற்றிலும் தேர்ந்தவர்.

இவருடைய கட்டுரைகளுணும் கவி தைகளும் அரபு, இத்தாலி, ஜேர்மன் ஹிந்தி போன்ற மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை அத்தனையும் மொழி பெயர்ப்புக்கள் என சொல்வதை விட வலிபெயர்ப்புக்கள் எனச் சொல்வதே பொருத்தமானதாக இருக்கும்.

எழுந்து நிற்பவனே சிலவேளை விழுந்தும் விடுகிறான், விழுந்தே கிடப்பவன் அல்ல.

விழுந்து விடுவோம் என்றஞ்சி எழுந்து நிற்க மறுப்போர் சிலர் தம்மை சாமர்தியர் என்றெண்ணிக் களிப்புறுவர்.

விழாமல் இருப்பதல்ல, விழுந்த போதும் எழுந்து நிற்பதே சாமர்தியம்.



- இனாமுல்லாஹ் மஸிஹூதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

## இங்கிலாந்து வீரர்கள் வெட்கப்பட வேண்டும்

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரை 4:0 என்ற கணக்கில் தோற்றமைக்கு இங்கிலாந்து கிரிக்கட் வீரர்கள் வெட்கப்பட வேண்டும் என பிரபல கிரிக்கட் விமர்சகர் பொப் வில்லிஸ் சாடியுள்ளார். அலெஸ்டயர் குக் தலைமையிலான இங்கிலாந்து அணி எட்டு தினங்களுக்குள் இரண்டாவது இன்னிங்ஸ் தோல்வியை



சந்தித்துள்ளமை இங்கிலாந்து ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிலையிலேயே பொப் வில்லிஸின் குறித்த விமர்சனம் அமைந்துள்ளது.

ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 103 ஓட்டங்களுக்கு எத்தகைய விக்கட்டுகளையும் இழக்காமல் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த நிலையில் 207 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. அவ்வணியின் இறுதி ஆறு விக்கட்டுகளும் 15 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹமீட் அல் ஹூஸைனியின் ஜனாதிபதிக் கிண்ணம்

### ஜனவரி 7இல் ஆரம்பம்




ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பான 80களின் குழு ஏற்பாடு செய்துள்ள ஜனாதிபதிக் கிண்ணம் ஜனவரி மாதம் 7ம் திகதி கொழும்பு Racecourse விளையாட்டு மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாக உள்ளது. இந்த பிரமாண்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆரம்பப் போட்டி, அரையிறுதிப் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டி என்பன Racecourse விளையாட்டு மைதானத்தில் இடம்பெற உள்ளதுடன் ஏனைய போட்டிகள் சிட்டி லீக் மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

உள்ளூர் பாடசாலைகளுக்கிடையிலான அழைப்புக் கிண்ணம் என்ற பெயரில் இடம்பெற்று வந்த இக்கால்பந்தாட்டத் தொடர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியோடு 2017ம் ஆண்டுக்கான தொடரை ஜனாதிபதிக் கிண்ணம் என்ற பெயரில் நடாத்த இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தொடரில் ஹமீட் அல் ஹுஸைனி, ஆனந்தா, டீ. எஸ். சேனாநாயக்க, இசிப்பத்தான, நாலந்தா, ரோயல், செண்ட் பெனடிக்ஸ், கம்பளை ஸாஹிரா ஆகிய கல்லூரிகள் உள்ளிட்ட நாட்டின் தலைசிறந்த 20 கல்லூரிகளின் கால்பந்தாட்ட அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அணியில் இடம் பிடிப்பது கடினம்




மீண்டும் டெஸ்ட் போட்டிகளுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பிடிப்பது கடினமான விடயம் என அவ்வணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார். அதிரடிக்குப் பெயர்போன கிறிஸ் கெய்ல் டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் 103 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளதோடு இரண்டு முச்சதங்கள் உள்ளடங்கலாக 7214 ஓட்டங்களை விளாசியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் வீரர் ஒருவர் சிறப்பாக விளையாடுவதற்கு சிறந்த உடற்தகுதியோடு உறுதி மற்றும் அவதானம் என்பன முக்கியமானவை எனவும், தான் நீண்ட காலமாக டெஸ்ட் போட்டிகளில் விளையாடாதிருப்பதால் மீண்டும் அணியில் இடம்பெறுவது சவாலானது எனவும் ஊடகமொன்றுக்கு கெய்ல் கருத்து வெளியிட்டுள்ளார்.

## சாதனைகளுடன் நிலைநாட்டப்பட்ட இரட்டைச் சதம்



பாக்கிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் மெல்போர்ன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாக்கிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அஸ்ஹர் அலி இரட்டைச் சதம் விளாசியதன் மூலம் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

★ ஒரு வருடத்தில் இரண்டு அல்லது அதற்கு மேல் இரட்டைச் சதம் விளாசிய முதலாவது பாக்கிஸ்தான் வீரர். கடந்த ஒக்டோபரில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக 302 ஓட்டங்களை அவர் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

★ அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் போட்டியொன்றில் இரட்டைச் சதம் அடித்த முதலாவது பாகிஸ்தான் வீரர். இதற்கு முன் 1972ஆம் ஆண்டு மஜீத் கான் விளாசிய 158 ஓட்டங்களே பாகிஸ்தான் வீரர் ஒருவரின் அதிகபட்ச ஓட்டமாகப் பதிவாகியிருந்தது.

★ மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இரட்டைச் சதம் அடித்த முதலாவது வெளிநாட்டு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். 2003இல் இந்திய வீரர் ஷெவாக்கின் 195 ஓட்டங்களே இதுவரை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஒருவரின் அதிகபட்ச ஓட்டமாகக் காணப்பட்டது.

★ ஒரு வருடத்தில் இரண்டு அல்லது அதற்கு மேல் இரட்டைச் சதம் விளாசிய 6வது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். இதற்கு முன் ஷெவாக், கிரேம் ஸ்மித், மார்வன் அத்தபத்து, கோர்டன் கிரீனிஜ், கிலென் டியூனர் ஆகியோர் குறித்த மைற்கல்லை எட்டியவர்களாவர்.

★ இரண்டு அணிகளினதும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் சதம் அடித்திருந்தனர் (அஸ்ஹர் அலி, வோர்னர்). 2003இல் ஷெவாக், ஹெய்டன் ஆகியோர் இவ்வாறு சதமடித்திருந்தனர்.



## விருது வழங்கி கௌரவிப்பு

தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்காக சுமார் மூன்று தசாப்த காலமாகப் பங்களிப்பு நல்கிவரும் மதுரங்குளி விருதோடையைச் சேர்ந்தவரும், தினகரன், தினகரன் வாரமஞ்சரி இணையாசிரியருமான மர்லின் மரிக்கார் கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் பொன்னாடை போர்த்தி விருது மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இஸ்லாமிய ஆய்வுக் கழகத்தின் ஏற்பாட்டிலான இம்மாநாடு கழகத்தின் தலைவர் காப்பியக்கோ டொக்டர் ஜின்னா ஷெரிபுதீன் தலைமையில் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த (டிசம்பர் மாதம்) 11, 12, 13 ஆகிய தினங்களில் நடைபெற்றது. மாநாட்டின் நிறைவு நாளான 13 ஆம் திகதி மாநாட்டின் பிரதம அதிதியான கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாட் பத்தியுத்தீன் மர்லின் மரிக்காருக்கு விருது வழங்க ஊடகத்துறை முன்னாள் பிரதியமைச்சர் எம். எச். சேகு இஸ்ஸதீன் பொன்னாடை போர்த்தியதோடு, முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஊடக ஆலாட்சி அதிகாரியுமான ஏ. எச். எம். அஸ்வர் சான்றிதழையும் வழங்கி கௌரவித்தனர். இவ்வைபவத்தில் கிராமிய பொருளாதாரப் பிரதியமைச்சர் எம். எஸ். எஸ். அமீரலி உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அதேநேரம் மர்லின் மரிக்கார், ஏற்கனவே இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம், இலங்கை மருத்துவர்கள் சங்கம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் தேசிய மட்ட விருதுகளை வெற்றி பெற்றவருமாவார். இதேவேளை இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியம், தென் கிழக்கு ஆய்வு மன்றம், புத்தளம் ஒன்லைன் இணைய தள நிறுவனம், அகில இன நல்லுறவு ஒன்றியம், மலையக கலை கலாசார சங்கம் உள்ளிட்ட பல அமைப்புக்களும் இவர் தமிழ் இலக்கிய மற்றும் ஊடகத்துறை மேம்பாட்டுக்கு அளித்துவரும் பங்களிப்பை ஏற்கனவே பாராட்டி கௌரவித்துள்ளன.



தேசத்தை கட்டியெழுப்புவதில் எமது பங்களிப்பு எனும் தொனிப் பொருளிலான செயலமர்வொன்றை றிபாத் கலாச்சார நிலையம் கொழும்பு அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் நடத்தியது. வளவாளர்களாக ராவய பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் விக்டர் ஐவன், தேசிய சூரா சபையின் உப தலைவர் ரீஸா யஹ்யா, CDR நிறுவனத்தின் பணிப்பாளர் சிராஜ் மஷ்ஹூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org